www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

Jude

பக்கம் 20

දිනමුරසු වාරමලර්

பெப்.21–27,1999

ரூபா 12/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 297

# இயக்கப் பகையால் அம்பலமாகும் உண்மைகள்



## பெரம் புதூர் பயங்கரம்

## கடற்பரப்பில் கடும் இழப்பு

## கை ரேகை காதல் ஜோசியம்

www.padippakam.com

# முரசம்

## எம்பிலிப்பிட்டியவும், பொல்கொட வாவியும்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

எம்பிலிப்பிட்டியவில்
மாணவர்களை
படுகொலை செய்ததாக
ஏழு பேருக்கு
தண்டனை கிடைத்துள்ளது!

நீதி தன் கடமையை
செய்துள்ளதை
வரவேற்கிறோம்!

நீதியமைப்புக்களும்
ஒரு பக்கம் சாய்ந்தும்
ஊழலில் தேய்ந்தும்
மக்களது நம்பிக்கைகளை
இழந்து வரும் காலமிது!

எனவே, மேற்படி
தீர்ப்பை
பாராட்டியாக வேண்டும்!

ஐ.தே.கட்சியின்
ஆட்சிக் காலத்தில்
நடந்த கொடூரத்துக்கு
சந்திரிக்கா அம்மையார்
ஆட்சியில்
தண்டனை கிடைத்துள்ளது!

ஐ.தே.கட்சி ஆட்சியில்
காணாமல் போனோர்
விவகாரத்திற்கு
துரிதமான பரிகாரம்!

ஐ.தே.க. ஆட்சியில்
நடைபெற்ற
தேர்தல் முறைகேடுகளுக்கு
விசாரணை ஆணைக்குழு!

ஐ.தே.க. ஆட்சிக்கால
மனிதப் புதைகுழிகள்
பற்றி தகவல் கிடைத்தால்
தாமதமின்றி தோண்டுதல்!

இவ்வாறு
பல்வேறு நடவடிக்கைகளை
பொ.ஐ.முன்னணியும்
ஜனாதிபதி சந்திரிக்காவும்
மேற்கொண்டுள்ளனர்!

சந்திரிக்கா அம்மையார்
நியமித்த விசாரணை
ஆணைக்குழுக்கள்
கடந்த கால படுகொலைகளுக்கு
பலரை குற்றம் சாட்டியுள்ளன!

கடந்த கால தேர்தல்
முறைகேடுகளுக்கு காரணமான
பல அதிகாரிகளை
விசாரணை குழுக்கள்
இனம் காட்டியுள்ளன!

அதனடிப்படையில்
தயக்கமின்றி
நடவடிக்கைகளும்
எடுக்கப்பட்டுள்ளன!

பல சீருடை அதிகாரிகள்
வீட்டுக்கு
அனுப்பப்பட்டுள்ளனர்!

தற்போது நீதிமன்றத்தில்
சீருடை அதிகாரிகள் உட்பட
ஏழுபேருக்கு
எம்பிலிப்பிட்டிய கொலைகளுக்காக
தண்டனை பெற்றுக்
கொடுக்கப்பட்டுள்ளது!

அத்துமீறல்களும்,
அநியாயங்களும்
அம்பலமாகி வருவதும்,
குற்றவாளிகள்
தண்டிக்கப்படுவதும்
வரவேற்கப்பட வேண்டியதே!

அதற்காக
சந்திரிக்கா அம்மையாருக்கு
பாராட்டு தெரிவிப்போம்!
அதே சமயத்தில்
ஐ.தே.க. ஆட்சியில்
வடக்கு-கிழக்கில்
காணாமல் போனோர்
விடயத்தில் மட்டும்
இன்றைய ஆட்சியாளரும்
சந்திரிக்கா அம்மையாரும்
நடவடிக்கை எடுக்கவில்லை!

பொல்கொட வாவியில்
தமிழ் இளைஞர்களை
கொன்று வீசியவர்களை
இன்றைய ஆட்சியாளர்
கைது செய்திருந்தனர்!

அவ்வாறு கைதானவர்களே
கிழக்கில் காணாமல் போனோர்
விவகாரத்திற்கும் பொறுப்பான
அதிகாரிகளாக இருந்தனர்!

ஆயினும், அத்தனை பேரும்
காதும் காதும் வைத்தாற்போல
இன்றைய ஆட்சியாளரால்
விடுதலை செய்யப்பட்டனர்!

சந்திரிக்கா அம்மையார்
பதவிக்கு வந்த சூட்டோடுதான்
பொல்கொட வாவியில்
தமிழர் பிணங்கள் மிதந்தன!

"ஆட்சிக்கு களங்கம்
ஏற்படுத்தும் சதி"
என்றுதான் அப்போது
கூறப்பட்டது!

அது உண்மையானால்
கைதானவர்கள்
விடுதலை செய்யப்பட்டதும்
இன்றுவரை
வழக்கு எதுவும் அவர்கள்மீது
தொடுக்கப்படாததும் ஏன்?

எம்பிலிப்பிட்டியாவில்
காணாமல் போனோர்
விவகாரத்தில் சம்பந்தப்பட்டோரை
நீதிக்கு முன் நிறுத்துவதில்
காட்டிய வேகம்,
பொல்கொட வாவி
விவகாரத்தில் கைதானோர்
விடயத்தில் காண்பிக்கப்படவில்லை!

அவர்கள்மீதும்
வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தால்
இதைவிட கடுமையான
தண்டனை கூட
பெற்றுக் கொடுத்திருக்கலாம்!

தென்னிலங்கை அத்துமீறல்களுக்கு
தண்டனையும்
வடக்கு-கிழக்கு விவகாரங்களில்
அலட்சியமும் காட்டுவது,
ஒரு கண்ணில் வெண்ணெய்யும்
மறு கண்ணில் சுண்ணாம்பும்
தடவுவது போன்றதே!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்



## சிவமும் சக்தியும்

ஓங்கார நாதத்திலேயே அண்டசராசரங்கள் அத்தனையும் பிறந்தன. அதே நாத சஞ்சாரத்திலேயே சூரியனும் சந்திரனும் அனைத்துக் கோள்களும் நட்சத்திரங்களும் விண்ணில் கண்சிமிட்டும் அத்தனை விண்மீன்களும் சுற்றிச் சுழல்கின்றன. இந்தப் பேருண்மையை அன்று வாழ்ந்த மெய்ஞானிகள் உணர்ந்து, இன்றுள்ளவர்களுக்கும் உணர்த்தி அருளினர்.

இன்றுள்ள விஞ்ஞானிகளும் இக்கூற்றை மறுக்க முடியாது. இத்தத்துவம் ஆதியில் சைவ மெய்ஞானிகளால் கண்டறியப்பட்டபோதும், இன்றுள்ள பல்வேறு மார்க்கங்களும் இதனை ஏற்றுக்கொண்டுள்ளன.

ஊனக் கண்களால் கண்டறிய முடியாத மிக மிகச் சிறிய அணுவினுள்-அண்டத்தை ஆக்கவும் ஒரே நொடியில் அழிக்கவும் வல்ல மாபெரும் சக்தி பொதிந்து கிடக்கிறது என்ற உண்மையை உணர்ந்தான், புராதன மனிதன். அந்த அணுவினுள்ளே நேர்மறையான ஒரு துகளை எதிர்மறையான ஒரு துகள் சுற்றிச் சுழன்று வருவதை அந்த மெய்ஞானி கண்டான். இவை இரண்டும் ஒன்று சேரும் போதே அளவிட முடியாத மாபெரும் சக்தி வெளிப்படுகிறது.

இத்தத்துவத்தையே சைவசமயம் சிவமும் சக்தியும் என்று போற்றுகின்றது. இதன் அடிப்படையை வெளிப்படுத்தவே சிவாலயங்களின் வெளிப்புற மதில்களில் சிவப்பும் வெள்ளையுமான கோடுகள் மேலிருந்து கீழாகப் போடப்பட்டுள்ளன.

நேர்மறையான சிவத்தை எதிர்மறையான சக்தி என்றும் வலம்வரும் போது தோன்றாமல் தோன்றும் நாதமே ஓங்காரமாகும்.

மாந்தர்களாகிய நாம் நம்- உள்ளேயே என்றும் ஒலித்துக் கொண்டிருக்கும் அந்த ஓங்கார நாதத்தை உணர்ந்து அனுபவித்தால் அளவற்ற ஆனந்த வெள்ளத்தில் என்றும் அமிழ்ந்து இன்புறலாம். முயற்சித்தால் முழுமையான பலன் பெற்று முக்தியடையலாம். ஞானேந்திரன்.

## மாடிவீட்டை வெறுத்த மாநபி

ஒரு நாள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது வீட்டில் இருந்து வெளியேறி வீதிவழியாகச் சென்று கொண்டிருந்தனர். அப்போது அவ்வழியில் ஓர் உயரமான மாடி வீடு அவர்கள் கண்களுக்குத் தென்பட்டது.

இதைக் கண்ணுற்ற இறை தூதர் அவர்கள் "இது யாருடைய கட்டடம்?" என்று தன்னுடன் வந்த ஸஹாபாக்களைப் பார்த்து கேட்டார்கள். "அது இன்ன அன்ஸாரியுடைய வீடு!" என பதில் கிடைத்தது.

பின் ஒருநாள் பெருமானாரிடம் சென்ற அந்த வீட்டுக்கார அன்ஸாரி, அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு ஸலாம் கூறினார் பதில் கிடைக்கவில்லை. மீண்டும் ஒருமுறை ஸலாம் கூறினார். அதற்கும் அண்ணலார் பதில் கூறாமல் திருமுகத்தைத் திருப்பிக் கொண்டார்கள்.

இதை சகிக்க முடியாத அந்த அன்ஸாரி அங்கு கூடியிருந்த ஸஹாபாக்களிடம் இது பற்றி வினவினார். உண்மை நிலை அவருக்கு உணர்த்தப்பட்டது. உடனே தமது இல்லம் சென்று அந்த மாடி வீட்டை இடித்துத் தரைமட்டமாக்கி விட்டார் அன்ஸாரி.

உயர் மாடி வீடுகளை உத்தம நபி (ஸல்) அவர்கள் வெறுத்தார்கள். அது மனித குலத்திற்குக் கேடு விளைவிப்பதாகவே இருக்கும் என்றும் எச்சரித்தார்கள்.

எம்.சீ.கலீல், கல்முனை-05.

# கவிதைப் போட்டி இல.294



## பரிசுக்குரிய கவிதை

### எதிர் நீச்சல்

அகதியாய் அல்லல் பட்டாலும்
அநாதையாய் அவலப்பட்டாலும்
துன்பப்பட்டு துயரப்பட்டாலும்
நெஞ்சிலே உரமும் உண்டு
உடலிலே வலிமை உண்டு.....!
உயிர் வாழ வழியுமுண்டு....!

திருமதி ம. ஞானராஜா-
'மனோரகம்', வாழைச்சேனை.

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

### மதி(ய) உணவு.

இறக்குமதி செய்யென்று
எவருமிங்கு கேட்கவில்லை;
உனக்குமதி இருக்கிறதா?
உண்ணவிடு! எங்கள் பூமி!

த. சிவகுமார்- ஈச்சந்தீவு-03,
கிண்ணியா.

### சுமைதாங்கி

சமாதானப் போர் எம்மை
சகதி வழி துரத்தி
அகதியாய் வைத்தாலும்
எறும்பாய் நானிருந்து
குரும்பை தனைச்சுமந்து
குடும்பமதைக் காத்திடுவேன்!

தர்ஷிக்கா கனகசிங்கம்-
கல்லடி வேலூர், மட்டக்களப்பு.

### என்ன சுமையோ.....!

மனதிலே வாழ்க்கைச் சுமை...
உடலிலே தேங்காய்ச் சுமை...
எதிரிலே என்ன சுமையோ?

ஏ.ஆர்.ஏ.ஆரிப்- சாஹிப் வீதி,
கல்முனை-5.

### ஏமாற்றமோ?

ஏற்றமோ உன் சுமையில்
(ஏ) மாற்றமோ இப்புவியில்!

சி. குகதாசன் (குகன்)-
மட்டக்களப்பு.

### தாங்கும் பிள்ளை

கூடப்பிறந்த பிள்ளை...
வெலிக்கடையிலே!
தவமிருந்து பெற்ற பிள்ளை...
களுத்துறையிலே!
இன்று என்னைத்
தாங்கும் பிள்ளை...
தென்னம்பிள்ளையே!

எஸ்.ஜி. டினேஸ்-
மஸ்கெலியா.

### விளைவு!

அரசை நம்பினோம்
தந்தது கண்ணீர்!
மரத்தை நம்பினோம்
தந்தது இளநீர்!

சி. நாகேந்திரன்-
மட்/ஆரைப்பற்றை.

### பவனி

தேவாரம் பாடி
தேரோடிய வீதியில்
தேங்காய்ப் பவனி
வருவதைப் பாரீர்.

எஸ். ஞானராஜா-
கல்குடா.

### தேசிய வண்டி

இது
எங்கள்
தேசிய வண்டி!

ஜி.கே.யோகச்சந்திரன்-
அக்கரைப்பற்று.

### சுமை

வண்டிக்கோ சுமை கொள்ள இடமில்லை-இவன்
உடலுக்கோ சுமை தள்ள வலுவில்லை...!

செல்வி மதுரா யோகேந்திரன்- திருக்கோவில்.

### குற்றமா?

நீங்கள்
கள்ள வாக்குப் போடலாம்;
நான்
கள்ள இளநீர்
பிடுங்கக் கூடாதோ?

கா. சுஜந்தன்- கிளிநொச்சி.

### முடிந்தும் முடியாமல்

வாழத் துடிக்கும்
வாலிபப் பருவத்தில்
தன்னம்பிக்கையோடு
மீளும் நிலை இது...!

செ. ஞானராசா-
சின்னப்பண்டிவிரிச்சான், மடு.

### தேச(க)ச் சூடு!

'தேகசூடு'-போக்க
இந்த (இள)நீர்!
'தேசசூடு'-போக்க
எந்த நீர்?!

கோட்டைமுனை முத்துமணி-
வாஹிட் ஏ. குத்தூஸ்-அக்குறணை.

# கவிதைப் போட்டி இல.297



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 27.02.1999

**முகவரி:** கவிதைப் போட்டி இல.297
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

## திருத்தம் தருவாயா?

வாரம் பிறந்தால்-
முரசு எப்போவரும்
என்றெதிர்பார்க்கும்
எமக்கு-
நீ-சில
எழுத்துப்பிழைகளைத்
தருகிறாயே!
சென்ற-
07-13 (பெப்) முரசில்
'சிறை செல்வாரா ஜெமீமா'
என்ற தலைப்பில்
இரண்டாவது பந்தியில்
இரண்டாவது வரியில்
புகாருக்குப் பதிலாய்
'புகர்' என அச்சுப்பதியப்
பட்டிருந்தது.
என் போன்ற முரசின்
வாசகர்கள்
சங்கடப்பட்டிருப்பார்கள்.
எனவே அவ்வாறான
தவறுகளை தவிர்க்குமாறு
கேட்கின்றேன்.

றுவைஸ் ஏ. மஜீத்,
நேரியகுளம்.

அன்பின் முரசே!

இடி அமீனின் தொடர் வீறு நடை போடுகின்றது. கிரைம் சக்கரவர்த்தியின் 'டிசம்பர் பௌர்ணமி' தொடர்கதை சூப்பராக இருக்கின்றது. 'துரையப்பாவின் மறுபிறவி' தமிழ்க் கட்சித் தலைவர்களுக்கு பூசல்களை ஏற்படுத்துமா எனத் தெரியவில்லை?

சித்திரவேல் சிவகுமார்,
தேத்தாத்தீவு.

அன்பின் முரசே!

நீ சுமந்து வரும் அம்சங்கள் அனைத்தும் அருமை! குறிப்பாக இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாம் உசேன் அவர்களின் உண்மைக் கதையை தொடராகக் கொண்டு வரும் முரசுக்கு என் வாழ்த்துக்கள்!

த. நிசாந், வவுனியா.

## மனதை இடிக்கின்றது.

முத்திரை பதித்து வரும் 'முரசு' இடி அமீனின் உண்மைத் தொடரை தந்து வருகின்றது. அது எங்களது மனதை இடிக்கின்றது. அத்துடன் சிந்திக்கவும் வைக்கிறது.

ரா.ப. அருஸ், கிண்ணியா-3.

எனது அருமை முரசே!

நீ சுமந்து வரும் அனைத்தும் அருமையிலும் அருமை!

அதிலும் 'டிசம்பர் பௌர்ணமி' மிகவும் என்னைக் கவர்ந்தது.

நித்தியன் சாந்தாவுக்கா, விசாலிக்கா கிடைப்பார் என்று அறிய ஆவலாய் இருக்கிறது.

ஈஸ்வரன் அம்மன், பூந்தோட்டம், வவுனியா.



## நாசமாகும் சந்தர்ப்பங்கள்

அன்பு முரசே!

'அரசியல் பயங்கரவாதம்' முரசம் அருமை. இராஜதந்திரியின் அலசல் வாராவாரம் பிரமாதமாக அமைகிறது. வடமேல் மாகாணசபைத் தேர்தல், அரச, எதிர்க்கட்சி முரண்பாடு போன்றனவற்றை தமிழ்பேசும் தரப்பு எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை இராஜதந்திரி தெளிவாகக் கூறியிருந்தார். 'டமில்' கட்சிகள் சகல சந்தர்ப்பங்களையும் நாசமாக்கி வருகின்றன.

வீ. சிவராசா, கொழும்பு-10.

## தந்திரிக்குப் பாராட்டு

'பொதுஜன முன்னணியின் ஜயசிக்குறுய் நாரதர் எக்ஸ்ரே போதும். நடந்ததை; தெளிவாக அறிந்தோம். நடக்க முன்பே ஆருடம் கூறிய இராஜதந்திரியாரையும் பாராட்டுகிறோம்.

எம். குருநாதன், சுவிற்ஸர்லாந்து.

## முகத்திலடி

நாரதர், இராஜதந்திரி, நக்கீரன் அரசியல் விமர்சனங்களும், செய்திகளும் கலக்கலோ கலக்கல். 'துரையப்பாவின் மறுபிறவி' பற்றிய காதிலை பூ கந்தசாமியாரின் கிண்டல் மூட நம்பிக்கைகளுக்கு முகத்திலடி.

பா. ராசதுரை,
மட்டக்களப்பு.

சேது சமுத்திரத் திட்டம் தொடர்பான இராஜதந்திரியின் அலசலும், நாம் தமிழர் இயக்கம் பற்றி அவர் தந்த நினைவூட்டலும் பாராட்டத் தக்கவை. ஜோர்ஜ் பெர்னாண்டஸ் அமைதியாக இருந்தாலும், நோக்கங்களை மறக்கவில்லை.

சி. ராஜேந்திரன்,
திருமலை.

## மறுபடி சூடு

முரசே! டயானா தொடர் இடையே சில அத்தியாயங்கள் மெதுவாக நகர்ந்து, இப்போது மறுபடி படு சூடு. புவனாவுக்கு சபாஷ்.

இ. நிரோசா, மட்டக்களப்பு.

## முட்டாளாக்கும் கதைகள்

முரசே! பிரேமதாசாவின் மறுபிறவி என்று நீயும் பொய்யுரைக்காமல் காதிலை பூ கந்தசாமி மூலம் உண்மையுரைத்தாய்! மக்களை முட்டாள்களாக்கும் கதைகளை அம்பலப்படுத்தி உண்மை தருவதும் பத்திரிகைகளது கடமையே! முரசுக்கு வாழ்த்துக்கள்.

வே. தியானேஸ்வரன், வவுனியா.

## தன் கையே!

முரசே!

யாழ் குடாநாட்டில் ஆட்கடத்தல் பற்றிய செய்தியை; தெளிவாகத் தந்தாய். தன்கையே தனக்குதவி. இங்கே தன்கையே தன் கண்களைக் குத்திக் குதறியெடுக்கிறது. சொந்தக் கையாக இருந்தாலும் தீரா வியாதி பீடித்தால் என்ன செய்வது?

பூ. ரங்கன், மன்னார்.

## விளம்பரம்

முரசின் வளர்ச்சியைப் பொறுக்க முடியாதவர்களும், முரசுடன் போட்டி போட்டுத் தோற்றவர்களும் முரசை எவ்வாறெனினும் சாடுவர் என்பது எதிர்பார்க்க வேண்டியதே! ஆனால் அதே பத்திரிகைகளில் முரசில் வெளியான ஆக்கங்களது பாதிப்பையும், அதே கருத்துக்கள் திரும்ப இடம்பெறுவதையும் காண்கிறோம். முரசை அவர்களும் ஆழ்ந்து படிப்பது தெரிகிறது. முரசுக்கு அவர்களும் ஒரு விதத்தில் விளம்பரம் செய்கிறார்கள் என்று முரசு ஆசிரியர் கூறியதும் உண்மையே!

இ. விமலேந்திரன், கனடா.

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் வர்த்தகர்கள் மத்தியில் அச்சம்!
## நாட்டை விட்டு துரத்தும் சூழ்ச்சியா?

(நமது நிருபர்)

வியாபாரப் போட்டிகளால் தம்மீது புலி முத்திரை குத்தப்படுவதாக தமிழ் வர்த்தகர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

சமீபத்தில் பிரபல தமிழ் தொழிலதிபர் ராஜன் சதாசிவம் கைதானார். இவர் புலிகளுக்காக வர்த்தகம் செய்வதாகக்கூறியே கைது செய்யப்பட்டார். பின்னர் இவர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.

கடந்த காலங்களிலும் தமிழ் வர்த்தர்கள் பலர் புலிகளுக்கு உதவியதாகவும், புலிகளது ஆட்கள் என்றும் கைது செய்யப்பட்டு துன்புறுத்தப்பட்டனர்.

கொழும்பில் தமிழ் வர்த்தகர்களை ஓரம் கட்டுவதற்கு முற்படும் சில சக்திகளே இத்தகைய முத்திரை குத்தல்களுக்கு பின்னணியில் நிற்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய சக்திகளுக்கு சீருடை அதிகாரிகள் சிலரும் உதவுகரமாக இருக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

யாழ் குடாநாட்டுக்கு கப்பல் சேவை நடத்துவதிலும் தமிழ் வர்த்தக நிறுவனங்களை ஓரம்கட்ட சில நிறுவனங்கள் சதி செய்து வருவதாகவும் கூறப்படுகிறது.

### வெளி நாடுகளுக்கு

கொழும்பில் இருந்து சில தமிழ் வர்த்தகர்கள் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு விசா பெற்றுச் சென்றுள்ளனர்.

இவ்வாறு சமீபத்தில் சென்ற வர்த்தகர் ஒருவரிடம், அவர் அமெரிக்கா செல்வதற்கான காரணத்தைக் கேட்டபோது, "நாளை எனது மகனை புலி என்று பிடித்து வைத்தால் நான் என்ன செய்வது? இங்கு வாழ்வதற்கே உத்தரவாதமில்லை!" என்று கூறினார்.

வேறு சில தமிழ் வர்த்தகர்களும் இவ்வாறு குடும்பத்தோடு வெளிநாடு செல்லத் திட்டமிட்டுள்ளனர்.

எவ்வித ஆதாரமும் இன்றி புலி முத்திரை குத்தி தொழிலதிபர்களை கைது செய்தவர்கள்மீது எத்தகைய நடவடிக்கையையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை. அவ்வாறிருக்கையில் யார்மீது நம்பிக்கை வைப்பது? என்று வர்த்தகர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

வர்த்தக சம்மேளனம் இனப்பிரச்சனை தீர உதவப்போவதாக அறிக்கைகள் விடுகின்றன. தமிழ் வர்த்தகர்கள் தேவையற்ற நெருக்கடிகளில் சிக்கும்போது, இவை எங்கு போகின்றன; ஏன் கண்டிப்பதில்லை என்றும் தமிழ் வர்த்தக வட்டாரங்கள் அதிருப்தி தெரிவித்துள்ளன.

இதனிடையே யாழ் குடாநாட்டில் தமிழ் வர்த்தகர்களுக்கு படையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

புலிகளுக்கு நிதி உதவி செய்தால் கடும் தண்டனை என்று படையினர் கூறியுள்ளனர்.

இதனால் வர்த்தகர்கள் கிலி கொண்டுள்ளனர். தாம் பணம் கொடுக்காதுவிட்டாலும் கைதாகும் நிலை ஏற்படுமோ, என்று அஞ்சுகின்றனர்.

# வடக்கு-கிழக்கை பிரித்து தேர்தல்?
## நாடி பிடித்தறியும் முயற்சி நடக்கிறது!

(நமது நிருபர்)

வடக்கு-கிழக்கில் மாகாண சபைத் தேர்தல் நடத்துமாறு தமிழ்க் கட்சிகள் சில கோரியிருந்தன.

வடக்கு-கிழக்கை முதலில் பிரித்த பின்னரே தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் யோசித்து வருகிறது.

இது பற்றி வெளியான செய்திகளை பிரதி அமைச்சர் அலவி மௌலானா மறுத்திருந்தார்.

ஆனால், வடக்கு-கிழக்கை பிரித்து, முதலில் கிழக்குக்கு தேர்தல் நடத்தும் யோசனை பற்றி அரச உயர் மட்டத்தில் பேசப்பட்டதோடு, அது பற்றிய ஆவணம் ஒன்றும் தயாரிக்கப்பட்டது உண்மை என்று தகவலறிந்த வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்துள்ளன.

அவ்வாறு பிரித்து தேர்தல் நடத்துவதாயின் பாராளுமன்றத்தில் ஒப்புதல் பெற வேண்டியிருக்கும். பிரிப்புக்கு எதிராக ஐ.தே. கட்சி வாக்களிக்கமாட்டாது. அவ்வாறு வாக்களித்தால் தென்னிலங்கையில் எதிர்ப்பு ஏற்படும். எனவே ஒப்புதல் பெறுவது சுலபம் என்று அரச உயர் மட்டம் கருதுவதாகக் கூறப்படுகிறது.

இதன் முதற் கட்டமாக தமிழ்க் கட்சிகளை நாடி பிடித்தறியும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டு ஏற்க மறுத்தால் அரசு பின்வாங்கும் சூழல் ஏற்படக்கூடும்.

தமிழ்க் கட்சிகள் ஒருமித்த குரலில் ஏற்க மறுக்கும் பிரிப்பைச் செய்தால், நியாயமான அரசியல் தீர்வை வழங்க உள்ளதாக வெளிநாடுகளில் தாம் செய்யும் பிரசாரம் பாதிக்கப்படும் என்று அரசாங்கம் நினைக்கும்.

ஆகவே, தமிழ்க் கட்சிகளுக்குள் உள்ள போட்டா போட்டிகளையும், தமிழ்க் கட்சி தலைமைகளது ஆசைகளையும் பயன்படுத்தி சில கட்சிகளை இணங்க வைக்கலாமா என்று ஆராயப்படுகிறதாம்.

### சந்திப்பு

தமிழ் அரசியல்வாதி ஒருவரை கடந்த வாரம் சந்தித்த அமைச்சர் ஒருவர் பொதி பற்றியும், பொதிக்கு ஆதரவு தருமாறும் கேட்டுள்ளார். அவர் ஆதரவு தருவதாகக் கூறியுள்ளார்.

இதனையடுத்து "அவர் ஆதரவு தருவதாகக் கூறியுள்ளார். நீங்களும் ஆதரவு தர வேண்டும். இல்லையெனில் குறிப்பிட்ட கட்சிக்கே நாம் உதவுவோம்!" என்று அந்த அமைச்சரால் பிறிதொரு தமிழ் அரசியல்வாதியிடம் கூறப்பட்டதாம்.

பொதியைப் பகிரங்கமாக விமர்சிக்கக் கூடாது என்றும் தமிழ்க் கட்சித் தலைவர்கள் சிலரிடம் மேலிருந்து கூறப்பட்டுள்ளதாம்.

அதே அமைச்சர்தான் கிழக்கை தனியாகப் பிரித்து தேர்தல் நடத்தலாமா? என்ற கேள்வியை வீசியும் தமிழ்க் கட்சி தலைவர்கள் சிலரை நாடி பிடித்தறிந்துள்ளாராம்.

வடக்கு-கிழக்கை பிரிப்பது என்பது அரசின் தீர்வுப் பொதியில் உள்ள திட்டமேயாகும். எனவே, இது ஒன்றும் புதிய முயற்சியல்ல.

வடக்கு-கிழக்கு இணைந்திருக்கக் கூடியதாக மாகாணசபைத் தேர்தல் நடத்த அரசு விரும்பாததாலேயே, உள்ளூராட்சித் தேர்தல்களை மட்டும் நடாத்தியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வவுனியா இயக்க மோதல்!
## மாணவர்கள் தப்பியோட்டம்

வவுனியாவில் புளொட், ரெலோ இயக்க மோதல்களால் அங்குள்ள தமிழ் மாணவர்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

வவுனியா தமிழ்ப் பாடசாலைகளில் ரெலோ, புளொட்- ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஆகிய கட்சிகள் மாணவர் ஒன்றியங்களை ஏட்டிக்குப் போட்டியாக உருவாக்கின.

தேர்தல் காலத்தில் சுவரொட்டி ஒட்டுதல், பிரசாரம் செய்தல் போன்றவற்றில் ஈடுபடுத்தவே மாணவர்களை தம்பக்கம் வைத்திருக்கப் போட்டிபோட்டனர்.

இதனால் மாணவர்கள் மத்தியில் இயக்கப் போட்டிகள் உருவாகின. மேற்படி மூன்று கட்சிகளுமே தத்தமது ஒன்றிய மாணவர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்கியிருந்தன.

வீட்டில் பெற்றோருக்கு இயக்க அடையாள அட்டையைக் காட்டி மிரட்டிய மாணவர்களும் உள்ளனர். ஆசிரியர்களும் இத்தகைய மாணவர்களைக் கண்டிக்கப் பயந்தனர்.

இந்நிலையில் தமது பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்ப பெற்றோர்கள் பயந்தனர்.

மாணவர்கள் மத்தியில் ஏற்பட்ட போட்டா போட்டிகளும் இயக்க மோதல்களுக்கு ஒருவிதத்தில் தூபமிட்டன.

சமீபத்திய இயக்க மோதலில் புளொட் மாணவர் அமைப்பைச் சேர்ந்த ஒருவரும், ரெலோ மாணவர் அமைப்பைச் சேர்ந்த ஒருவரும் பலியாகியுள்ளனர்.

இதனையடுத்து பாடசாலைகளுக்கு மாணவர் வரவு குறைந்தது. அடையாள அட்டைகளைக் காண்பித்து அட்டகாசமாக நடமாடிய சில மாணவர்களும் தலைமறைவாகினர்.

பல பெற்றோர்கள் தமது பிள்ளைகளை கொழும்புக்கு அழைத்துச் சென்றுள்ளனர். நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் வரை பெற்றோருடன் கொழும்பு சென்றுள்ளனர். மேலும் பலர் வவுனியாவைவிட்டு செல்ல எண்ணியுள்ளனர்.

இயக்க மாணவர் ஒன்றியங்கள் எதுவும் இருக்கக்கூடாது என்பதே பெற்றோர்களது விருப்பமாக இருக்கிறது.

# வடமேல் மாகாணசபை தேர்தல் குழப்பம்?
## 'பயங்கரவாதம்' என்று புலிகள் விவரிப்பு!

வடமேல் மாகாணசபைத் தேர்தல் பற்றி புலிகளது ஆங்கில வெளியீடுகளில் ஒன்றான 'ஹொட் ஸ்பிறிங்' கருத்து வெளியிட்டுள்ளது.

அப்பத்திரிகையின் ஆசிரியரும், பழம்பெரும் பத்திரிகையாளருமான எஸ்.சிவநாயகம் தீட்டியுள்ள ஆசிரியர் தலையங்கத்திலேயே தேர்தல் தொடர்பாக கருத்துக் கூறப்பட்டுள்ளது.

'அண்மையில் நடந்து முடிந்த வடமேல் மாகாண சபைத் தேர்தலில் ஜனாதிபதி குமாரதுங்க தொடங்கி வைத்த சதுரங்க காய் நகர்த்தல் எத்தகையது என்பதை பலரும் பலவித பெயர்களால் குறிப்பிட்டு வர்ணித்துள்ளனர்.

அமைச்சர் அஷ்ரப், 'வெட்கக்கேடு' என்றார். அனுபவம் மிகுந்த பாராளுமன்ற உறுப்பினர் ரொனி டி மெல் 'மோசடி' என்றார். 'கெஸ்ரயோ தந்திரோபாயம்' என்று ஒரு பத்திரிகை தலைப்புச் செய்தி வெளியிட்டது.

இலங்கைத்தீவின் வரலாற்றில் அண்மைக் காலத்தில் இத்தகைய அடைமொழிகளைப் பயன்படுத்த ஏதுவான ஒரு தேர்தல் நடந்ததே இல்லை.

### பொருத்தம்

ஜனாதிபதியின் இத் தேர்தல் பிரதாபங்களைப்பற்றி நாம் வேறு எதுவும் விபரிக்க விரும்பவில்லை. ஆனால் இத்தகைய நடவடிக்கைகளை ஒரே வார்த்தையில் மட்டும் குறிப்பிடுவது பொருத்தமாகும். 'பயங்கரவாதம்' என்பதே அப் பொருத்தமான வார்த்தை. பயங்கரவாதம் என்ற சொல் விடுதலைப் புலிகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்தது. சிங்களப் பகுதிகளில் இச் சொல் பயன்படுத்தப்படவில்லை.

சிறிலங்காவின் அகராதியின்படி ஆயிரம் பேர் அடங்கிய ஒரு இராணுவ முகாமை புலிகள் தாக்கி அழிப்பது பயங்கரவாதிகளது செயல் எனப்படுகிறது.

ஆனால் ஆயிரக்கணக்கான சிங்கள வாக்காளர்களை வாக்களிக்கவிடாது ஆயுதம் ஏந்திய நூற்றுக்கணக்கான சிங்களவர்களே தடுப்பதை என்னவென்று கூறுவது?

இவ்வாறு 'ஹொட் ஸ்பிறிங்' தனது ஆசிரியர் தலையங்கத்தில் எழுதியுள்ளது.

இத்தகைய தேர்தலை 1981இல் இன்னொரு கட்சியின் ஆட்சிக்காலத்தில் தமிழ் மக்கள் சந்தித்தனர். மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் அது. அப்போது யாழில் வாக்குப் பெட்டிகள் காணாமல் போயின. இப்போது தமிழர்களே காணாமல் போய்க்கொண்டிருக்கின்றனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# அடையாள அட்டை பறிப்பு

தம்மை வந்து சந்திக்குமாறு புலிகள் இயக்கத்தினர் படையினரின் கண்காணிப்பின் கீழ் உள்ள பகுதிப் பொதுமக்களுக்கு கடித மூலம் அழைப்பு விடுத்துவருகிறார்கள்.

புலிகளின் அழைப்பையேற்று பொது மக்கள் தமக்கு குறிக்கப்பட்டுள்ள திகதியில் புலிகளைச் சந்தித்து வருகிறார்கள். இருப்பினும் குறித்த தினத்தில் சமுகமளிக்காது-தமது அழைப்புக்கு முக்கியத்துவம் கொடுக்காதவர்கள் மீது புலிகள் இயக்கத்தினர் கடுகடுப்பாய் இருக்கிறார்களாம்.

24 மணி நேரமும் படையினரின் கண்காணிப்பின் கீழுள்ள மட்டக்களப்பு-ஞான சூரியம் சதுக்கத்திற்குள் எதிர்பாராத விதமாக நுழைந்த புலிகள், தாம் அழைப்புக் கடிதங்களை அனுப்பி வைத்தும் தங்களை வந்து சந்திக்கத் தவறியவர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களது தேசிய ஆளடையாள அட்டைகளைப் பறித்துக் கொண்டு தம்மை வந்து சந்தித்துப் பெற்றுச்செல்லுமாறு கூறிவிட்டுச் சென்றனர்.

இவ்வாறு பலரின் தேசிய ஆளடையாள அட்டைகளைக் கடந்தவாரம் புலிகள் பறித்துச் சென்றனர்.

தமது தேசிய ஆளடையாள அட்டைகளைப் பறிகொடுத்தவர்கள் நகரில் நடமாட முடியாதென்பதால் தமது அடையாள அட்டைகள் தொலைந்துவிட்டன என்று பொலிஸில் முறையிட்டுள்ளனர்.

# 'எம்.பி.யும் பதிய வேண்டும்!'
## பொலிஸ் அதிகாரி மிரட்டல்

கொழும்பில் உள்ள தமிழ் மக்கள் பொலிஸில் பதிவு செய்ய புகைப்படம் கேட்கக் கூடாது என்று யோகராஜன் எம்பி தொல்லை தவிர்ப்புக் குழுவில் முறையிட்டார். பரிசீலிக்கப்படுவதாகக் கூறப்பட்டு ஒரு மாதமாகியும் பயன் இல்லை.

ஆனால் யோகராஜன் எம்.பி.க்கே தொல்லை வந்துவிட்டது. அவர் நாவலயில் குடியிருந்து வருகிறார்.

அப்பகுதி பொலிஸ் அதிகாரி, யோகராஜன் எம்.பி.யின் வீட்டுக்குச் சென்று பொலிஸ் பதிவு இருக்கிறதா? என்று கேட்டுள்ளார். 'இல்லை, இது எம்.பி.வீடு' என்று கூறியபோது, "எம்.பி.யாக இருந்தாலும், தமிழராக இருந்தால் பதிய வேண்டும்!" என்று கூறிய பொலிஸ் அதிகாரி, எம்.பி. வந்ததும் பொலிஸ் நிலையம் வருமாறு கூறிச் சென்றாராம்.

பின்னர் எம்.பி. தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது "பதியத்தான் வேண்டும்!" என்று கூறினாராம்.

பின்னர் எம்.பி. மேலதிகாரிகளோடு தொடர்புகொண்டார். இதுபற்றி தொல்லை தவிர்ப்புக் குழுவுக்கும் அறிவிக்கப்பட்டது. குறிப்பிட்ட பொலிஸ் அதிகாரிமீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் போதும், எத்தகைய நடவடிக்கை என்று கூறப்படவில்லை.

# "குத்தகையைச் செலுத்தவும்!"
## புலிகள் புதிய வேண்டுகோள்!

கிழக்கில் ஒட்டமாவடி, வாழைச்சேனைப் பகுதியில் நெற் செய்கைக்காக தமிழ் மக்கள் சிலர் தமது நெற்காணிகளை முஸ்லிம் மக்களுக்கு குத்தகைக்கு வழங்கி குத்தகைப் பணம் பெற்றுவருகின்றனர்.

எனினும் தற்சமயம் தமிழ் மக்களின் காணிகளுக்கான குத்தகைப் பணத்தை காணிச் சொந்தக்காரர்களுக்கு வழங்காது தம்மிடம் செலுத்துமாறு புலிகள் காணியைக் குத்தகைக்குச் செய்கை பண்ணும் முஸ்லிம்களைக் கேட்டுள்ளனர்.

இது காணிச் சொந்தக் காரர்களுக்கும் காணியைக் குத்தகைக்குச் செய்வோருக்குமிடையில் மனக்கசப்பையும், நெருக்கடியையும் தோற்றுவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

பாதிக்கப்பட்டவர்களின் நிலைமையைக் கருத்திற்கொண்டு சிறப்பான கவனமெடுத்து நிவாரணம் வழங்க ஆவன செய்யுமாறு நெற்காணி உடைமையாளர்கள் வேண்டுகோள் விடுக்கிறார்கள்.

# "புலிகள் மீதான தடை நீங்கியதா?"
## ஜயலத் எம்.பி.கேள்வி

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு சிறீலங்கா அரசாங்கம் விதித்திருந்த தடை உத்தரவு நீக்கப்பட்டுவிட்டதோ என்று சந்தேகம் எழுந்துள்ளதாம். ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா இந்த ஐயப்பாட்டினை வெளிப்படுத்தியுள்ளார்.

வன்னியிலுள்ள புலிகள் இயக்க முகாம்களுக்கு இம்மாதம் 9ம் திகதி தென் பகுதியிலிருந்து சில பிரமுகர்களும் 25 பௌத்த மதகுருமாரும், கிறிஸ்தவப் பாதிரிமாரும் சென்றிருந்தனர்.

புலிகள் இயக்கப் பிரமுகர்களை இக்குழுவினர் கண்டு பேசியுள்ளனர். புலிகள் இயக்கத் தலைவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து வந்த அவர்கள் செய்தியாளர்கள் மாநாட்டைக் கூட்டி, தங்கள் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

இக்குழுவினர் புலிகள் இயக்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகவே சென்றிருந்தனர். இவர்கள் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்குச் செல்ல விருப்பதும் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்போவதும் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் தெரிந்திருக்கிறது. அரசாங்கத்திடம் முறையான அனுமதி பெற்றே இக்குழுவினர் சென்றனர் என்பதும் வெளிப்படை.

இக்குழுவினர் தடைசெய்யப்பட்ட ஓர் இயக்கத்தின் தலைவர்களைக் கண்டு பேசவும், அத்தலைவர்கள் கூறிய கருத்துக்களைப் பகிரங்கமாகக் கூறவும் தடை எதுவும் விதிக்கப்படவில்லை. ஆகவே புலிகள் இயக்கத்துக்கான தடையினை அரசாங்கம் நீக்கிவிட்டிருக்கிறது போலும், என்று டாக்டர் ஜயவர்த்தனா கூறுகிறார்.

இக்குழுவினர், அரசாங்கத்தினதும் ஜனாதிபதியினுடையதுமான ஆசிர்வாதங்களுடன்தான் வன்னிப் பிராந்தியத்துக்குச் சென்றுள்ளனர் என்பது தெளிவாகின்றது.

பாதுகாப்பு இணை அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்தை, இக்குழுவினர் அரசாங்கத்தின் ஆதரவுடன் சென்றனர் என்ற கூற்றை மறுத்திருக்கிறார். அவர்கள் செல்வதற்கு பாதுகாப்புத் தரப்பினர் அனுமதி மட்டுமே வழங்கினர் என்று கூறியிருப்பதாகத் தெரியவருகிறது.

ஏற்கனவே ஜயலத் எம்பி புலிகள் மீதான தடையை அரசு நீக்க வேண்டும் என்று கோரியிருந்தார். தமது கோரிக்கையை மறுத்துள்ள அரசு, இப்போது மத குருமார்கள் செல்ல எப்படி அனுமதியளித்தது? என்றே அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# பரிதாப அகதிகள்

(காரைதீவு நிருபர்)

"எமது காணிகளில் காடு வளர்கிறது, வீடுகள் அழிந்து வீணாய்ப் போகின்றன, குளம் தூர்ந்து போகிறது. எமது கால் நடைகள் காட்டு மிருகங்களாகிவிட்டன. கற்கால மனிதர்களாக மாறிவருகிறோம். நாம் அகதி முகாமில் 10 வருடகாலம் அனுபவித்தது போதும். எப்படியாவது எம்மை மீள்குடியேற்றுங்கள். இல்லாவிடில் சத்தியாக்கிரகம் இருந்து சாவோம்!"

இவ்வாறு அண்மையில் அம்பாறை மாவட்டத்திலுள்ள வினாயகபுர அகதிமுகாமிற்கு விஜயம் செய்த உலக வங்கிப் பிரதிநிதியிடம் அகதிகள் அழுதழுது கூறினர்.

அரை நிர்வாண உடையோடு எலும்பும் தோலுமாகக் காட்சியளித்த அகதிகளைக் கண்ட பிரதிநிதிகள் பிரமித்துப் போனார்கள்.

"எமக்கு கூட்டணியினரில் நம்பிக்கை இல்லை. நீலன் எம்.பி.யிடம் பலதடவை கூறியும் நடவடிக்கை இன்னுமில்லை. இருப்பினும் எமது பிரதேச எம்.பியான யோசப் பரராஜசிங்கத்திற்கு மனு ஒன்றை அனுப்பியுள்ளோம்!" என்றும் அகதிகள் கூறினர்.

# முஸ்லிம்களுக்கு தொடர் அச்சுறுத்தல்!
## நியாயமான நடவடிக்கை தேவை!

(நமது நிருபர்)

குருநாகல் மாவட்டத்திலுள்ள அலபடகம, பன்னல ஆகிய முஸ்லிம் கிராமங்கள்மீது காடையர்களால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறை நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணமுள்ளன.

கடந்த 6ம் திகதி நள்ளிரவு வேளையில் முஸ்லிம் ஹோட்டலொன்றில் உணவருந்திவிட்டு பணம் கொடுக்காமல் சென்ற பெரும்பான்மை இன சண்டியர்களே இவ்வன்முறை சம்பவத்திற்கு முழுக்காரணம் எனக் கூறப்படுகின்றது.

இதன் பின்னர் ஏற்பட்ட வன்முறையில் மூவர் பலியாகியுள்ளனர். ஒரு சிறு விடயத்தை மிகவும் பாரதூரமாக மாற்றி முஸ்லிம்களை அழிக்க பேரினவாதிகள் மேற்கொண்டுள்ள சதியின் ஒரு அங்கமே பன்னல சம்பவமாகுமென இப்பகுதி மக்கள் முரசுக்குத் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தையடுத்து மிகவும் அந்நியோன்யமாக பழகிய பெரும்பான்மை இனத்தவர்கள் கூட முஸ்லிம்களை வீதி வழியாகச் செல்ல விடாமல் துன்புறுத்தும் நடவடிக்கையில் இறங்கியுள்ளதாக கூறப்படுகின்றது.

இங்கு நடந்த சம்பவத்தை வைத்து வீதியில் சென்று கொண்டிருந்த வேறு இடத்து முஸ்லிம்களும் தாக்கப்பட்டு படுகாயங்களுக்கு ஆளாகியுள்ளனர். பஸ்களிலும், வேன்களிலும் சென்ற வேளை வெளியே இழுத்து தாக்கப்பட்டுள்ளமையானது இனவாத செயல் என்றே பலரும் கருதுகின்றனர்.

அண்மைக் காலமாக நாட்டின் தென் பகுதியில் சிங்களக்கிராமங்களுக்கு மத்தியில் வசிக்கும் முஸ்லிம்கள் அச்சுறுத்தலுக்கு ஆளாகி வருகின்றனர்.

இச்சம்பவம் நடைபெற்ற வேளையில் போதியளவு பாதுகாப்பு கிடைக்கவில்லை என இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். சம்பவத்துடன் தொடர்புபட்ட சகலரும் நீதியின் முன் நிறுத்தப்பட்டு உரிய தண்டனை வழங்கப்படவேண்டும். இல்லையெனில் இவ்வாறான வன்செயல்கள் நாடு முழுவதற்கும் பரவும் அபாயமே ஏற்படும் என்றும் அஞ்சப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# கண்டியில் இன முறுகல் நிலை

## முஸ்லிம்களுக்கு எதிராக கோஷம்

(கண்டி நிருபர்)

கண்டி நகரில் அண்மைக் காலமாக தமிழ்பேசும் மக்கள் மீது மறைமுகமாக இடம்பெற்று வரும் இன முறுகல் காரணமாக, 1983ம் ஆண்டைப் போன்றே கறுப்பு ஜூலைச் சம்பவம் ஒன்று தலைதூக்கி விடுமோ என்று தமிழ்பேசும் மக்கள் அஞ்சுகின்றனர்.

கண்டியில் அடிக்கடி இடம்பெற்று வரும் மக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவிலான கூட்டங்களிலும், இனவாதத்தைத் தூண்டிவிடும் சிங்கள மொழியிலான நூல் வெளியீடுகளிலும், இனவாதம் சிங்கள மக்கள் மத்தியில் தூண்டிவிடப்படுகிறது.

இதுதொடர்பாக- குறிப்பாக- முஸ்லிம்கள் பெரும் கவலையும் அதிருப்தியும் அடைந்துவருகின்றனர்.

அண்மையில் இடம்பெற்ற தலதா மாளிகை குண்டுவெடிப்பு ஓராண்டு பூர்த்தி தினத்திலும், கடந்த 30 ஆம் திகதி கண்டி பொலிஸாரினால் 4 லொறிகளில் றாகம பிரதேசத்திற்கு கண்டியின் ஊடாக கொண்டு செல்லப்பட்ட 131 மாடுகளையும் எருமைகளையும் கைப்பற்றிய வேளையின் பின்னரும் இடம்பெற்ற சம்பவங்களும் இனவாதத்தைத் தூண்டும் பெரு முயற்சியாகவே அமைகின்றதென தமிழ்பேசும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இறைச்சிக்காக எடுத்துவரப்பட்ட மாடுகளை ஏற்றி வந்த 14 பேரில் எண்மர் சிங்களவரும் அறுவர் முஸ்லிம்களும் ஆவர். 131 மாடுகளையும் உரியவர்களிடம் ஒப்படைக்குமாறு கண்டி மாஜிஸ்திரேட் எம்.எல்.எம். சாஹிப் விடுத்த உத்தரவுக்கு எதிராக கண்டி மேல் நீதிமன்றத்தில் சம்மன் அப்பீல் மனு சமர்ப்பிக்கப்பட்டது. அதன்மீது மேல் நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றையும் பிறப்பித்தது.

இந்த மாடுகள் அனைத்தும் கண்டி பொலிஸ் நிலைய வளவில் போதிய உணவு இல்லாமையால் பெரும் அவஸ்தைக்கு உள்ளாகி வந்தன.

இந்தக் காட்சியைப் பார்க்க தினமும் நூற்றுக்கணக்கில் பொலிஸ் நிலையம் முன்பாக திரண்ட சிங்கள மக்கள் இனவாதத்தைத் தூண்டும் வார்த்தைகளால் முஸ்லிம்களைப் புண்படுத்தினார்கள்.

"லொறிகளுக்குத் தீ மூட்டுவோம்! மாடுகளை எடுத்துச் சென்றால் உயிரை மாய்ப்போம்!" என பௌத்த பிக்குகள் சிலர் குரல் எழுப்பினர். பிரமாண்டமான ஊர்வலமாக சுலோக அட்டையுடன் சென்றனர்.

கண்டியில் இனவாதத்தைத் தூண்டும் விதமாக இவை அமைந்திருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

கண்டி சிறைச்சாலைக்கு அருகில் உள்ள 'லயின்' முஸ்லிம் பள்ளிவாசலுக்குச் சொந்தமான கடைகள் அடங்கிய நிலப்பரப்பை தமது கண்காணிப்பில் நீதிமன்றக் கட்டளையின் பேரில் கொண்டுவர எடுக்கப்பட்ட முயற்சிக்கு எதிராக பௌத்த குருமார்களும், தீவிர போக்குடைய சில சிங்களவரும் செயல்பட்ட முறையும் மேலும் இனவாதத்திற்கு தூபம் இடுவதாகவும் அமைவதாக புகார்கள் தெரிவிக்கின்றன.

வேண்டுமென்றே திடுதிப்பென உருவாக்கப்படும் இந்த எதிர்ப்புக்கள் கண்டியில் இனமோதல் ஒன்றை உருவாக்க மாட்டாதா எனவும் சமாதான விரும்பிகள் அங்கலாய்க்கின்றனர்.

# வேட்டையாடத் தடை!

கிழக்கில் புலிகள் இயக்கத்தினர் தம்வசமுள்ள காட்டுப்பகுதிகளில் இறைச்சிக்காக மிருகங்கள் வேட்டையாடப்படுவதற்குத் தடை விதித்துள்ளனர். புலிகளின் பகுதியிலுள்ள விவசாயிகள் தங்கள் பயிர்ச் செய்கைகளைக் காட்டு விலங்குகளின் அழிவிலிருந்து பாதுகாப்பதற்காக புலிகள் கட்டுத் துவக்குகளை விவசாயிகளுக்கு வழங்கியிருந்ததோடு அவற்றைப் பாவிப்பதற்கான அனுமதியையும் கொடுத்திருக்கின்றனர்.

இதனிடையே தற்சமயம் பெரும்போக நெல் அறுவடை ஆரம்பித்துள்ளபோதும், கடும் வரட்சிக்கும் அதன் பிறகு பொழிந்த பலத்த மழை, வெள்ளத்திற்கும் தப்பி விளைந்த நெல் வயல்கள், கடந்த ஓரிரு தினங்களாகப் பெய்து வரும் மழையினால் பாதிக்கப்பட்டு வருகிறது. அரிசி விலை நெற்செய்கைப் பகுதியிலேயே நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

# அவயவங்கள் இழப்போர் அதிகரிப்பு

## செயற்கைக் கால் பொருத்தும் நிலையம்!

தொடர்ந்துசெல்லும் யுத்தத்தின் கொடூரத்தில் அகப்பட்டு அவயவங்களை இழப்போர் தொகை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. மட்டக்களப்பு மாவட்டத்திலும் கூடுதல் எண்ணிக்கையான பொது மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பாதிக்கப்பட்டு அவயவங்களை இழந்தவர்களுக்கு செயற்கை அவயவங்களைப் பொருத்துவதில் பல்வேறு சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றன. பாதிக்கப்பட்டவர்களை, மட்டக்களப்பிலிருந்து கண்டிக்கோ அல்லது கொழும்புக்கோ கொண்டு செல்லும் போது பாதுகாப்புத் தரப்பினரிடமிருந்து பல்வேறு ஆவணங்களைப் பெற்றுச்செல்ல வேண்டும். தனது கால்களை இழந்த பொதுமகனான ஒரு இளைஞர், மேற்படி சகல ஆவணங்களையும் பாதுகாப்புத் தரப்பினரிடமிருந்து பெற்றுச்சென்றார். அப்படியிருந்தும் கொழும்பில் வைத்து அவரைப் பிடித்து உள்ளே தள்ளிவிட்டார்கள். அவர் கொண்டுசென்ற பாதுகாப்புத் தரப்பினரின் ஆவணங்களும் கிழித்தெறியப்பட்டுள்ளன. பின்னர் ஒருவாறு சில நாட்களின் பின் அவர் விடுதலையானார்.

இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு, தமது அவயவங்களை இழந்த கிழக்குப் பகுதிப் பொதுமக்களின் நலன் கருதி மட்டக்களப்பிலேயே செயற்கை அவயவங்களைப் பொருத்திக்கொள்ள ஏதுவாக செயற்கைக் கால்களைப் பொருத்தும் ஒரு நிலையத்தை ஆரம்பிக்க செயற்திட்ட முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. வெகு விரைவில் இந்நிலையம் தனது பணிகளை ஆரம்பிக்கும்.

இந்நிலையத்தில்- அவயவங்களை இழந்தவர்களுக்கு தொழிற்பயிற்சியும் வழங்கப்படும். இத்தகவலை மட்டக்களப்பு மாவட்ட றோட்டரிக் கழகத்தின் தலைவர் திரு. எட்வேட் தெரிவித்தார். இதுபற்றி மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் எஸ். புண்ணியமூர்த்தி கூறுகையில்: "சமூக சேவைகள் அமைச்சின் உதவியுடன் மட்டக்களப்பில் வலது குறைந்தவர்களுக்கான தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான பூர்வாங்க வேலைகள் அனைத்தும் முடிந்துவிட்டன," என்று கூறினார்.


ஹோமியோபதி தமிழ்நாட்டின் பிரபல ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்
நாட்பட்ட தீராத வியாதிகளுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கிறார்.
Dr. R. தியாகராஜன்
D.H.M.S. AMRSH (Lond)
ஹோட்டல் கிறீன்லண்ட்ஸ். தொ.பே: 585592 - 581986
18.02.1999 - 24.02.1999
வெளி நாடுகளில் இருப்பவர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும்.
இந்தியத் தொ.பே: 0091-431-432946 0091-431-432046

அழகிய தோற்றத்தை உருவாக்கும்
சந்தனாலேப்ப
சந்தனத் தைலம், குங்குமப்பட்டை, மஞ்சள் கோடி, கஸ்தூரி மஞ்சள் உட்பட (மிருதுவான) தேசிய மருந்து வகைகள் பலவற்றைப் பயன்படுத்தித் தயாரித்த சந்தனாலேப்ப பூசுவதன் மூலம் முகப்பரு, மச்சம், தழும்பு, தேமல், உண்ணி, பித்தவெடிப்பு, தோல் சுருக்கம் முதலான சரும வியாதிகளுக்கும் வெய்யிலில் பிரயாசைப்படுவதால் தோல் கருமையடைவதும் நீங்கி, சருமத்தை மிருதுவாக்கி, பிரகாசப்படுத்தி, மனங்கவர் எழில் முகமாக மாற்றி அமைக்கலாம். உடல் எழிலையும் பாதுகாக்கும்.
ஆண்களும் சவரம் செய்தபின் பூசுவதன் மூலம் பிளேட் விஷத்தை அகற்றி, கரடுமுரடான தன்மை உள்ள சருமத்தை மென்மையாக்கி– அடுத்த சவரத்தை எளிதாக்கும். கடற்றொழில் செய்யும் மீனவர்களது உதடு, வாய் வெடிப்புகளுக்கும் அருங்குணம் பெறலாம். சந்தனாலேப்ப உலகில் எங்கும் எக்கால நிலையிலும் வாழும் சகலருக்கும் அருஞ் செல்வமாகும்.
சந்தனாலேப்ப
விநியோகஸ்தர்: நிமல் ஒசுசல, இல. 46, பிரதான வீதி, வியாங்கொடை.
சஞ்ஜீவக்க தயாரிப்பு
தொலைபேசி: 033-87567
சிறியது 15/=
நடுத்தரம் 30/=

காண்டம்
முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
ரிஷி. S.மணி
மூலம் அறிய வாருங்கள்
வெளி நாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.
S. MANI
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு-6.
T.P:- 586218

தேவை
VCR, TV, RADIO TECHNICIAN
உடனடியாக நேரில் வரவும்
THREE STAR ENGINEERS
37, GEORGE R. DE SILVA MAWATHA, KOTAHENA. COLOMBO-13.







சகாதேவராஜா மைத்ரி 11.02.1999

காரைதீவு விபுலானந்த வீதியைச் சேர்ந்த சகா-ரஞ்சி தம்பதியினரின் செல்வப் புதல்வி மைத்ரி தனது முதலாவது பிறந்தநாளை 11.02.1999 அன்று தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அச்சம்மா, இலண்டனிலுள்ள ராஜுமாமா, இன்பாமாமி, ராதாமாமா, அச்சாமாமா, கண்ணமாமா, மிதுமச்சாள், சஜிந் அத்தான், சுகந்தி அன்ரா, முகுந்தன்மாமா, சுகந்தன்மாமா, அன்ராம்மா, அன்ராப்பா மற்றும் மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அக்காமார், அண்ணாமார், அத்தான்மார், மச்சாள்மார், அப்புச்சாமார், உற்றார் உறவினர்கள் அனைவரும் கண்ணகியம்மன் அருளுடன் பல்கலையும் பெற்று பல்லாண்டுவாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல்:- வி.ரி. சகாதேவராஜா (தொ.பே. 067-20006)



மலையாள மாந்திரிகம்
மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நேசமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, யாத்தனை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.
தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.
நயரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.
வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831



கலை அலங்கார வகுப்புக்கள்
சிகை அலங்காரம்
அழகுக்கலை
மணப்பெண் அலங்காரம்
மலர் போங்கே சேர்ப்பு
4 மாத கற்கைநெறி
ஆரம்பம்: 28-02-99
சான்றிதழ்கள் வழங்கப்படும்
FASNAZ BEAUTY SALON
142 டபிள்யூ. ஏ.சில்வா மாவத்தை.
கொழும்பு-06. T.P: 589457

இரண்டு படுக்கை அறைகளுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு குத்தகைக்கு உண்டு.
தொடர்பு:-
இல. 06, காலிங்க மாவத்தை, பொல்ஹேன்கொட வீதி, கொழும்பு-05.
தொ.பே.:- 810693

மனோதத்துவ வைத்தியம்
பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம் அவர்களை
வவுனியாவில் பெப்ரவரி 13,14,15ம் திகதிகளில் சந்திக்கலாம்
(தயவு செய்து பதிவுசெய்து கொள்ளவும்)
(HOTEL VASANTHAM), 40, கண்டி வீதி, வவுனியா. T.P.024-22607, 024-22615, 22365
கொழும்பில் பெப்ரவரி 21 முதல் 28 வரை சந்திக்கலாம்
Dr. P.Arumugam S.A.M.P. REG.9492
SRI SAWBAKIYA INN, 67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.
T.P:- 338165-338166, 338164, Fax:- 338161
கொழும்பு நாட்கள் மட்டும் செல்டெல் No. 072-609388
கல்முனையில் மார்ச் 6,7,8ம் திகதிகளில் சந்திக்கலாம்
T.M.M. பார்மசி - கல்முனை. T.P. 067-29329
கடிதத்தொடர்பு:- Dr. P.Arumugam S.A.M.P.
No. 51/5, Koolavady Road, Batticaloa. SRI LANKA.

BRIGHT NEW METHOD
SPOKEN ENGLISH
பேச்சு ஆங்கிலம்
தபால் மூலமும் நேரிலும் நடைபெறும்



ஆங்கிலம் பேச வேண்டும் என்று விருப்பம்
ஆனால்......
ஏதாவது தவறாகப் பேசி விடுவோமா என்ற தயக்கம், பயம்.
மற்றவர்கள் ஆங்கில மொழியைப் பேசும் போது புரிந்து கொள்ள முடிகிறது
ஆனால் பேசும் போது தயக்கம்
இது தானே உங்கள் பிரச்சினை
கவலையை விடுங்கள்!
மிக குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் பேசப் பழக முடியும்
நேரில் கற்க விரும்புவோர் தொலைபேசி மூலமோ, நேரிலோ தொடர்புகொள்ளவும். தபால்மூலம் கற்க விரும்புவோர் கீழ்க்காணும் விண்ணப்பப்படிவத்துடன் சுயவிலாசமிடப்பட்ட தபாலுறையுடன் தொடர்பு கொள்ளவும்.
பெயர்: ........................
விலாசம்: ........................
BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S- 27 FIRST FLOOR, COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX. P.O. BOX NO: 162, COLOMBO - 11 TELE: 434770, 074 - 718592




இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 26.05.1934

நாவற்குழி

இறைவடி: 16.02.1997

கனடா

முத்துராஜா சித்திரா

எங்கள் உயிரினும் மேலான அன்னையே நீங்கள் எங்களை விட்டு மறைந்து இரண்டு ஆண்டுகளானாலென்ன எங்கள் உயிருள்ள வரை நீங்கள் எங்களுக்காக செய்த தியாகங்களை மறக்க முடியுமா? நீங்கள் காட்டிய வழியினிலே வாழ்ந்து வருகிறோம். கனவினில் வந்தீர்கள். கைகளில் தவழ்கிறோம். உங்கள் இனிய நினைவுகள் எங்களை விட்டு பிரியாது அம்மா!

தகவல்: மக்கள், மரு மக்கள், பேரப்பிள்ளைகள்


NISACO STEEL FURNITURE



Special Discount on This Month Only
Open on Every Sunday 8.am to 8.pm
நிசாகோ இன்டஸ்ட்ரீஸ்
301, ஆஸ்பத்திரி வீதி, களுபோவில, தெஹிவல. Tel : 074-201727 Fax : 075-515168
(Opposite Buddagosha Vidyalaya)
FACTORY & SHOW ROOM
Millagaha Estate, Aturugiriya Road-Hokandara North, Hokandara. Tel: 561367
(Near the telecommunication Exchange Hokandara)

www.padippakam.com

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

வன்னியில் கடந்த ஐந்து மாதங்களாக பாரிய சமர்கள் இடம் பெறவில்லை.

இது புயலுக்கு முந்திய அமைதிதான். இரு தரப்புமே அடுத்த கட்ட நடவடிக்கைக்காக தயாராகி வருகின்றன.

பருவ மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம் இப்போதுதான் ஓரளவு தணிந்திருக்கிறது.

பருவமழைக் காலத்தை இரு தரப்பும் தமது அணிகளை புனரமைப்பதற்கு பயன்படுத்திக் கொண்டன.

விடுதலைப் புலிகள் தமது புதிய அணிகளுக்கு பயிற்சிகள் கொடுத்து தயார்ப்படுத்தி வருவதோடு, மருந்துப் பொருட்கள் போன்றவற்றை களஞ்சியப் படுத்துவதிலும் ஈடுபட்டு வருகின்றனர்.


தமிழகத்தின் கரையோரங்களுக்கு விரைந்து சென்று அங்கிருந்து மருந்துப் பொருட்களையும், மருத்துவ உபகரணங்களையும், டீசல் போன்றவற்றையும் கடற்புலிகள் கொண்டுவந்து சேர்த்துள்ளனர்.

கடந்த மூன்றுமாத காலமாக தமிழ்நாட்டுக்கும் நாச்சிக்குடாவுக்கும் இடையே ஒடுப்பட்டுத்திரிந்த கடற்புலிகளது படகுகள் அவசியமான பொருட்களை கொண்டுவந்து சேர்த்துள்ளன.

இரண்டு நாசமாகின. அவற்றில் இருந்த கடற்புலிகளும் பலியாகினர். அந்த இரண்டு படகுகளில் ஒன்று தமிழ்நாட்டிலிருந்து மருந்துப் பொருட்களுடன் வந்த படகு. இன்னொன்று உதவிக்கு விரைந்த படகு.

மருந்துப் பொருட்களுடன் வந்த இன்னொரு படகு தப்பிச் சென்றுவிட்டது. உதவிக்கு விரைந்த கடற்புலிப் படகுகளில் மேலும் ஒரு படகுக்கு சிறு சேதம். அப்படகில் இருந்த கடற்புலிகளில் சிலரும் பலியாகினர்.

மொத்தம் 13 கடற்புலிகள் பலியானார்கள். ஒரு படகு முற்றாக மூழ்கியது. மற்றொரு படகு செயலிழந்த நிலையில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.



சற்றலைற் தொலைபேசியுடன் இணைக்கப்பட்ட ஃபக்ஸ் மற்றும் கம்பியூட்டர்

குறுக்கீடுகள் சகல துறைகளிலும் யாழ் குடாநாட்டில் நிலவுகின்றன.

யாழ் குடாநாட்டில் நடப்பது சிவில் நிர்வாகமல்ல, இராணுவ நிர்வாகமே என்பதற்கு இதுவும் ஒரு உதாரணம்.

இதனிடையே புலிகள் முல்லைத்தீவில் தனியான தொலைபேசி சேவை நடத்தி வருகின்றனர்.

கடந்த இரண்டு மாதகாலமாக தமது தொலைபேசி சேவையை பொது மக்களும் பயன்படுத்த புலிகள் அனுமதித்துள்ளனர்.

146 வது முரசில் (மார்ச் 24-30 1996) 'வானத்தில் ஒரு இரகசியம், இலண்டனில் கேட்கும் பிரபாவின் குரல்' என்ற தலைப்பில்

சற்றலைற் தொலைபேசியின் பரிவர்த்தனை நிலையம் வெளி நாடொன்றில்தான் இருக்கும். எனவே, வன்னியில் இருந்து கொழும்புக்கு அழைப்பு எடுத்தால், வெளிநாட்டிலிருக்கும் பரிவர்த்தனை நிலையம் சென்றுதான் தொடர்பு வரும். அதனால்தான் கட்டணம் அதிகம்.

ஒரு நிமிஷத்திற்கு குறைந்த பட்சம் 200 ரூபாய் செலவாகும்.

பிரபாகரனால் ஜனாதிபதி சந்திரிக்காவுடனும் தொலைபேசியில் உரையாட முடியும். உலகின் எந்த மூலைக்கு வேண்டுமானாலும் அங்கு தொலைபேசி இருந்தால் புலிகளால் தொடர்பு கொள்ள முடியும்.

சற்றலைற் தொலைபேசி ஒரு சூட்கேஸ் வடிவத்தில் இருக்கும். இதனை எங்கு வேண்டுமானாலும் சுலபமாக எடுத்துச் செல்ல முடியும்.

காலநிலை சீர்கேடுகள் இதனை பாதிக்காது. இதனை வழிமறித்து ஒட்டுக் கேட்கவும் முடியாது.

வெளிநாடுகளில் உள்ள முக்கியமான பிரமுகர்களுடன் இதன் வழியேதான் பிரபா தொடர்பு கொண்டு பேசுகிறார்.

தற்போது புலிகள் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் பொதுமக்கள் பாவனைக்கு விட்டுள்ள சற்றலைற் தொலைபேசியின் இலக்கம்: 00873761912759.

நாடுகள் ஒவ்வொன்றுக்கும் தொலைபேசி அழைப்புக்களுக்கான 'கோட் நம்பர்' இருக்கும்.

புலிகள் குதித்துள்ளனர். அதனால் தொலைபேசிக் கட்டணச் செலவு அதிகமாகியிருக்கிறது.

அதனை ஈடுகட்டவே புதுக்குடியிருப்பில் தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றைத் திறந்து பொதுமக்களின் பாவனைக்காக அனுமதித்து, கட்டணம் அறவிடுகின்றனர்.

அதுதவிர, யாழில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் உட்பட பல குடும்பங்கள் தொழில் இன்றி அவதிப்படுகின்றன.

வெளிநாடுகளில் உள்ள தமது உறவினர்களைத் தொடர்பு கொள்ளவும், பண உதவிகள் பெறுவதற்கும் தொலைபேசி தேடி வவுனியா நகருக்கே அவர்கள் செல்ல வேண்டியுள்ளது.

அதனால் அவர்களுக்கு உதவும் விதமாகவும் தாமே தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றை புலிகள் திறந்துள்ளனர்.

அரசாங்கம் தணிக்கையை கொண்டு வந்து ஒன்பது மாதங்களாகப் போகின்றன.

உள்நாட்டில் பி.பி.சி. போன்ற வானொலிகளை கேட்காத, சாதாரண சிங்கள பாமர மக்களுக்கு வேண்டுமானால் உண்மைச் செய்திகள் சென்றடையாமல் ஓரளவு தடுக்கலாம். வேறு பயன் யாதுமில்லை.

பிரசாரப் போரில் தற்போது புலிகளது கைகளே ஓங்கத் தொடங்கியுள்ளன. ஏனெனில் அரசாங்கம் நிறைய பிடி கொடுத்து மாட்டிக்கொண்டிருக்கிறது.

□□□

ஈ.பி.டி.பி. பிரதேச சபை உறுப்பினர்கள் மூன்றுபேர் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

ஒருவர் வடமராட்சியிலும், ஏனைய இருவர் கோப்பாய் தொகுதியிலும் வைத்து கொல்லப்பட்டுள்ளனர்.

மூவருமே ஈ.பி.டி.பி. உறுப்பினர்களல்ல. உள்ளூராட்சி சபை தேர்தல் முடிந்ததும் தமது உறுப்பினர்கள் சிலருக்கு பதிலாக, தமது ஆதரவாளர்களை உள்ளூராட்சி சபைகளுக்கு நியமித்தது ஈ.பி.டி.பி.

ஈ.பி.டி.பி மட்டுமன்றி ஈ.பி.ஆர்.எல்.எஃப், புளொட் ஆகிய அமைப்புக்களும் வெளியாட்களை நியமித்திருக்கின்றனர்.

புலிகள் குறிவைக்கத் தொடங்கியதும், 'வெளியாட்கள் விரும்பினால் ராஜினாமா செய்யலாம்' என்றும், தமது கட்சி உறுப்பினர்கள் மூலம் அந்த வெற்றிடங்களை நிரப்புவோம் என்றும் ஈ.பி.டி.பி. அமைப்பு கூறியிருந்தது.

# கடற் புலிகளின் களஞ்சியப்படுத்தல்

இக் காலப்பகுதியில் கடற் படையினருக்கு எதிரான பாரிய தாக்குதல்களில் கடற்புலிகள் ஈடுபடாததும் அதனால்தான்.

புலிகளின் கப்பல் ஒன்று முல்லைத்தீவுக்கு வந்து மருந்துப் பொருட்களை இறக்கிவிட்டு போனதாக படைத்தரப்பு கூறிக்கொண்டிருக்க, கடற்புலிகள் தமது படகுகளில் தமிழ்நாட்டிலிருந்து மருந்துப் பொருட்களை கொண்டுவந்து போதுமானளவு களஞ்சியப் படுத்தியுள்ளனர்.

களஞ்சியப்படுத்தல் முடியும் தறுவாயில்தான் கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையில் மோதல் நடந்திருக்கிறது.

வழக்கம்போல தமிழ்நாட்டிலிருந்து மருந்துப் பொருட்களுடன் நாச்சிக் குடா நோக்கி விரைந்து வந்த கடற்புலிப் படகுகள் இரண்டை கடற்படை ரோந்துப் படகுகள் கண்டுள்ளனர்.

அடிக்கடி தமிழகம் சென்று வந்ததால், கடற்புலிகள் சற்று அலட்சியமாகவே வந்துள்ளனர்.

கிட்டத்தில் வைத்தே ரோந்துப் படகுகளை கண்டுள்ளனர். கடற்புலிப் படகு ஒவ்வொன்றிலும் 200 குதிரை வலு கொண்ட இயந்திரங்கள் பூட்டப்பட்டு இருந்தமையால், சுழன்று திரும்பி போக்குக் காட்டி ஓடத் தொடங்கின.

படகில் இருந்த தொலைத் தொடர்பு சாதனம் மூலம் நாச்சிக்குடா கடற்புலித் தளத்துக்கு தகவல் அனுப்பினர்.

தகவல் கிடைத்ததும் கடற்புலிப் படகுகள் நான்கு விரைந்து வந்தன.

தமிழ்நாட்டு கடற்பகுதியில் இருந்து கச்சதீவு வழியாகவே கடற்புலிப் படகுகள் வந்துகொண்டிருந்தன.

கடற்படைப் படகுகள் துரத்தியதால் நெடுந்தீவு நோக்கி கடற்புலிப் படகுகள் இரண்டும் விரைந்தன.

உதவிக்கு விரைந்த கடற்புலிப் படகுகள் நெடுந்தீவுக்கு ஏழுமைல் தூரத்தில் கடற்படை ரோந்துப் படகுகளை எதிர்கொண்டன.

கடற்பரப்பில் கடும் சமர் மூண்டது. அதிகாலை மூன்று மணியளவில் ஆரம்பித்த சமர் ஐந்துமணிவரை நீண்டது.

கடற்படையினர் விமானப் படையினருக்கு தகவல் கொடுத்தனர். விமானப் படை விமானம் கடற்பகுதி நோக்கி விரைந்தது. கடற்புலிப் படகுகளை குறிவைத்து வட்டமிட்டது.

விமானம் வந்ததும் கடற்புலிப் படகுகள் நாச்சிக்குடா நோக்கி விரையத் தொடங்கின.

விமானத்தில் இருந்து கடற்புலிப் படகுகளை நோக்கி குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. கடற்படை படகுகளும் தாக்குதல் நடத்தின.

இத் தாக்குதலால் கடற்புலிப் படகுகள்

அப்படகுக்குள் படுக்கை விரிப்புக்களும், மருந்துப் பொருட்களும் காணப்பட்டன. எனினும் அப் படகை கரைக்கு கொண்டுவந்ததாக தெரியவில்லை.

படகை கொண்டுவரும் முயற்சியில் நேரதாமதம் செய்தால், கடற்புலிகளின் தாக்குதலுக்குள் சிக்க நேரலாம் என்று படகை அப்படியே மூழ்கவிட்டிருக்கவும் கூடும். அதுபற்றி உறுதி செய்ய இயலவில்லை.

அப்படகு 32 அடி நீளமானது. கண்ணாடி இழையால் செய்யப்பட்டது என்று கடற்படை வட்டாரங்கள் கூறியுள்ளன. தமது தரப்பு இழப்பு தொடர்பாக கடற்படையினர் எதனையும் கூறவில்லை.

கடற் புலிகள் தரப்பில், பாலசுப்பிரமணியம் மோகனதாஸ்-கிளிநொச்சி, கந்தசாமி குணாளன்-கிளிநொச்சி, முருகவேல் சாரதீபன்-யாழ்ப்பாணம், செல்லையா சுந்தர்ராஜன்-கிளிநொச்சி, லிங்கரத்தினம் சசிகலா-யாழ்ப்பாணம், நல்லலிங்கம் நாகராசா- கிளிநொச்சி, சந்தனம் பிரதீபன்-முல்லைத்தீவு, மகேந்திரன் ஞானச் செல்வம்-கிளிநொச்சி, அருளானந்தன் விமலராஜ்- யாழ்ப்பாணம், சிவலிங்கம் சிவனேசன்-புதுக்குடியிருப்பு, பஸ்தியாம்பிள்ளை சுபேந்திரன்-யாழ்ப்பாணம், கயம்பு புவனேந்திரன்-முல்லைத்தீவு, வித்தியா முல்லைத்தீவு- ஆகியோரே பலியாகியுள்ளனர்.

கடற் புலிகளுக்கு இது பெரும் இழப்புத்தான். சமீபகாலத்தில் கடற்பரப்பில் தொடர் இழப்புக்களை கடற்புலிகள் சந்தித்து வருகின்றனர்.

களஞ்சியப்படுத்தல் நடவடிக்கைகளின் பின்னர் பதிலடி நடவடிக்கையில் கடற்புலிகள் ஈடுபடவுள்ளதாக தெரிகிறது.

–★–

**யாழ்** குடாநாட்டில் தொலைபேசி இணைப்பை ஒருவர் பெறவேண்டுமாயின், அவர் புலியல்ல என்று பாதுகாப்பு தரப்பினர் உறுதி செய்ய வேண்டும். அதன் பின்னரே இணைப்பு கிடைக்கும்.

பாதுகாப்பு என்ற போர்வையில் சகல விடயங்களிலும் தமது மூக்கை நுளைக்கவே பாதுகாப்புத் தரப்பு முற்படுகிறது. அதுதான் உண்மையான காரணம்.

புலிகளிடம் தொலைத் தொடர்பு சாதனம் இருக்கிறது. யாழில் இருந்து தொடர்புகொள்ள தொலைபேசியை நம்பியிருக்க தேவையில்லை.

அது மட்டுமல்ல, யாழில் தனியார் தொலைபேசி நிறுவனங்கள் உள்ளன. நாணயம் போட்டு பேசும் தொலைபேசியும் இருக்கிறது. அவற்றை யார் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம். புலிகள் நாணயக் குற்றி போட்டால் தொலைபேசி இயங்காதா என்ன?

எனவே, தொலைபேசி இணைப்பு பெறுவதற்கு படையினர் உறுதிப்படுத்தல் செய்வது என்பது தேவையற்ற குறுக்கீடு. இத்தகைய

சற்றலைற் தொலைபேசி பற்றி விபரமாக தெரிவித்திருந்தோம்.

அப்போது அதனை கற்பனை என்று நினைத்தவர்களும் உள்ளனர். புலிகளாவது சற்றலைற் தொலைபேசி பாவிப்பதாவது? என்று கேள்விக் குறி போட்டனர். ஆனால் அப்போது கூறியது இப்போது யாவரும் அறிந்த உண்மையாகியுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளாக புலிகள் சற்றலைற் தொலைபேசியை பாவித்து வருகின்றனர்.

புலிகளது சற்றலைற் தொலைபேசிக்கான பரிவர்த்தனை நிலையம் எந்த நாட்டில் உள்ளது என்பதை கோட் நம்பரை வைத்து கண்டறிய முடியாது.

ஏனெனில் கப்பல்களில் உள்ள சற்றலைற் தொலைபேசிகளுக்கு வழங்கப்படும் கோட் நம்பரே புலிகளது சற்றலைற் தொலைபேசிக்கு வழங்கப்பட்டுள்ளது.

கப்பல்களிலும் இதே போன்ற சற்றலைற் தொலைபேசிகளே உள்ளன.

அரசாங்கமோ, படைத்தரப்போ எவ்வாறு

# புலிகளின் சற்றலைற் தொலைபேசி



ஒரு சற்றலைற் தொலைபேசியின் விலை தற்போது பத்து இலட்சம் ரூபாய்கள். இதனை பற்றறியிலும், மின்சாரத்திலும் இயங்க வைக்க முடியும்.

சற்றலைற் தொலைபேசியுடன் ஃபக்ஸ் வசதி, கம்பியூட்டர் வசதி போன்றவையும் இணைந்திருக்கின்றன.

வன்னியிலிருந்து இண்டர் நெட் வழியாக புலிகளது செய்திகள் தற்போது உலகெங்கும் ஊடுருவுவது அதனால்தான்.

வன்னியில் இருந்து கொழும்புக்கு தொலைபேசி அழைப்பு எடுத்தாலும், வெளிநாடொன்றுக்கு அழைப்பு எடுப்பதற்கான செலவுதான் ஏற்படும்.

முயன்றாலும், புலிகளது சர்வதேச தகவல் தொடர்பை நிறுத்தவும் முடியாது. குறுக்கிடவும் முடியாது.

அதி நவீன தொலைத் தொடர்புகளை புலிகள் பயன்படுத்திக் கொண்டிருக்கையில், சாதாரண தொலைபேசிகளுக்கு அனுமதி வழங்குவதற்கு புலியா? சிங்கமா? என்று பாதுகாப்பு தரப்பு பரிசீலனை நடத்துவதுதான் வேடிக்கை.

சற்றலைற் தொலைபேசி ஊடாகவும், இன்டர்நெற் ஊடாகவும் வெளிநாடுகளுக்கு ஏராளமான தகவல்களை புலிகள் அனுப்பி வருகின்றனர்.

இன்டர்நெற் ஊடான பிரசாரப் போரிலும்

**நாரதர்**

இயக்க உறுப்பினர்கள் என்றால் முகாம்களில் இருந்து கொள்ளலாம். அவதானமாக நடமாடலாம்.

யாழில் பெரும்பாலான உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் இயக்க உறுப்பினர்களாக இருப்பதும், அவர்கள் தப்பி இருப்பதற்கு ஒரு காரணம்.

நாம்தான் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் என்று பகிரங்கமாக இனம் காட்டிக் கொண்டு யாழில் நடமாட முடியாது. சுருக்கமாகச் சொல்வதானால் உள்ளூராட்சி சபைகள் இயங்க முடியாது.

சமீபத்தில் கொல்லப்பட்ட பிரதேச சபை உறுப்பினர்கள் இருவருமே ஊருக்குள் நன்கு தெரிந்தவர்கள். கோப்பாயில் புலிகள் நடமாடுவது தெரிந்த பின்னரும், இவர்கள் தொடர்ந்து ஊருக்குள் சுதந்திரமாக நடமாடியதுதான் ஆச்சரியம்.

02.02.99 அன்று திருநாவுக்கரசு என்னும் ஈ.பி.டி.பி. பிரதேச சபை உறுப்பினர் கோப்பாய் தொகுதியில் வைத்து கொல்லப்பட்டார். அதன்பின்னரும் அதே கோப்பாய் தொகுதியில் பண்டாரி கந்தசாமி என்னும் மற்றொரு பிரதேச சபை உறுப்பினர் சுதந்திரமாக நடமாடினார். சுலபமாக குறிவைத்து விட்டனர்.

அதற்கு சில நாட்களிற்கு முன்னர்தான் கோப்பாய் இருபாலைப் பகுதியில் ரெலோ இயக்கத்தினர் சென்ற வாகனம் மீது புலிகள் கைக்குண்டு வீசினார்கள். குதித்தோடியதால் ரெலோ உறுப்பினர்கள் உயிர் தப்பினார்கள்.

உள்ளூராட்சி சபை உறுப்பினர்களை நோக்கிய புலிகளது குறிவைப்பு இத்தோடு நிற்கப்போவதில்லை.

# அதிரடி அய்யாத்துரை



***மாகாண சபைகளுக்கான*** தேர்தலை ஏப்ரல் முதலாம் திகதி என்று அறிவித்தது மெத்தச் சரி. வாக்காளர்களை முட்டாள்களாக்கும் தினம்தானே! இந்தத் திகதியை முதலில் தீர்மானித்தது யார் என்று தெரியவில்லை. தெரிந்தால் அவரது நேர்மையை பாராட்டலாம். அதிகாரத் தரப்பாருக்கும் வசதிதான். பச்சை அணி வெற்றி பெற்றால், வாக்காளர்கள் முட்டாள்களாகி விட்டதாகக் கூறலாம். ஒரு வேளை அதுக்காகத்தான் அப்படி திகதி குறிக்கப்பட்டதோ?!

***அதிகாரத் தரப்பாரும்*** தேர்தல் சீர்திருத்தம் தேவை என்று கூறுகினம். முறைகேடுகளைத் தடுக்க வேணும் என்று சொல்லுகினம். எதிரணியும் அதைத்தான் கூறுகினம். எனக்கொரு சந்தேகம். அப்படியானால் வடமேல் மாகாண சபையில் பெட்டிகளை நிரப்பியது யார்? சந்திர மண்டலத்திலிருந்து வந்த ஆட்களோ?

***வன்னிக்கு*** பிக்குமார் சென்று வந்தனரல்லோ? அவர்களிடம் திருபர் ஒருவர் கேட்ட கேள்வி: "சண்டை போட வேண்டும் என்றும் பிக்குமார்கள்தானே கோருகிறார்கள்?" அந்தக் கேள்விக்கு அவர்கள் சொன்ன பதில் அட்டகாசம். "சண்டை போடுமாறு பௌத்தம் ஒருபோதும் சொன்னதில்லை. அப்படிக் கூறுகிறவர்கள் பிக்குமார்களே அல்ல!" என்றனராம். "இவர்கள் தம்முடன் இந்து, இஸ்லாமிய குருமாரை ஏன் கூட்டிப் போகவில்லை?" என்று சிலர் கேட்கினம். போய் வந்திருந்தால் உள்ளேயல்லோ போயிருக்கவேணும்!

***பிரபல தமிழ்*** வர்த்தகரை ரெண்டு எழுத்தார் என்று கூறி கம்பி எண்ண வைத்திருக்கினம். இது போட்டியால் ஏற்பட்ட முத்திரை குத்தல் என்று கூறியிருந்தேனல்லோ? இப்போது அவர் விடுதலை. ஒரு கோடிரூபாய் நஷ்ட ஈடு கேட்டிருக்கிறார். மிகப்பெரிய இடத்தில் பணியாற்றும் ஒருவர்தான் வியாபாரப் போட்டியில் மாட்டிவிட்டதாகத் தகவல்.

***வவுனியாவில் என்னதான்*** நடக்கிறது? என்று மனித உரிமை அமைப்புக்கள் கழுத்தில் பிடிக்காத குறை. அதனால்தான் இரு இயக்கங்களையும் கட்டுப்படுத்தும் நடவடிக்கை எடுக்குமாறு மேலிடத்தில் இருந்து பணிக்கப்பட்டதாம். குளத்தை கலக்கி பருந்துக்கு கொடுத்த நிலையில் நிற்கினம் இரண்டு இயக்கங்களும்.

***யாழ்ப்பாணத்தில்*** சிவராத்திரிக்கு கீரிமலை நகுலேஸ்வரம் போவதற்கு பக்தர்கள் விரும்பினார்களாம். வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையோடு மட்டும் அனுமதி கொடுக்கப்பட்டதாம். "ஆண்டவனிடம் போவதற்கும் கட்டுப்பாடு. விடுவிக்கப்பட்ட பிரதேசம்" என்று சொல்லுகினம். பின்னர் ஏன் இந்த வரையறுப்பு? ஆண்டவன் என்பது கடந்தகாலம். ஆள்பவர் என்பது நிகழ்காலம். இப்போது ஆள்பவர்களுக்கு ஆண்டவனைவிட சக்தி அதிகம்தானோ?

***இந்தி நடிகர்*** அமிதாப் பச்சன் கொழும்புக்கு வந்தவரல்லோ? அவருக்கு அதிரடிப்படையினர்தான் பாதுகாப்புக் கொடுத்தவை. அதற்கு நடிகர் என்பது மட்டும் காரணமல்லவாம்: ராஜீவ் காந்தியின் குடும்ப நண்பர் என்பதும் காரணமாம். 'சரியாகப் பாதுகாப்பு கொடுக்கவில்லை' என்று சோனியா அம்மணியின் கோபத்தைக் கிளறக்கூடாதல்லோ? அதுதான்!

***வவுனியாச் சண்டையை*** தமிழ்க் கட்சி நண்பர் ஒருவர் தேங்காய் சண்டை என்று வர்ணித்தாராம். ஏன்? என்று கேட்டதற்கு "தேங்காய்க்கும், மாங்காய்க்கும் வரி கேட்டுத்தானே மோதுப்படுகினம்..?" என்று கூறினவராம்.

***இந்தியாவில் இருந்தபோதுதான்*** தலைமறைவாக இருந்தார். இங்கும் தலை மறைவுதானோ? என்று பத்திரிகையாளர்கள் கேட்கினம். தேர்தல் முடிந்ததும் வாய் திறந்தால் பத்திரிகைகள் கூறியது உண்மையாகிவிடும் என்றுதான் மௌனமாக இருக்கிறாராம். தன் பிடியில்தான் இருக்கிறது என்று காட்டுவதுபோல, செயலாளர் தன் பெயரில் அடுத்தடுத்து அறிக்கைகள் விடுத்திருக்கிறார். பிடி தளர்ந்திருப்பது உண்மையிலும் உண்மை. தலைமறைவாக இருப்பவர் வெளியே தோன்றும்போது கேள்விகளால் துளைக்க பத்திரிகையாளர்கள் வாள்களைத் தீட்டி வைத்திருக்கினமாம்.

***முன்னாள் அமைச்சர்*** அஸ்வர் அவர்கள் தனது பெயர் முத்திரையை சிங்களத்தில் மட்டும் பொறித்து அனுப்பியதாக சுட்டிக் காட்டினோம் அல்லவா? தவறுக்கு வருந்தி தமிழில் பெயர் முத்திரையும் தன்னிடம் இருப்பதாக பொறித்து அனுப்பியுள்ளார். தவறை ஒப்புக்கொண்டது பாராட்டத்தக்க செயல்!

***இவ்வாரம் ஒரு கவிதை:*** விகவின் அரட்டை அரங்கில் கேட்டது.

"ஆசையை
அனைவரும்
துறக்க வேண்டும்
என்று
புத்தர்
ஆசைப்பட்டார்!"



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

## பெரம்புதூர் பயங்கரம்




இந்திய புலனாய்வுப் பிரிவு (ஐ.பி) மே 18, 1991 அன்று ஒரு எச்சரிக்கையை பொலிஸ் துறைக்கு அனுப்பியது.

அப்போது அதனை யாரும் பொருட்டாக எடுக்கவில்லை. அந்த எச்சரிக்கையை அலட்சியம் செய்ததின் விளைவை பின்னர் தான் உணர்ந்தனர்.

'ராஜீவை கொல்ல முயற்சிகள் நடக்கலாம். தேர்தல் கூட்டம் ஒன்றில் வைத்து தீர்த்துக் கட்ட சில சக்திகள் முயற்சிக்கலாம்.

அவருக்கு மாலைகள் போடப்படுவதற்கும், பூங்கொத்துக்கள் தரப்படுவதற்கும் முன்பு சோதனை செய்யப்பட வேண்டும். கூட்டத்தில் போதுமான தடுப்புக்கள் இருக்க வேண்டும்.' என்று எச்சரித்திருந்தது ஐ.பி.

ஸ்ரீபெரம்புதூரில் கூட்டம் நடைபெறவுள்ளதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்திக்கு காங்கிரஸ் தலைமையிடம் இருந்து தகவல் கிடைத்தது.

பெரம்புதூரில் காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிட்டவர் மரகதம்சந்திரசேகர்.

அந்த அம்மணிக்கும், வாழப்பாடி ராமமூர்த்திக்கும் ஒத்துப் போவதில்லை.

தமிழக காங்கிரஸ் தலைவர் பதவிமீதும் அம்மையார் ஒரு கண் வைத்திருந்தார்.

தமிழக காங்கிரசில் வாழப்பாடி கோஷ்டி, மூப்பனார் கோஷ்டி இரண்டும் பிரதானமானவை. ஒரே கட்சியில் இருந்தாலும் எலியும், பூனையும்போல இருந்தனர்.

அவர்களுடன் பல சிறு கோஷ்டிகளும் இருந்தன. மரகதம் சந்திரசேகருக்கும் சிறு கோஷ்டி இருந்தது.

மூத்தவர், நீண்டகாலமாக காங்கிரஸில் இருப்பவர் என்று அவருக்கு ராஜீவ் மரியாதை கொடுத்தார். அதனால் அவர் போட்டியிடும் தொகுதியான பெரம்புதூருக்கு சென்று பிரசாரம் செய்ய இசைந்தார்.

பெரம்புதூர் காஞ்சிபுரத்துக்கு அருகே இருக்கிறது. மக்கள் நடமாட்டம் குறைந்த பகுதி. வீடுகள்கூட அங்கொன்றும், இங்கொன்றுமாக இருக்கும்.

அவ்வாறான ஒரு பகுதிக்கு ராஜீவை அழைத்துச் செல்வது வசதிக் குறைவானது என்று கருதிய வாழப்பாடி, உடனடியாக ஒரு ∴பக்ஸ் செய்தி அனுப்பினார்.

டில்லியில் உள்ள காங்கிரஸ் தலைமைக் காரியாலயத்திற்கு மே 19ம் திகதி அந்த ∴பக்ஸ் அனுப்பப்பட்டது.

"ஸ்ரீ பெரம்புதூரில் ராஜீவ் காந்தி தங்குவதற்கு வசதிகள் கிடையாது. எனவே சென்னையில் தங்குவதுதான் நல்லது." என்று தெரியப்படுத்தியிருந்தார் வாழப்பாடி.

அந்த செய்தி ராஜீவ் காந்தியிடம் தரப்பட்டது. வசதி குறைவாக உள்ளது என்ற வாக்கியத்திற்கு எதிரே, SO WHAT (அதனால் என்ன?) என்று எழுதினார் ராஜீவ்.

வாழப்பாடி கூறியதை காங்கிரஸ் தலைமையகமோ, ராஜீவ் காந்தியோ கேட்டிருக்கலாம். கேட்கவில்லை.

"அந்த இடத்தில் கூட்டம் நடத்துகிறீர்களே. மக்கள் வருவார்களா? கூட்டத்தை இரத்துச் செய்யுங்கள்" என்று மரகதம்சந்திரசேகரிடம் கட்சிக்காரர்கள் சிலர் கூறினார்கள்.

அவரும் கேட்டிருக்கலாம்; கேட்கவில்லை.

மே 21ம் திகதி மாலையில் தமிழக ஆளுநரை காங்கிரஸ்காரர்கள் சிலர் சந்தித்தனர். அவர்கள் மரகதம் சந்திரசேகருக்கு வேண்டாதவர்கள்.

தமது தொகுதிக்கு வராமல் மரகதம் சந்திரசேகரின் தொகுதிக்கு மட்டும் ராஜீவ் வருவதா? என்ற பொறாமை.

பெரம்புதூரில் பாதுகாப்பு கொடுப்பது கடினம். அங்கு கூட்டம் நடத்துவது ராஜீவுக்கு ஆபத்து என்று ஆளுநரிடம் முறையிட்டனர்.

ஆளுநராவது கேட்டிருக்கலாம். கேட்கவில்லை. காங்கிரஸ் கோஷ்டிப் பூசலின் எதிரொலிதான் இதெல்லாம் என்று நினைத்து அலட்சியப்படுத்தி விட்டார்.

### புறப்பட்டபோது

ராஜீவ் காந்தியின் பிரசாரத்திற்காக நாடெங்கும் காங்கிரஸ் கட்சியினர் காத்திருந்தனர்.

ராஜீவ் காந்தியிடம் ஒரு பழக்கம் இருந்தது. பத்திரிகையாளர்களையும் தன்னுடன் விமானத்தில் அழைத்துச் செல்லுவார். வானத்தில் வைத்தே பேட்டி கொடுப்பார்.

ராஜீவ் காந்தியுடன் பல்கேரிய நாட்டு தொலைக்காட்சிப் பத்திரிகையாளர்கள் விமானத்தில் சென்றனர். ராஜீவ் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளை 'வீடியோ' படம் எடுப்பதே அவர்களது பணி.

புதுடில்லியிலிருந்து ஆந்திரா மாநிலம் சென்று, அங்கிருந்து தமிழ்நாட்டுக்கு செல்வதாக ஏற்பாடு.

ஆந்திராவில் ராஜீவ் சுற்றுப் பயணம் செய்ததோடு, பொதுக் கூட்டங்களிலும் கலந்து கொண்டார்.

ஆந்திராவில் பிரசாரத்தை முடித்துக் கொண்ட ராஜீவ் காந்தி சென்னை வருவதற்காக விமான நிலையம் சென்றார்.

ராஜீவ் புறப்பட இருந்த விமானம் புறப்பட மறுத்தது. அதில் இயந்திரக் கோளாறு.

அதனால் ராஜீவ் காந்தி தான் தங்கியிருந்த 'சர்க்யூட் ஹவுஸுக்கு' திரும்பினார்.

விமானம் துரிதமாக பழுதுபார்க்கப்பட்டது. அப்போது ஆந்திராவில் காங்கிரஸ் ஆட்சி. அதன் முதல்வராக இருந்தவர் விஜயபாஸ்கர ரெட்டி.

விமானம் திருத்தப்பட்டு விட்டது என்று முதல்வர் ரெட்டி ராஜீவுக்கு தெரிவித்தார். உடனே ராஜீவ் விமான நிலையம் திரும்பினார்.

இந்த தாமதங்களால் பல்கேரிய பத்திரிகையாளர்களும், ராஜீவ் காந்தியின் நம்பகமான பாதுகாப்பு அதிகாரியான சாகரும் விமானத்தை தவறவிட்டனர். ராஜீவுடன் பயணம் செய்ய அவர்களால் முடியவில்லை.

சென்னை விமான நிலையத்தில் ராஜீவ் காந்திக்கு வரவேற்பளிக்கப்பட்டது. கையசைத்து மகிழ்ச்சி தெரிவித்தபடி உற்சாகமாக காணப்பட்டார்.

### காத்திருப்பு

ராஜீவ் காந்தி பெரம்புதூருக்கு வருவது தாமதமாகிக் கொண்டிருந்தது.

காங்கிரஸ் ஆதரவாளரான லதா கண்ணன், அவர் மகள் கோகிலா ஆகியோருடன் சிவராசன், தாணு, சுபா, ஆகியோர் பெரம்புத்தூருக்கு வந்து சேர்ந்தனர்.

லதா கண்ணன் மரகதம் சந்திரசேகருக்கு மிகவும் வேண்டப்பட்டவர். ராஜீவ் காந்தி பெரம்புதூருக்கு வருவது உறுதி என்ற தகவலை மரகதம் சந்திரசேகர் லதா கண்ணனிடம் கூறியிருந்தார்.

லதா கண்ணனின் மகளான கோகிலா கண்ணன் காங்கிரஸ் கட்சியின் பேச்சாளராகவும் இருந்தவர்.

தம்முடன் நளினியையும் சிவராசன் அழைத்து வந்திருந்தார். சுபாவும் நளினியும் கூட்டத்தோடு சென்று அமர்ந்து விட்டனர்.

சிவராசன் கையில் ஒரு குறிப்பு புத்தகத்துடன் பத்திரிகையாளர் போன்ற தோரணையோடு நின்றுகொண்டிருக்க, அவருக்கு சற்றுத்தள்ளி சந்தன மாலையுடன் தாணு நின்றிருந்தார்.

அந்த சந்தன மாலையை புகைப் படப்பிடிப்பாளர் ஹரிபாபுதான் கடையில் வாங்கிவந்து தாணுவிடம் கொடுத்திருந்தார்.

தாணு படம் எடுக்கும் போது எட்ட நின்று படம் எடுக்க வசதியாக கமராவோடு ஹரிபாபு காத்திருந்தார். யாருக்கும் அவர்கள்மீது சந்தேகம் வரவில்லை.

ராஜீவ் வருவதற்கு முன்பாக சப்-இன்ஸ்பெக்டர் பி.அரியமூர்த்தி என்பவர், "மேடையில் வைத்து யாரும் மாலை போட முடியாது. அதற்கு அனுமதிக்க மாட்டோம்" என்று அறிவித்தார்.

அதனால் ராஜீவ் காந்தி மேடையை நோக்கி வரும்போதே அவருக்கு மாலையிடவும், தோள் துண்டுகள் கொடுப்பதற்கும் தொண்டர்கள் முண்டியடித்தனர்.

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட ராஜீவின் கார் ராமாவரம் தோட்டமருகே நின்று, இரண்டு பெண்களை ஏற்றிக் கொண்டு கிளம்பியது.

அவர்களில் ஒருவர் 'கல்∴ப் நியூஸ்' என்ற பத்திரிகையின் நிருபரான நீனா கோபால். இன்னொருவர் 'நியூ டைம்ஸ்' நிருபர் பாப்ரா க்ரொசெட்.

காருக்குள் வைத்தே அவர்களுக்கு பேட்டி கொடுத்தார் ராஜீவ் காந்தி.

நேரம் இரவு பத்துமணியைத் தாண்டி விட்டது. பெரம்புத்தூர் கூட்டம் நடைபெறும் இடத்தை கார் நெருங்கியது.

'கடைசிக் கேள்வி பாக்கியிருக்கிறது' என்று கூறினார் நீனா.

ராஜீவ் வாழ்க்கையில் அதுதான் கடைசிக் கேள்வி என்று தெரியாமலேயே கேட்டு விட்டார்.

ஆனால் கூட்டத்தை நெருங்கிய பரபரப்பில் ராஜீவ் அவர் கூறியதை சரியாக செவிமடுக்கவில்லை.

காரிலிருந்து துள்ளிக் குதித்து இறங்கினார். பட்டாசுகள் முழங்கின. ராஜீவ் புன்னகையோடு கூட்ட மேடையை நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

ராஜீவை நோக்கி தாணுவும், அவர் முன்பாக லதா கண்ணன், கோகிலா கண்ணன் ஆகியோரும் முன்னேறினார்கள்.

ராஜீவை நோக்கிச் செல்லும் கூட்டத்தினரை தடுக்க பொலிசாரால் முடிய வில்லை.

அவர்கள் ராஜீவ் மேடையை நோக்கிச் செல்லும் பாதையில் இருந்து முப்பதடி தள்ளி பாதுகாப்பு வளையமாக நின்றிருந்தனர்.

அந்தப் பாதுகாப்பு வளையத்தை தாண்டி கூட்டத்தினர் ராஜீவை நெருங்கி மாலைகள் அணிவித்தனர். துண்டுகளை கொடுத்தனர்.

மாலைகளையும், துண்டுகளையும் வாங்கிய ராஜீவ் காந்தி தன் அருகில் நின்ற உதவியாளரிடம் கொடுத்தபடி மேடைய நோக்கி நகர்ந்தார்.

பொலிசார் நின்ற பாதுகாப்பு வளையத்தை தாண்ட யாரும் அனுமதிக்கப்பட்டிருக்காது விட்டால் தாணு ராஜீவை நெருங்கியிருக்க முடியாது.

மிக அருகில் நின்று தாக்கினால் மட்டுமே இலக்கை தகர்க்கக் கூடிய விதமாகவே புலிகள் குண்டை வடிவமைத்திருந்தனர்.

சக்தி கூடிய குண்டாக இருந்தால் கூட்டத்தினருக்கு பெரும் அழிவு ஏற்படும். ராஜீவ்தான் இலக்கு என்பதால், அவரை மட்டும் அழித்தால்போதும் என்பதே உத்தரவு.

தாணுவுக்கு முன்னால் சென்ற கோகிலா கண்ணன் ராஜீவுக்கு துண்டொன்றை கொடுக்க, ராஜீவ் புன்னகையுடன் பெற்றுக் கொண்டார்.

### அடுத்ததாக தாணு

ஆரஞ்சு நிறமும், பச்சையும் கலந்த சல்வார் கமீசுடன் சந்தனமாலை சகிதம் தன்னை நெருங்கும் தாணுவை ராஜீவ் கண்டுவிடுகிறார்.

தாணு நெருங்கி வருகிறார். புகைப்படப் பிடிப்பாளர் ஹரிபாபு அக் காட்சியை படம் பிடிக்கிறார்.

நேரம் 10.15 மணி.

தாணு சந்தன மாலையை ராஜீவிடம் வழங்கிவிட்டு, அவரிடம் ஆசி பெறுவது போல முன்னோக்கி குனிகிறார்.

குனியும் போதே தன் இடுப்பில் உள்ள குண்டின் விசையை அழுத்துகிறார் தாணு.

அதுதான் கடைசித் தருணம். மீள முடியாத தருணம்.

தன்னிடம் ஆசிர்வாதம் வாங்கக் குனிகிறாரோ என்று நினைத்து அவரை நோக்கி ராஜிவ் கைகளை விரிக்கையில், தாணுவே மனிதக் குண்டாக வெடிக்கிறார்.

வெடியோசையுடன் தீப் பிழம்பு எழுகிறது!

ராஜீவ் நின்ற இடம் சூனியமாகத் தெரிந்தது. புகை சூழ்ந்து அடங்கியது.

மக்கள் பயந்து ஓட ஆரம்பித்தனர். ராஜீவ் அருகே நின்ற லதா கண்ணன், அவரது மகள் கோகிலா கண்ணன், உட்பட பதினாறு பேர் குண்டு வெடிப்பில் பலியாகினர். பலர் காயமடைந்தனர்.

தாணு மாலை போடுவதை படமாக்கிக் கொண்டிருந்த ஹரிபாபுவும் குண்டுவெடிப்பில் பலியானார்.

அவரது கமராவும் தரையில் பிணங்கள் மத்தியில் அநாதரவாக விழுந்து கிடந்தது.

ராஜீவ் கொலையில் பல திருப்பங்களை ஏற்படுத்தியதும் அந்த கமரா தான்.

அந்த திருப்பங்களுடனும், புலனாய்வு பற்றிய விறுவிறுப்பான விபரங்களுடனும் அடுத்த வாரம் சந்திப்போம்

(தொடர்ந்து வரும்)



சிவராசன், லதாகண்ணன், தாணு, கோகிலா கண்ணன்



ஹரிபாபு



மேடைக்கு அருகே ராஜீவ் கொல்லப்பட்ட இடம்



கோகிலா துண்டு அணிவிக்க தாணு காத்திருக்கிறார். (தலையில் பூவோடு நிற்பவர்)

www.padippakam.com

# குறுநில மன்னர்களும் அவர்களது துப்பாக்கிகளும்

அலசுவது- இராஜதந்திரி

வவுனியாவில் புளொட், ரெலோ ஆகிய தமிழ் அமைப்புக்கள் இடையே மோதல் வெடித்திருக்கிறது.

ரெலோவைச் சேர்ந்த மூன்று பேரும், புளொட்டைச் சேர்ந்த மாணவர் ஒருவருமாக நான்கு பேர் பலியாகியுள்ளனர். அம்பாள் பஸ் உரிமையாளரும், ஆசிரியர் ஒருவருமாக இரண்டு பொதுமக்களும் இந்த மோதல்களில் சிக்கி பலியாகி உள்ளனர்.

கடந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலில் இந்த இரண்டு அமைப்புக்களும் பொதுப் பட்டியலில் போட்டியிட்டிருந்தன.

பாராளுமன்ற பொதுத் தேர்தல் முடிந்ததுமே இரு அமைப்புக்களுக்கிடையேயும் பிணக்குகள் தலைகாட்டத் தொடங்கியிருந்தன.

விருப்பு வாக்குகளின் அடிப்படையில் புளொட் அமைப்பைச் சேர்ந்த மூன்றுபேரே வவுனியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவாகினர்.

ரெலோ தலைவர் அடைக்கலநாதன் (செல்வம்) சொற்ப வாக்குகள் வித்தியாசத்தால் பாராளுமன்ற உறுப்பினராகும் வாய்ப்பை இழந்திருந்தார்.

அதனால் புளொட் உறுப்பினர் ஒருவருக்கு பதிலாக செல்வத்துக்கு இடமளிக்க வேண்டும் என்று ரெலோ கோரியிருந்தது. அக்கோரிக்கைக்கு செவிசாய்க்க புளொட் மறுத்ததுடன், அதன் உறுப்பினர்கள் மூவருமே பாராளுமன்ற உறுப்பினர்களாகினர்.

அப்போதே, அடுத்த பொதுத் தேர்தலில் வவுனியாவில் புளொட்டை ஓரம் கட்டியே தீருவது என்று ரெலோ முடிவு செய்துவிட்டது.

அதனை குறியாக வைத்தே வவுனியா மாவட்டத்தில் புளொட்டுக்கு ஏட்டிக்குப் போட்டியான வேலைத் திட்டங்களை ரெலோ முன்னெடுக்க தொடங்கியிருந்தது.

பொருட்களுக்கு வரிவசூலிப்பதிலும் இரு இயக்கங்களும் கடும் போட்டியிட்டன. இதனால் வவுனியாவில் இயக்கவரி அறவிடப்படாத பொருட்களே கிடையாது.

விற்பனை வரி, ஜி.எஸ்.ரி, பாதுகாப்பு வரி என்பவற்றுடன் இயக்கவரியும் பொதுமக்கள்மீது திணிக்கப்பட்டது.

புளொட், ரெலோ ஆகிய இரண்டு இயக்கங்களுக்கும் மாதாந்தம் பாதுகாப்பு அமைச்சு நிதி வழங்கி வருகிறது. அந்தந்த இயக்கங்களில் உள்ள உறுப்பினர்களது தொகைக்கு ஏற்ப ஊதியம் போன்றே நிதி வழங்கப்பட்டு வருகிறது.

அவ்வாறு இருந்தும் இயக்கத் தேவைகளுக்கு என்ற பெயரில் மேற்படி இரு அமைப்புக்களும் வரி வசூலிப்பில் ஈடுபட்டு வருகின்றன.

பெப்ரவரி மாத ஆரம்பத்தில் புளொட் அமைப்பினர் திடீரென்று அறிவிப்பொன்றை வெளியிட்டனர். "நாம் இனிமேல் வரி வசூலிக்க மாட்டோம்" என்பதே அந்த அறிவிப்பாகும்.

அந்த அறிவிப்போடு நிறுத்தியிருந்தால் பிரச்சனைகளே ஏற்பட்டிருக்கமாட்டாது. "வேறு இயக்கங்களும் வரி வசூலிப்பதை நிறுத்திக் கொள்ளவேண்டும்" என்றும் புளொட் கூறியிருந்தது.

தமது இயக்கத்துக்கான நிதி வருவாயை தடுப்பதற்காகவே புளொட் மேற்கண்ட அறிவித்தலை வெளியிட்டதாக ரெலோ சீற்றமடைந்தது.

ரெலோவுடன் கலந்தாலோசிக்காது புளொட் தன்னிச்சையாக முடிவெடுத்து அறிவித்தமை ரெலோவை சீண்டும் முயற்சியாகவே அமைந்திருந்தது.

இதேவேளை புளொட் வரிவசூலிப்பதை நிறுத்தியதாக பகிரங்கமாக அறிவித்தாலும்கூட, லொறி பார்க் நடத்துவது, மீன் கடை வசூல் போன்றவற்றை நிறுத்தாமல் தொடர்வதாக ரெலோ குற்றம் சாட்டி இருந்தது.

தேர்தல் நெருங்கி வருவதாலும், வவுனியாவில் நடைபெற்ற சில சம்பவங்களால் மக்களுக்கு ஏற்பட்ட அதிருப்திகளாலும் புளொட் நல்லபிள்ளையாக நாடகமாடுவதுடன், ரெலோமீது மக்களின் அதிருப்தியை திசைதிருப்ப முயற்சிக்கிறது என்பதே ரெலோவின் பிரதான குற்றச்சாட்டாக இருக்கிறது. ரெலோ தலைவர் செல்வம் அவ்வாறுதான் உறுதியாகக் கூறுகிறார்.

கிட்டத்தட்ட பத்தாண்டுகளாக வவுனியாவில் வரிவசூலிப்பில் ஈடுபட்டு வருகின்ற புளொட் அமைப்பினர், தாம் வரி வசூலிப்பை கைவிட்டதாக அறிவித்ததோடு நின்றுவிடாது, ரெலோவையும் நிறுத்துமாறு நிர்ப்பந்தப்படுத்த முனைந்தமையானது, ரெலோவின் குற்றச்சாட்டுக்கு வலு சேர்த்துள்ளது.

அதே சமயம் லொறிப் பார்க், மீன் மார்க்கெட் இரண்டிலும் புளொட் தொடர்ந்து வசூலிப்பு நடத்தியமையும் அந்த அமைப்பின் அறிவிப்புத் தொடர்பான சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளன.

எனினும், வவுனியா மாவட்ட மக்களைப் பொறுத்தவரை எவ்வாறெனினும் இயக்கவரி நிறுத்தப்பட்டால் போதும் என்ற மனோநிலையிலேயே இருக்கின்றனர்.

ஆனால், வரி அறவிடுவதை தாம் கைவிடப்போவதில்லை என்று ரெலோ பகிரங்கமாகவே அறிவித்துள்ளது.

ஏற்கனவே புளொட் உபதலைவர் மாணிக்கதாசன், வவுனியாவில் பொலிசாரையோ இராணுவத்தினரையோ தாம் நம்புவதில்லை என்றும், தாமே விசாரணைகளை செய்வதாகவும் பி.பி.சிக்கு பேட்டியளித்திருந்தார்.

அதுமட்டுமன்றி புலிகள் இயக்கத்தினர் என்று தாம் கைது செய்து விசாரித்ததாகக் கூறி வவுனியாவில் வைத்து சிலரை புளொட் விடுதலை செய்தது.

தாம் தனியாக விசாரணை முகாம்கள் நடத்துவதை புளொட் எவ்வித தயக்கமும் இல்லாமல் வெளிப்படுத்தியிருந்தது.

இப்போது ரெலோ இயக்கத்தினர் தாம் வரிவசூலிப்பதை பகிரங்கமாகவே ஒப்புக்கொண்டுள்ளனர். பி.பி.சி பேட்டியில் ரெலோ தலைவர் செல்வம் அதனை தன் வாயாலேயே ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இந்த விடயங்கள் வவுனியாவில் உள்ள படைத்தரப்பினருக்கும், ஏன் ஜனாதிபதி சந்திரிக்காவரை தெரிந்த விடயங்களேயாகும்.

வவுனியா இராணுவ பிரிகேடியரிடமே ரெலோவினர் தாம் வரி வசூலிப்பதை தொடருவோம் என்று கூறியுள்ளனர். அது தொடர்பாக பிரிகேடியர் தடை எதனையும் கூறாதிருந்துள்ளார்.

எனவே, புளொட், ரெலோ அமைப்புக்கள் படையினருடன் மிக நெருக்கமான உறவை கொண்டிருப்பதாலும், இவர்களது தேவை படையினருக்கு அவசியமாக இருப்பதாலுமே சட்ட வரம்புகளுக்கு அப்பாற்பட்டு செயற்பட இடமளிக்கப்பட்டுள்ளது.

எனினும், எரிபொருள் விநியோக விடயத்தில் படையினரின் விருப்பத்துக்கு மாறாக புளொட் செயற்பட்டதாலும், ஹர்த்தால்கள் நடத்தியதாலும் புளொட்மீது வவுனியா படைத்தரப்பினருக்கு ஏற்பட்ட கசப்பு இன்னமும் தீரவில்லை.

அதனால், ரெலோ, புளொட் மோதலின் பின்னர் புளொட் ஆதரவாளர்கள் பலர் படையினராலும் தாக்கப்பட்டதாக தெரியவருகிறது.

தற்போதைய புளொட், ரெலோ மோதல் படையினருக்கு ஒருபுறம் திருப்தியே, அதேசமயம் மோதல் தீவிரமானால் வவுனியா தமது கட்டுப்பாட்டில் இருப்பதாக கூறிக்கொள்ள முடியாதே என்பதால் மோதல் நடந்த பின்னர் சமரசமும் செய்து வைக்கின்றனர். ஆயினும் ஆயுதங்களோடு தொடர்ந்து நடமாட அனுமதியளித்துமுள்ளனர்.

இரு இயக்கங்களும் ஆயுதங்களுடன் நடமாடத் தடை என்று கொழும்பில் பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் மங்கள சமரவீர கூறியிருந்தார். அச் செய்தி பத்திரிகைகளிலும் வெளியாகியது. ஆனால் ரெலோ, புளொட் உறுப்பினர்கள் பகல் நேரங்களில் ஆயுதங்களுடனேயே நடமாடுகின்றனர்.

ஆனாலும், வவுனியாவில் படையினர் இல்லையானால், ஒருவரை ஒருவர் அழிக்கும் வேகத்துடன் ஒரு முடிவு காணும்வரை இரு அமைப்புக்களும் மோதலில் ஈடுபட்டிருக்கும். வவுனியாவில் இரு அமைப்புக்களில் ஒரு அமைப்புத்தான் இறுதியில் மீதியாக இருந்திருக்கும்.



இந்த மோதல்கள் மூலம், புலிகள் தொடர்பான தமிழ்க் கட்சிகளது பிரதான குற்றச்சாட்டுக்கள் கேலிக்கிடமாகியுள்ளன.

ஏனைய இயக்கங்களை ஒழித்துக்கட்ட புலிகள் முற்படுகிறார்கள், அதனால்தான் தாம் புலிகளை எதிர்ப்பதாகவே தமிழ்க் கட்சிகள் கூறிவந்தன.

ஆனால், தமிழ்க்கட்சிகள் ஒவ்வொன்றும் தமக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமானால் சக அமைப்புக்களை பலத்தின்மூலம் ஒடுக்குவதற்கு பின்னிற்கப்போவதில்லை என்பதையே நிகழ்வுகள் நிரூபித்து வருகின்றன.

இயக்க ஒற்றுமை பற்றியும், ஜனநாயகம் பற்றியும் 1980களில் ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப் அமைப்பினர் முன்னின்று பேசிவந்தனர்.

இந்தியப் படை காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப். அமைப்பிடம் பலம் வந்தபோது, ஈரோஸ் இயக்கத்தினரை ஈவிரக்கமின்றி வேட்டையாடினர். அவர்களை குற்றுயிராகக் கொளுத்தி எரித்தனர்.

தற்போது தம்மிடம் எவ்வித பலமும் இல்லாத நிலையில் ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப் அமைப்பு இயக்க ஒற்றுமை பற்றி அறிக்கைகளை வெளியிட்டு வருகிறது.

யாழ் மாவட்டத்தில் 1994இல் நடைபெற்ற பாராளுமன்ற பொதுத் தேர்தலிலும், இறுதியாக நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல்களின்போதும், தமது கட்டுப்பாட்டில் இருந்த தீவுப் பகுதிகளுக்கு ஏனைய இயக்கத்தினர் செல்வதை ஈ.பி.டி.பி. தடுக்க முயன்றது.

வவுனியாவில் ஈ.பி.டி.பி மினர் அலுவலகம் திறக்க முயன்றபோது அந்த அலுவலகத்திற்கு வீடு வாடகைக்கு கொடுத்திருந்தவர்கள் புளொட்டால் மிரட்டப்பட்டனர். அதனால் வவுனியாவில் ஈ.பி.டி.பி.மினர் அலுவலகம் திறக்கும் முயற்சி கைகூடவில்லை.

தமிழ்க் கட்சிகள் ஒவ்வொன்றும் குறுநில மன்னர்கள்போன்று இருப்பதற்கே முயன்று வந்துள்ளன.

படையினர் நிலைகொண்டுள்ள பகுதிகளுக்குள் இவை இருந்து வருவதால் ஒன்றுடன் ஒன்று மோதி அழியாமல் தப்பிப் பிழைத்திருக்கின்றன.

தம்மிடம் பலம் இருந்தால் மறு அமைப்பை நசுக்க முற்படுவதும், தாம் பலவீனமாக இருந்தால் மட்டும் ஐக்கியம், ஜனநாயகம் பற்றிப் பேசுவதுமே தமிழ்க் கட்சிகளது இதுவரைகால வரலாறாக இருந்து வருகிறது.

அந்த உண்மைக்கான சமீபகால உதாரணமாகவே புளொட், ரெலோ மோதல்கள் அமைந்துள்ளன.

வரிவசூலிப்பில் ஏற்பட்ட போட்டியாக இந்த மோதலை கருதிவிடலாகாது. வவுனியாவில் மேலாதிக்கம் செலுத்துவது யார்? எதிர்வரும் பாராளுமன்ற மற்றும் நகரசபை தேர்தல்களில் பதவிகளை கைப்பற்றப்போவது யார்? என்பதற்கான போட்டியின் வெளிப்பாடுகளே இந்த மோதலாகும்.

ஒரு அமைப்பிடம் ஆயுதம் இருக்கிறதா இல்லையா? என்பதை வைத்து அது ஜனநாயக அமைப்பா இல்லையா என்ற முடிவுக்கு வரவியலாது. அந்த ஆயுதங்கள் எந்த நோக்கத்திற்காக பயன்படுகின்றன என்பதைப் பொறுத்தே அதனை தீர்மானிக்க முடியும்.

முன்னாள் போராளி அமைப்புக்களான இந்நாள் மிதவாதத் தமிழ்க் கட்சிகள் அனைத்துமே தற்போதும் ஆயுதம் வைத்திருக்கின்றன.

இந்த ஆயுதங்கள் புலிகளிடம் இருந்து தம்மைப் பாதுகாப்பதற்காகவே என்று இக் கட்சிகள் கூறிவருகின்றன. ஆனால் இக்கட்சிகள் தமது ஆயுத பலத்தால் புலிகளின் தாக்குதல்களில் இருந்து தப்புவது கடினமான காரியம்.

படையினரது கட்டுப்பாட்டு பகுதிகளில் இருப்பதனாலேயே புலிகளது தாக்குதல்களில் இருந்து தமிழ்க் கட்சிகள் தப்பிப் பிழைத்திருக்க முடிகிறது.

புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ் அமைப்புக்கள் தமக்குள் உள்ள பூசல்களை தீர்த்துக் கொள்ளவும், தற்பாதுகாப்பு தேடவுமே அவை வைத்திருக்கும் ஆயுதங்கள் பெரிதும் உதவுகின்றன.

வவுனியாவில் ரெலோவிடம் ஆயுதம் இருந்திருக்காது விட்டால் புளொட் அவர்களை அங்கிருந்து விரட்டியடித்திருக்கும். அதேபோல புளொட்டிடம் துப்பாக்கிகள் இல்லையானால் ரெலோ அவர்களை துரத்தியிருக்கும்.

அது மட்டுமன்றி வரிவசூலிப்பு போன்ற காரியங்களுக்கும் துப்பாக்கிகளே பயன்பட்டு வருகின்றன. இந்த இயக்கங்களின் கையில் துப்பாக்கிகள் இருப்பதால், பயம் காரணமாகவே வரி கிடைத்து வருகிறது.

எனவே, இன்று தமிழ்க் கட்சிகள் வைத்திருக்கும் ஆயுதங்களின் பிரதான இலக்கு புலிகளல்ல என்பது தெளிவானது.

எனினும், ஆயுதங்கள் வைத்திருப்பதை நியாயப்படுத்தவும், வரி வசூலிப்பு போன்ற சட்டவிரோத செயற்பாடுகளை தொடரவுமே புலி எதிர்ப்புக் கோஷத்தை இக் கட்சிகள் அடிக்கடி வெளியிட்டு வருகின்றன.

தமது தேவை அவசியம் என்று படையிருக்கு உணர்த்துவதற்காகவே, புலிகளை இனம் காட்டுதல், புலிகளை பிடித்துக் கொடுத்தல் போன்ற நடவடிக்கைகளில் அவ்வப்போது சில தமிழ்க் கட்சிகள் ஈடுபட்டு வருகின்றன.

புலிகள் தமது ஜனநாயக உரிமைகளை மறுத்துவிட்டனர் என்ற ஆதங்கத்தில்தான் இக் கட்சிகள் புலிகளை எதிர்ப்பது உண்மையாக இருக்குமானால், இவை தமக்குள் ஜனநாயக உறவுகளை கட்டிக் காத்து முன்னுதாரணமாக திகழ்ந்திருக்கலாம். எக்கட்சியும் அவ்வாறான முன்னுதாரணத்தை இன்றுவரை காண்பித்ததில்லை.

தமிழ்க் கட்சிகளது தற்போதைய ஒரே இலக்கு அடுத்த பொதுத் தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை பெறுவதேயாகும். அதற்காக எத்தனை கோடி ரூபாய்களை வேண்டுமானாலும் தேர்தலில் செலவிடவும், ஏனைய அமைப்புக்களை ஓரம் கட்டவும் ஒவ்வொரு அமைப்பும் தயாராகி வருகின்றன.

தாம் தயாராகிவரும் அதே நேரத்தில் ஏனைய அமைப்புக்களை பலவீனமாக்குவதிலும் முனைப்புக் காட்டுகின்றன. புளொட், ரெலோ மோதல் அதனையே வெளிப்படுத்தியிருக்கிறது.

இத் தமிழ்க் கட்சிகள் இடையே நிரந்தர ஒற்றுமை என்பது ஏற்படவே முடியாது. பலவீனமான கட்சிகள் அடுத்த தேர்தலில் ஒன்றுபட்டு போட்டியிட விரும்பும். பலமான கட்சிகள் தனித்து போட்டியிட்டு கூடுதலான ஆசனங்களை கைப்பற்ற முனையும்.

அடுத்த தலைமுறை பற்றிய சிந்தனைகளை முட்டை கட்டிப்போட்டுவிட்டு, அடுத்த தேர்தல் பற்றியே தமிழ்க் கட்சிகளும் சிந்திக்க ஆரம்பித்துள்ளன.

பதவிகளில் இருப்போர் அவற்றை தொடர்ந்து தக்கவைப்பதற்கும், பதவிகளில் இல்லாதோர் பதவிகளை கைப்பற்றுவதற்குமான அரசியலையே இன்று தமிழ்க் கட்சிகள் தலைமேற் கொண்டுள்ளன.

எனவே, இக் கட்சிகள் இடைக்கிடையே விளம்பரத்திற்காக ஒன்றுபடலாமே தவிர, ஒருபோதும் உளப்பூர்வமான ஒற்றுமையை ஏற்படுத்த முடியாது.

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

## ஒரு உறையில் இரு கத்திகள்!

புளொட், ரெலோ பலப்பரீட்சையில் ரெலோவுக்கு இழப்பு அதிகம். மூன்று ரெலோ உறுப்பினர்கள் பலியாகியுள்ளனர்.

புளொட்டின் மாணவர் அமைப்பைச் சேர்ந்த ரூபன் என்றழைக்கப்படும் கிருஷாந்தன் ரெலோவினரால் கொல்லப்பட்டுள்ளார். இதனை எழுதும் வரை மூன்றுக்கு ஒன்று என்ற கணக்கில் மோதல் தற்காலிகமாக ஓய்ந்துள்ளது.

புளொட்டை ரெலோ தாக்கியதில் புளொட் உறுப்பினர்கள் இருவர் பலியானதாக தவறான செய்திகள் வெளியாகின. ரெலோதான் தனது தரப்பு பலத்தை காண்பிக்க அவ்வாறு செய்தி கொடுத்ததோ தெரியவில்லை.

அம்பாள் மினி பஸ்ஸில் புளொட் உறுப்பினர்கள் சிலர் சென்றுள்ளனர். அந்த பஸ்மீது ரெலோ தாக்கியிருக்கிறது. பஸ் உரிமையாளர் பிணமானார். பஸ்ஸில் சென்ற கண்ணா என்னும் புளொட் உறுப்பினருக்கு சிறு காயம்.

புளொட் மாணவர் அமைப்பைச் சேர்ந்த ரூபன் கொலைக்கு தாம் பொறுப்பல்ல என்று கூறுகிறது ரெலோ. புளொட்மீதே குற்றம் சாட்டுகிறது. ஆதாரம் உண்டு என்று கூறியபோதும் ஆதாரத்தை காண்பிக்கவில்லை.

யாம் அறிந்தவரை ரூபன் கொலைக்கும் புளொட்டுக்கும் சம்பந்தமில்லை.

★★★

தமது மூன்று உறுப்பினர்களதும் இறுதிச் சடங்கில் ரெலோ தலைவரும், முக்கியஸ்தர்களும் ஆற்றிய உரைகளில் சூடு பறந்தது.

"பாசிச புளொட் எமது உறுப்பினர்களை கொன்றுவிட்டனர்" என்று ரெலோ முக்கியஸ்தர் மகேந்திரன் கூறினார்.

ரெலோவின் வவுனியா மாவட்ட பொறுப்பாளர் குகன், "புளொட் இத்தகைய போக்கை தொடருமானால், எமது உறுப்பினர்களுக்கும் பதிலடிக்கான உத்தரவை வழங்க வேண்டியிருக்கும்" என்றார்.

"புளொட்டால் கொல்லப்பட்ட சூசை ரவி சக இயக்கம் என்பதால் புளொட்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யவில்லை.

04.02.99 அன்று ரெலோ உறுப்பினர்கள் புளொட் முகாமுக்கு சென்றபோது, புளொட் சுட்டது. அதில் 'ஏ.கே.ரவி' என்பவர் காயமடைந்தார். அவருக்கு அருகே நின்ற சூசை ரவி ஒரு ரவை கூட சுடாமல் திரும்பி வந்தார். அப்படிப்பட்ட சூசை ரவி புளொட் 8.02.99 அன்று நடத்திய தாக்குதலில் பலியாகிவிட்டார்." என்றும் குகன் கூறினார்.

சக இயக்கம்மீது சுடவே விரும்பாத சூசை ரவி, சக இயக்க முகாமுக்கு துப்பாக்கியோடு ஏன் செல்ல வேண்டும்? என்று தெரியவில்லை.

ரெலோ தலைவர் செல்வம் தனது உரையில்: "இனிமேல் சமாதானமாக போவோம். சண்டை வேண்டாம் என்று மாணிக்கதாசன் தொலைபேசியில் கூறினார். அவ்வாறு கூறிய அடுத்த நிமிடமே குருமன் காட்டில் பதுங்கியிருந்த புளொட் தாக்கியதில் எமது மூன்று உறுப்பினர்கள் பலியாகினர்." என்று உணர்ச்சிவசப்பட்டு காரமான வார்த்தைகளை பயன்படுத்தினார்.

குருமன் காட்டில் ரெலோமீது தாக்குதல் நடத்த முன்பாக, புளொட் வவுனியா பொறுப்பாளர் ஜெகன் ரெலோ பொறுப்பாளர் குகனுடன் தொலைபேசியில் உரையாடினாராம்.

"எதற்கு பிரச்சனை. இனி பேசித் தீர்த்துக் கொள்வோம். என்ன பிரச்சனையானாலும் எனக்கு தெரியப்படுத்துங்கள்." என்று ஜெகன் கூறினாராம்.

இதனை நம்பியே தமது உறுப்பினர்கள் எச்சரிக்கை இல்லாமல் வேனில் போனார்களாம்.

தம்மை தாக்குவதற்காக தமது உஷார் நிலையை தளரச் செய்ய புளொட் ஒற்றுமை நாடகம் நடத்தியதாக கொதித்துப் போயிருக்கிறது ரெலோ.

முதலில் லொறி பார்க்கில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது ரெலோதான். பின்னர் எமது முகாமை தேடிவந்ததும் அவர்கள்தான். எனவே ஆயுதங்கள் பாவிக்கப்பட்டதற்கான பொறுப்பு ரெலோவையே சேரும் என்கிறது புளொட்.

என்னதான் சமரசம் செய்தாலும் வவுனியாவில் புளொட், ரெலோ பூசல் தொடரும்.

ஒரு உறையில் இரு கத்திகள் இருக்க முடியாது. ஒரு ஊரில் இரண்டு 'தாதாக்கள்' இருக்க முடியாது. இருந்தால் ஒரே உரசல்தான்!



படிப்பகம்

# உண்மைத் தொடர்

## அதிர் இடி 49

**கடந்தவாரம்**

**அமீனின் மனைவிகளில் ஒருத்தியான மெடினா கலாசார அமைச்சர் சியம்பாவுடன் உறவு வைத்துக் கொள்கிறாள். சியம்பா அமீனுக்கு தெரிந்துவிடுமோ என்று பயந்து கொண்டிருக்கிறார். இதன்மத்தியில் 'சர்வதேச பயங்கரவாதி' என்றழைக்கப்பட்ட கார்லோஸ் உகண்டாவுக்கு வருகிறான். இனி....**

**இனி....**

# இடி அமீன்

'என்டபே' விமான நிலையத்தில் கார்லோஸ் வந்திறங்கியுள்ளான் என்றதுமே அமீனுக்கு பிரமிப்பும் கூடவே மகிழ்ச்சியும் ஏற்பட்டது.

அடுத்தடுத்து சொல்லப்பட்ட தகவல்கள் அந்தப் பிரமிப்பை பலமடங்காக உயர்த்தி விட்டன.

தகவல் சொன்ன விமானப்படை அதிகாரியின் குரலில், நடக்கக்கூடாத விபரீதம் நடந்துவிட்டது போன்ற பதற்றம் நிரம்பியிருந்தது.

"கார்லோஸ் குழுவினர் விமானம் ஒன்றைக் கடத்தி வந்துள்ளனர். அதில் 256 பயணிகளும், 12 சிப்பந்திகளும் இருக்கிறார்கள்!"

அமீன் பதற்றமடையவில்லை. மிக நிதானமாகக் கேட்டான்: **"எங்கிருந்து வந்திருக்கிறது?"**

"இஸ்ரேலின் டெல் அவிவ் விமான நிலையத்திலிருந்து புறப்பட்டிருக்கிறது. கார்லோஸ் குழுவினர் ஏதன்ஸ் விமான நிலையத்தில் வைத்து பயணிகள்போல உள்ளே ஏறியிருக்கின்றனர். முதலில் லிபியாவின் பெங்காலி விமான நிலையத்துக்குச் சென்று எரிபொருள் நிரப்பிக்கொண்டு இங்கு வந்துள்ளனர்".

**"பரவாயில்லையே; தகவல்களை விரைவாகச் சேகரித்துவிட்டீரே, ம்... அவர்களுக்கு உரிய மரியாதை வழங்கப்பட வேண்டும்!"** என்று அமீன் கூறியதும், அதிகாரி முகத்தில் குழப்ப ரேகைகள்.

"மரியாதை என்றால்...." என்று தடுமாற்றமாக கேட்டதும், அமீனுக்கு அடக்க மாட்டாத சிரிப்பு வந்துவிட்டது.

'மரியாதையை கொடுங்கள் என்றால் கைது செய்து உதையுங்கள்' என்பதுதான் அமீனின் அகராதியில் அர்த்தம்.

அதனை நினைத்துத்தான் அதிகாரி தடுமாறினார்.

**"நான் சொல்வது உண்மையான மரியாதையை! நல்ல வேளையாகக் கேட்டுவிட்டீர். இல்லையானால் ஏடாகூடமாகியிருக்கும்!"** என்று சிரித்த அமீன், **"கார்லோஸை நான் சந்திக்கவேண்டும். அழைத்து வாருங்கள்!"** என்றான்.

கார்லோஸ்மீது அமீனுக்கு தனி மரியாதை இருந்தது. கார்லோசின் சாகசங்கள் பற்றிய செய்திகளை தேடிப்பிடித்து அறிந்த கொள்ளுவான்.

**"நானும் இங்கு ஜனாதிபதியாக மாறியிருக்காதுவிட்டால் கார்லோஸ் மாதிரித்தான் இருந்திருப்பேன்!"** என்று அமீன் கூறியுமிருக்கிறான்.

கலாசார அமைச்சர் சியம்பாவும் வேறு சில அதிகாரிகளும் அமீனைச் சந்திக்க ஓடோடி வந்தனர்.

எடுத்த எடுப்பிலேயே சியம்பா கேட்டார்: "கடத்தல்காரர்களுக்கு ஆதரவு கொடுக்கும் எண்ணம் இருக்கிறதா?"

**"எண்ணம் கிடையாது, முடிவே செய்துவிட்டேன்; அவர்கள் எமது விருந்தாளிகள்!"**

அமீன் சொன்னதும் சியம்பா தயங்கியபடி "இதனால் இஸ்ரேலின் பதிலடியை நாம் சந்திக்க வேண்டிவரலாம். தற்போதுள்ள நிலையில் நமது துருப்புக்கள் அதற்குத் தயாரில்லை போலத் தெரிகிறது. அதனால்..."

**"அதனால் பாலஸ்தீன போராளிகளை இஸ்ரேலிய நாய்களிடம் கொடுத்துக் கடிக்கச் சொல்லலாம் என்கிறீரா?"** குரலில் கோபம் தெரிந்தது.

சியம்பா தலையைச் சொறிந்தார். ஏனைய அதிகாரிகள் வாயே திறக்கவில்லை.

"இஸ்ரேலியர்கள் விமான நிலையத்திற்குள் புகுந்துகூட தாக்க முயற்சிக்கலாம். நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்." என்றார் சியம்பா

**"இப்போது சொன்னீரே.. இது நல்ல யோசனை!"** என்று கூறியபடியே, தொலைபேசியில் இலக்கங்கள் சுழற்றி மளமளவென்று உத்தரவுகளைப் பிறப்பித்தான்.

'கடத்தப்பட்ட விமானத்தைச் சுற்றி எமது துடுப்புக்கள் காவலுக்கு நிற்க வேண்டும். இஸ்ரேல் நாய்கள் விளையாடப் பார்க்கலாம்- ஜாக்கிரதை!"

அடுத்து விமான நிலைய அதிகாரிகளுக்கும் உத்தரவுகள் பிறப்பித்தான்.

**"பயணிகளில் இஸ்ரேலியர்கள் மட்டும் நூறுபேர் இருக்கிறார்களாம். ஏனைய பயணிகளை விட்டுவிடலாம். கார்லோஸிடம் பேசிப்பார்க்கப் போகிறேன். நான் சொன்னால் கேட்பான்!"** என்று சியம்பாவிடமும் ஏனைய அதிகாரிகளிடம் தம்பட்டம் அடித்துக் கொண்டான்.

கார்லோசுடன் தனக்குள்ள நெருக்கத்தைக் காண்பிக்க பல சந்தர்ப்பங்களை தானாகவே உருவாக்கிக் கொண்டான் அமீன்.

கார்லோஸ் தனது சகாக்களான வாடிஹாட்டாட், அன்ரன் பௌலியர் ஆகியோருடன் அமீனைச் சந்திக்க வந்தான்.

கார்லோஸை கட்டித்தழுவி வரவேற்ற அமீன், தடபுடலான விருந்துக்கும் ஏற்பாடு செய்தான்.

**"துணிச்சலான காரியம் செய்திருக்கிறீர்கள். உகண்டா உங்களுக்கு சகல விதத்திலும் உதவக் காத்திருக்கிறது. விமான நிலையம், விமானம் இரண்டும் எங்கள் துருப்புக்களால் பாதுகாக்கப்படும். உங்கள் ஆட்களுடன் ஒத்துழைக்கச் சொல்லியிருக்கிறேன்!"** என்று அமீன் கூற, கார்லோஸ் புன்னகைத்தான்.

அவர்கள் மூவருக்கும் தனித்தனி அறைகள் ஒதுக்கிக் கொடுத்தான் அமீன். இருவரையும் அனுப்பிவைத்துவிட்டு கார்லோசுடன் தனியாக அமர்ந்து உரையாடினான்.

இறுதியாக கார்லோசிடம் அமீன் கூறினான்: **"நீயும் நானும் ஒரே ஜாதி!"**

கார்லோஸின் புருவம் உயர்ந்து தாழ்ந்தது. புரியவில்லை.

அமீனே விளக்கினான்: **"புகழை ரசிப்பது! பெண்களை அனுபவிப்பது! எதிரிகளை நசிப்பது!"** என்றுவிட்டு இடிச் சிரிப்பை இறக்கினான்.



கார்லோஸ் அதிகம் பேசவில்லை. இடி அமீனை அவன் அளவெடுத்துக் கொண்டிருந்தான்.

'நீ பேசாதே! மற்றவர்களைப் பேசவிடு. எடைபோடு.' என்பது கார்லோஸின் அணுகு முறை.



கார்லோஸ்

அமீன் அப்படியல்ல. தானே பேசிக்கொண்டிருப்பான். மற்றவர் பேச வாய்ப்பே இருக்காது.

**"எனது மாளிகையில் நீ நினைத்தது கிடைக்கும். நான் எதிரிகளுக்குக் கொடூரமானவன். நண்பர்களுக்கு இனிமையானவன்!"** என்று கார்லோசை அறைக்கு அனுப்பிவைத்தான்.

கார்லோஸ் தனது அறைக்குச் சென்றபோது, அங்கே இன்ப அதிர்ச்சி காத்திருந்தது.

இரண்டு கறுப்பழகிகள், பாதி மார்புகளைக் கண்களுக்கு விருந்தாகக் காண்பித்தபடி, தங்கள் உதடுகளை கிறக்கமாக அசைத்தபடி கார் லோசை விழுங்குவதுபோலப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

வெள்ளையான கார்லோசுக்கு கறுப்பான அழகிகள்மீது தனிப்பிடிப்பு இருந்தது.



மேஜர் ஜெனரல் ஷொம்றொன்

ஒருத்தியின் கன்னத்தைத் தட்டியபடி, **"ஒன்றுக்கு இரண்டு! உங்கள் அதிபருக்கு பெரிய மனது. உங்களுக்கும் பெரிது"** என்று கழுத்துக்கு கீழே பார்த்து கண்ணடித்தான்.

1976 ஜூன் 26ம் திகதி இஸ்ரேலிய விமானம் கார்லோஸ் குழுவினரால் கடத்தப்பட்டு தரையிறங்கியது.

இஸ்ரேலிய பயணிகள் தவிர்ந்த ஏனைய நாட்டுப் பயணிகளை கார்லோஸ் விடுவிக்க ஒப்புக் கொண்டான்.

'இடி அமீனின் வேண்டுகோளின்படி சர்வதேசப் போராளி கார்லோஸ் இஸ்ரேல் பயணிகள் தவிர்ந்த ஏனையோரை விடுதலை செய்துள்ளார்!' என்று உகண்டா அரசு அறிவித்தது.

வெளிநாடுகளில் தனக்கு ஏற்பட்டிருந்த அபகீர்த்தியை களைய இதனை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொண்டான் அமீன்.

விமானக் கடத்தல், கார்லோஸ் வருகை, இஸ்ரேலியர்கள் பணயக் கைதிகள் போன்ற தினசரி பரபரப்பான செய்திகளால், உகண்டாவில் அமீனுக்கு எதிராக வளர்ந்து வந்த அதிருப்திகளும் திசை திரும்பியிருந்தன.

ஆபிரிக்க ஒன்றிய நாடுகளது தலைவர்களது கூட்டத்தில் கலந்துகொள்ள அமீன் செல்ல வேண்டியிருந்தது. அதுவரை ஆபிரிக்க நாடுகளது ஒன்றியத் தலைவராக இருந்த அமீன், 1976ல் அப்பதவியில் இருந்து விலகி, இன்னொருவருக்கு இடமளிக்க வேண்டியிருந்தது.

கார்லோஸை அழைத்த அமீன், "நான் மாநாடு முடிந்ததும் நாடு திரும்பிவிடுவேன். உங்களுடன் அங்கிருந்தும் தொடர்பு கொள்வேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்கும் வரை ஒரு நாயைக்கூட விடுவிக்க வேண்டாம்!" என்று கூறிவிட்டுப் போனான்.

'ஆபிரிக்க நாடுகளது மாநாட்டில் கலந்து கொள்ள அமீன் பயணம்!' என்ற செய்தியை பத்திரிகைகளில் பார்த்தார் இஸ்ரேலிய லெப்டினன்ட் ஜெனரல் குர்.

இதுதான் சரியான சந்தர்ப்பம் என்று தன் மேசையில் ஓங்கித்தட்டிய குர், அபாரமான திட்டம் ஒன்றை மனதிற்குள் வடிவமைக்கத் தொடங்கினார்.

இஸ்ரேலிய இராணுவத்தின் ச்ீப் ஒ்ப் ஸ்ரா்ப் என்ற பதவியில் இருந்தவர் குர்.

தனது திட்டத்தை பிரதமர் இற்ஷாக் ராபினிடம் தெரிவித்தார் ஜெனரல் குர்.

பிரதமர் ராபின், பாதுகாப்பமைச்சர் ஷிமோன் பெரஸ், ஜெனரல் குர், மொசாட் உயரதிகாரி உட்பட முக்கியமானவர்கள் கலந்துகொண்ட கூட்டம் ஒன்று நடைபெற்றது.

"ஜெனரல் குர் முன்வைத்துள்ள திட்டம் அபாரமானது. அதில் சந்தேகம் கிடையாது. ஜெனரல் குர்மீதும் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. ஆனால் கார்லோஸ் அதி புத்திசாலி. அவனை சமாளித்தாக வேண்டுமே என்பதுதான் எனது ஒரே கவலை!" என்றார் பாதுகாப்பமைச்சர் ஷிமோன் பெரஸ்.

அப்போது குறுகிட்டார் மேஜர் ஜெனரல் ஷொம்றொன். என்டபே விமான நிலையம் பற்றிய முழுத் தகவல்களையும் திரட்டிக் கொண்டுதான் அவர் கூட்டத்துக்கு வந்திருந்தார்.

"அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம். என்டபே விமான நிலையத்தில் கார்லோஸின் ஆட்களும், உகண்டா துருப்புக்களும்தான் காவலுக்கு நிற்கிறார்கள்?"

"கார்லோஸ் என்னவானான்?" என்றார் பாதுகாப்பமைச்சர்..

"இடி அமீன் கார்லோசையும் மேலும் இரண்டுபேரையும் தனது விருந்தாளிகளாக அழைத்து வைத்திருக்கிறான்," என்றார் மேஜர் ஜெனரல்.

பாதுகாப்பமைச்சரின் முகத்தில் திருப்தி மலர்ந்தது.

"இது நம்பகமான தகவல்தானே?" என்று கேட்டார்.

"ஆம்!" என்ற மேஜர் ஜெனரல் கூறினார்: "எமக்கு என்டபே விமான நிலையத்திலேயே ஆள் இருக்கிறது!"

பிரதமர் ராபினுக்கு ஜெனரல் குர் வகுத்த திட்டத்தில் நம்பிக்கை இருக்கவில்லை.

**தருவது ரசிகன்**

"திட்டம் பலிக்குமா? நாம் அவசரப்பட்டு சறுக்கிவிட்டால் பல உயிர்கள் நாசமாகுமே!" என்றார்.

பாதுகாப்பமைச்சர் ஷிமோன் பெரஸ் தொண்டையைக் கனைத்துக்கொண்டு, தன் கம்பீரமான குரலில்; "கொமாண்டோ தாக்குதலா? கெரில்லாக்களின் கோரிக்கைக்கு பணிவதா? இரண்டில் ஒன்றை நாம் முடிவு செய்தாக வேண்டும். முன்னதைச் செய்தால் கௌரவம். பின்னதைச் செய்தால் அகௌரவம். இஸ்ரேல் தலை குனியும்!"

பிரதமர் ரொபினுக்கு தனது அமைச்சரது உறுதி பிடித்திருந்தது. "இஸ்ரேல் தலை குனியாது. உங்கள் திட்டப்படியே ஏற்பாடுகளைச் செய்யுங்கள். உயிரோடு பயணிகளை மீட்டுத்தாருங்கள்!" என்றார்.

"நிச்சயமாக!" என்றார் பாதுகாப்பமைச்சர்.

உலகைக் கலக்கப்போகும் 'ஒப்பரேசன் என்டபே'க்கு இஸ்ரேலிய கொமாண்டோக்கள் தயாரானார்கள்.

மூன்று விமானங்களும் தயாராகின.

சிறப்புப் பயிற்சி பெற்ற பராத் துருப்புக்களும் தயாராகின.

(இடி தொடரும்)

# "இறந்து போ மகனே!"

**போ**தை மருந்துக்கு அடிமையானவர்கள் தொல்லைகள் நம்நாட்டிலும் பெருகி வருகின்றன. கொழும்பில் மிகவும் அதிகம்.

வீடுகளில் துணி காயப்போட்டால்கூட சுருட்டிக்கொண்டு போய்விடுகிறார்கள். கையில் எது கிடைத்தாலும், கண்ணில் எது பட்டாலும் திருடுகிறார்கள்.



வெளிநாடுகளிலும் இதே கதைதான். இதனால் பல விபரீத சம்பவங்களும் நிகழ்கின்றன.

தாய்லாந்தைச சேர்ந்த சுபத்ரா சோம்பூஸ்ரிக்கு 48 வயது. அவரது செல்ல மகன் போல் நெட்சுவானுக்கு போதைப் பொருள் என்றால் உயிர். மகா அடிமை.

போதை மருந்து வாங்க வீட்டிலேயே திருடினார். அக்கம் பக்கத்தில் திருடினார். தாயை உதைத்து பணம் கேட்டார்.

ஊரில் மானம் போனது. வீட்டில் நிம்மதி போனது. பொறுமை இழந்த தாய் யாரும் எதிர்பாராத முடிவொன்றை எடுத்தார்.

"என் மகனை கொன்று விடு. இந்தா 50 ஆயிரம்!" என்று கூலிக் கொலையாளி ஒருவரை நியமித்தார்.

அவனும் வாங்கிய கூலிக்கு வஞ்சகம் செய்யாமல் கச்சிதமாக கொலையைச் செய்தான். ஆனால் பொலிசில் மாட்டியதும், தன்னை ஏவியவரைக் காட்டிக் கொடுத்துவிட்டான்.

சுபத்ரா சோம் பூஸ்ரி குற்றத்தை மறுக்கவில்லை. "ஊருக்கு நன்மை செய்யவே கொலை செய்தேன்!" என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்.

# விஷ ஊசி



**அ**மெரிக்காவில் இளம் குற்றவாளிகள் பெருகி வருகின்றனர். சமீபத்தில் 29 வயது இளைஞனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

சீன்செல்லர்ஸ் என்னும் இளைஞருக்கே தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இவர் 16 வயதாக இருந்தபோது செய்த கொலைக்காகவே இந்த தண்டனை இப்போது தரப்பட்டிருக்கிறது.

இவர் தனது பதினாறு வயதில் யாரைக் கொன்றார் என்று தெரியுமா? தனது தாயார் உட்பட இரண்டு பேரை கொலை செய்திருக்கிறார்.

வழக்கை விசாரித்த நீதிபதி கடும் தண்டனை பிறப்பித்தார். விஷ ஊசி ஏற்றி மரண தண்டனையை நிறைவேற்ற உத்தரவிட்டார்.

அமெரிக்காவில் கடந்த 40 ஆண்டுகளில் இள வயது கொலையாளிக்கு விஸம்பர ஊசிமூலம் மரண தண்டனை வழங்கப்பட்டது இதுவே முதல் முறை.

# ரசியாவில் மோனிகா




வாழைப் பழம் மூலம் தயாராகும் இந்த சொக்லெட்டை மோனிக்கா பெயரில் அறிமுகம் செய்துள்ளனர்.

இதனால் அறிமுகமான உடனேயே சொக்லெட்டுக்கள் விற்றுத் தீர்ந்துவிட்டன.

சொக்லெட் உறையில் பெரிதாக 'மோனிக்கா' என்று எழுதியுள்ளனர். ஆங்கில எழுத்துக்களல்ல. ரசிய மொழியிலேயே எழுதப்பட்டுள்ளது.

**கி**ளின்ரன், மோனிக்கா விவகாரத்தின் பின்னர் மோனிக்கா சுருட்டு உட்பட பல பொருட்கள் மோனிக்கா பெயரில் வெளிவந்தன. இவை அமெரிக்காவில்தான் வெளிவந்தன.

இப்போது ரசியாவில் மோனிக்கா பெயரில் சொக்லெட் விற்பனைக்கு வந்திருக்கிறது.

கிளின்ரனை கிறங்கடித்த மோனிக்கா ரசியர்களையும் வளைத்து பிடித்திருக்கிறார். அதுதான் அவரது பெயரில் வெளியாகியுள்ள சொக்லெட்டுக்கு கிராக்கி.

# புதிய சர்ச்சை

**வெ**ள்ளை மாளிகையில் மோனிக்காவும், கிளின்ரனும் காதல் லீலைகள் நடத்தியது உலகறிந்த சமாச்சாரம்.

இப்போது புதிய சமாச்சாரம் ஒன்று வெளிவந்திருக்கிறது. இது 'ஃபயர்' படக்கதை மாதிரியான சமாச்சாரம்.

வெள்ளை மாளிகையில் மோனிக்கா பணியாற்றியபோது, தன்கூட பணியாற்றிய பெண் ஒருவரையும் துரத்தித் திரிந்தாராம்.

இருவரும் அன்போடு கன்னத்தில் முத்தமிட்டுக் கொண்டிருக்கும் புகைப்படங்களும் வெளியாகியுள்ளன.

கிளின்ரனின் ஆட்கள்தான் இந்த விவகாரத்தை பூதாகரமாக்கிக் காட்டுகிறார்களோ என்றும் சந்தேகம் இருக்கிறது.

ஆனால் மோனிக்காவோ, சம்பந்தப்பட்ட பெண்ணோ இதுவரை இது தொடர்பாக எதுவும் கூறவில்லை.



எப்படியோ தன்னைப் பற்றிய இவ்வாறான செய்திகள் வெளிவருவதால் மோனிக்கா அமெரிக்கர்களது சதாநாயகியாக இருந்து வருகிறார்.

# சிறுவர்- சிறுமிகள் தற்கொலை



**இ**ந்தியாவில் தூரதர்ஷன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் தொடர் ஒன்று பல பிரச்சனைகளை கிளப்பியுள்ளது.

அத் தொடரின் பெயர் சக்திமான். அதில் சக்திமானாக நடிப்பவர் முகேஷ் கன்னா. ஆபத்தில் சிக்கியவர்களை காப்பாற்றுபவராக நடிக்கிறார்.

இத் தொடருக்கு பலத்த வரவேற்பு. சிறுவர், சிறுமிகள் முதல் பெரியோர் வரை காத்திருந்து கண்டு களிக்கிறார்கள்.


ஆனால் இத் தொடரில் வரும் சக்திமான்போல சாகசம் செய்ய முனைந்த சிறுவர்கள் பலர் இறந்துள்ளனர். அதைவிடக் கொடுமை சக்திமான் வந்து தங்களைக் காப்பாற்றுவார் என்று பந்தயம் கட்டிவிட்டு தீக்குளித்த சிறுமிகள் இருவர் உடல் கருகிப் பலியாகியுள்ளனர். இது நடந்தது கர்நாடக மாநிலத்தில்.

மும்பாயிலும் சில சிறுவர்கள் தம்மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீவைத்துக் கொண்டு மரணமாகியுள்ளனர். இவ்வாறு பத்துக்கு மேற்பட்டோர் மரணமானதாக கூறப்படுகிறது.

இதனால் இத் தொடருக்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இதனை நிறுத்துமாறு கோரி மும்பை நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

www.padippakam.com

# த க வ ல் பெ ட் டி



## சாகச நாய்

↑ உலகெங்கும் நாய் கண்காட்சிகள் பிரமாதமாக நடந்து வருகின்றன. நாய்ப் பிரியர்களது எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகிறது.

இந்தியத் தலைநகரான புதுடில்லியில் நாய் கண்காட்சியில் சாகசம் செய்து காண்பித்து, பார்வையாளர்களை அசத்திய நாயே இது. ஆனாலும் இந்த நாயை மட்டுமல்ல, உலகில் உள்ள சகல நாய்களையும் ஓரம் கட்டும் உலக மகா சாதனை நாயும் இதோ பக்கத்தில் அமர்ந்திருக்கிறது.



## கின்னஸ் நாய்

← திரைப்படங்களிலும் சேர்க்கஸ் நிகழ்ச்சிகளிலும் பலதரப்பட்ட சாகசச் செயல்களைச் செய்து, பார்ப்போரைப் பரவசமூட்டும் நாய்களைப் பார்த்திருக்கிறோம். இவற்றை- குட்டிகளாக இருக்கும்போதே எடுத்துப் பயிற்சி கொடுக்கிறார்கள்.

படத்தில் காணப்படும் சண்டா லேஹ் என்ற பெயருடைய- பொம்மை போன்று காட்சி தரும் நாய் 300க்கும் அதிகமான சாகசச் செயல்களைச் செய்யும் ஆற்றலுள்ளதாகக் கணிக்கப்பட்டு உலக சாதனைப் பட்டியலில் இடம் பிடித்துக் கொண்டது.

கனடா ஒண்டாரியோ மாநிலத்திலுள்ள ஹமில்டன் நகரைச் சேர்ந்த ஷரோன் ரொபின்சன் என்பவரே இந்நாயின் உரிமையாளர்.

நான்கு வயதான இந்நாய் பியானோ வாத்தியம் வாசிக்கிறது. சில கணக்குகளைப் போடுகிறது. சில சொற்களைக் கூறினால் அவற்றுக்கான ஆங்கில எழுத்துக்களை-முறை தொட்டுக் காட்டுகிறது.

இவைபோன்ற சாகசங்களைச் செய்யும் சண்டா லேஹ், பல ஹொலிவுட் படங்களிலும் தொலைக்காட்சி நாடகங்களிலும் நடித்து ஏராளமான பணத்தைக் குவித்திருக்கிறது.


இதற்கு இன்று கிராக்கி அதிகரித்திருப்பதால், இதன் அன்றாடப் பணிகளைப் பற்றி விபரங்களைப் பிரசுரிப்பதற்கான ஒழுங்குகளைக் கவனிக்கவே தனியான அமைப்பு ஒன்றும் இயங்குகிறதாம்.

இதுவரை வேறு எந்த நாயும் இதுபோன்ற அறிவு பெற்று விளங்கியதில்லை.

ஒரு சில சாகசங்களை செய்யும் நாய்கள் உள்ளன.

இதுபோல 300க்கு மேற்பட்ட சாகசங்களை செய்த நாய் கிடையாது. அதனால்தான் இதற்கு கின்னஸிலும் இடம் கொடுத்திருக்கின்றனர்.

## கேலிவிழா




↑ தங்களுக்குப் பிடித்தமில்லாத அரசியல் தலைவர்களை மக்கள் முழுச் சுதந்திரத்துடன் கேலி செய்யவென்று ஆண்டுக்கு ஒரு தடவை விழாவே நடக்கிறது. எங்கே என்கிறீர்களா? ஜெர்மனியில்!

இந்த விழாவில் அரசியல் தலைவர்களது கேலிச் சித்திரங்கள் ஊர்வலமாக மக்களால் கொண்டு செல்லப்படும். கட்சி வேறுபாடின்றி இந்த விழா நடக்கிறது.

இங்கே காணப்படும் கேலிச் சித்திரமும் ஊர்வலத்தில் காணப்பட்டதுதான். ஜெர்மன் நிதியமைச்சரை அவரது மனைவி சவுக்கால் அடிப்பது போல கீறப்பட்டுள்ளது. மோசமான பட்ஜெட்டுக்கு நெத்தியடியான விமர்சனமுங்கோ!



## சமரசம் உலாவும் மனம்

↑ யாழ் குடாநாட்டில் காவலரண் ஒன்றின் முன்பாக 'கிளிக்' செய்யப்பட்ட படம் இது.

நாயும், பூனையும் தமக்குள் பகை இன்றி ஒன்றாய் அமர்ந்திருக்கின்றன.

இந்த நாட்டிலும் இனங்கள் மத்தியில் ஒற்றுமை நிலவி விருந்தால் இந்த காவலரணின் அவசியமே இருந்திருக்காதே! இவற்றிடமிருந்தாவது கற்றுக் கொள்ளலாமோ!

## கையில் தெரியாது

↓ பெரிசு பெரிசாகப் பொருட்களைச் செய்து சாதனை புரிந்த காலம் ஒன்று இருந்தது. எப் பொருளை உற்பத்தி செய்தாலும் அவற்றை மற்றவர்கள் பார்த்து மலைக்க வேண்டும் என்ற கருத்துடன் பிரமாண்டமானதாக உருவாக்குவார்கள்.

இப்பொழுது காலம் தலைகீழாக மாறிவிட்டது. கைக்கடக்கமான பொருட்கள் என்றுகூட இல்லாமல், கையில் இருப்பதே கண்ணுக்குத் தெரியாமல் இருக்கத்தக்கதான பொருட்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

வானொலிப் பெட்டி, தொலைக்காட்சி, கமரா, தொலைபேசி ஆகியவை எல்லாம் 'கடுகு சிறுத்தாலும் காரம் பெரிது' என்று கூறும் அளவுக்கு- மிகச் சின்னஞ் சிறிய அளவில் சந்தைகளில் தாராளமாக கிடைக்கின்றன.

கைக்கடிகாரங்களை உற்பத்தி செய்வதில் தன்னிகரற்று விளங்கும் சுவிற்ஸர்லாந்திலுள்ள 'ஸ்வாச்' என்ற நிறுவனம், 1997ம் ஆண்டு ஒக்டோபர் முதலாம் நாள்- படத்தில் காணப்படும் மிக மெல்லிய அளவிலான கைக்கடிகாரத்தை அறிமுகப்படுத்தியது.

இதன் அளவு ஆக 3.9 மிலி மீட்டர் (15/100 அங்குலம்)தான். இதனைக் கையில் கட்டுவதற்கு சாதாரண கடதாசியின் மொத்தத்திலான பிளாஸ்டிக் பட்டிதான் உபயோகிக்கப்பட வேண்டும்.

இதுவரை உலகில் தயாரான கைக்கடிகாரங்களில் மிகச் சிறியது இதுதான். உலக சாதனைக் கடிகாரம்.



## பணம் என்னடா பணம்



அபூர்வமான பொருட்கள், பண்டைக் காலத்தில் உபயோகிக்கப்பட்ட பொருட்கள், விலை மதிப்பற்ற நகைகள், பிரபலங்கள் பயன்படுத்திய அணிமணிகள் (உ+ம்: டயானாவின் ஆடைகள்) போன்றவற்றுக்கு ஏராளமான பணம் கொடுத்து வாங்குபவர்கள் (தம்மிடம் கொட்டிக்கிடக்கும் பணத்தை எப்படிச் செலவளிப்பது என்று தெரியாமல் தவிப்பவர்கள்) வெளிநாடுகளில் அதிகம் இருக்கிறார்கள்.

அமெரிக்காவைச் சேர்ந்த அதிபாரக்குத்துச் சண்டை வீரர் முகமது அலி. 1974ம் ஆண்டு- இன்று கொங்கோ என்றழைக்கப்படும் ஸாயர் நாட்டில் நடைபெற்ற உலகச் சாம்பியன் போட்டியின்போது ஜோர்ஜ் ஃபோர்மன் என்பவரை முகம்மது அலி தோற்கடித்தார்.

இப்போட்டிக்காக முகம்மது அலி பந்தயக்களத்திற்கு வரும்போது ஒரு வெள்ளை அங்கியை அணிந்து வந்திருந்தார். இந்த அங்கியை அமெரிக்க நகரமான லொஸ் ஏஞ்சல்ஸில் 1997ம் ஆண்டு ஏலத்தில் விட்டனர். சாதாரண ஏலம் அல்ல உலக சாதனை ஏலம். 140 ஆயிரம் டொலர் கொடுத்து அதனை வாங்கியிருக்கிறார்- தன் பெயரை வெளியிட விரும்பாத ஒரு தனவந்தர்! இலங்கை பணமதிப்பில் எவ்வளவு தெரியுமா? மூச்சே நின்றுவிடும். 9 கோடியே 52 இலட்சம் ரூபாய்!

படத்தில் காண்பிக்கப்படும் குத்துச் சண்டைக்கான கையுறையும் உலக அதிபாரக் குத்துச் சண்டைச் சாம்பியன் முகம்மது அலியினுடையதுதான்.

இதனை 1967ம் ஆண்டு ஸோரா ஃபொல்லி என்பவருடன் போட்டி போடும்போது அலி அணிந்து கொண்டு ஆடினார். இந்தக் குத்துச்சண்டைக் கையுறையும் ஏலத்தில் விடப்பட்டபோது 29 ஆயிரத்து 900 டொலருக்கு விலை போயிருக்கிறது. இதனைவாங்கியவரும் ஏனோ தனது பெயரை வெளியிடவிரும்பவில்லை.

இலங்கை மதிப்பில் 20 இலட்சத்து 33 ஆயிரம் ரூபா.

குத்துச் சண்டை வீரரின் அங்கியும், கையுறையும் இவ்வாறு விலைபோனது உலக சாதனையாக பதியப்பட்டுள்ளது. நூறு கோடி, ஆயிரம் கோடி என்று பணத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் அலைபவர்களுக்கு இதெல்லாம் சர்வசாதாரண விஷயம். நமக்கு மலைப்பாக இருக்கலாம்.



படிப்பகம்

www.padippakam.com

# காதோடு சொல்லுகிறோம்

**வி**வாகரத்தின் பின்னர் தாயோடும், தன் குழந்தையோடும் இருந்தார் 'ஐஸ்' நடிகை. பின்னர் கம்பியூட்டர் கற்கச் சென்ற இடத்தில் அந்த நிறுவன உரிமையாளருடன் ராசியானார். தாயார் கண்டித்தார். தாயையும், குழந்தையையும் பிரிந்து தனியாகச் சென்றார் நடிகை. தனது புதிய படத்தில் நடிகையை ஒப்பந்தம் செய்தார் 'பா' நடிகர். ஏற்கனவே இருவரும் 'உள்ளே வெளியே' நெருக்கமாக இருந்தவர்கள். ஆங்கிலப் பெயர் கொண்ட அவரது தமிழ்ப் படத்தில் குண்டு தேடும் பாத்திரம் நடிகைக்கு. அதன்மூலம் இருவருக்கும் இடையே பழைய உறவு புதுப்பிக்கப்பட்டுள்ளதாம்.

**அ**ந்த நடிகைக்கு குழந்தைத்தனமான முகம். குரலும் அப்படியே. அவர் பெயர் 'நீ' என்று ஆரம்பிக்கும். அவரது சமீபகால நடவடிக்கைகள் பற்றி சினிமா நிருபர்கள் வட்டாரத்தில் பலத்த கிசுகிசுக்கள் உலாவுகின்றன. தனது தாயாருடன் படப்பிடிப்புக்களுக்கு சென்றபோது அமைதியாக இருந்தார். உடல் நலக் குறைவால் தாயார் துணை செல்ல முடியவில்லை. அதுதான் சந்தர்ப்பம் என்று புகுந்து விளையாடியிருக்கிறார். இந்த விவகாரம் தாய்க்குலத்திற்கு தெரிய வந்ததால் உடல் நிலையைப் பொருட்படுத்தாமல் மறுபடி துணை செல்கிறார்.

**நீ**ண்டகாலமாக அம்மா வேடத்தில் நடித்துவரும் நடிகைகளுக்கும் தொல்லைகள் இல்லாமலில்லை. சில இயக்குநர்களுக்கு கதாநாயகிகளை விட, 'அம்மா' நடிகைகள்மீதே ஈடுபாடு. அதனால் தங்கள் பாடு தொல்லையாக இருப்பதாக அலுத்துக் கொண்டாராம் நடிகை ஒருவர்.

**கா**தல் கவிதை பாடிய கஸ்தூர நடிகைக்கு ஏகப்பட்ட அழைப்புக்களாம். படத்தில் அவர் காட்டிய கவர்ச்சியில் மயங்கியவர்களே அழைப்பு விடுக்கிறார்களாம். எல்லாமும் பெரிய இடங்களாம். நடிகை எதிர்பார்த்ததே இதுதானோ!

## 'காமா' பாணியில்

'காமா' படத்திற்கு தணிக்கைக் குழு அனுமதிக்குமா? இல்லையா? என்பது ஒருபுறமிருக்க, படம் பயங்கரமாக விற்பனையாகியுள்ளது.

படத்தில் கவர்ச்சிக் கலக்கல் இருக்கும் என்பதால் இளம் பட்டாளம் குவியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதுதான் விநியோகஸ்தர்கள் போட்டி போட்டு வாங்கியிருக்கிறார்கள்.

இதனால் 'காமா' பாணியில் படம் எடுக்க பலர் முன்வந்துள்ளர். இளைய ராமன் என்னும் புது இயக்குநர் 'அக்னிதீவு' என்ற பெயரில் 'காமா' பாணியில் படம் எடுக்கிறார்.

**முகப்பில்** மனிஷாகொய்ராலா | ராஜேஸ்வரி

**"கார் வண்ணக் கூந்தல் தொட்டு — தேர் வண்ண மேனி தெ**
**பூ வண்ண பாடம் சொல்ல — எண்ணம் இல்லை**


ரம்யா கிருஷ்ணன்


டாக்டர் ராஜசேகர்-மோனிகா பேடி
படம்: தலைவா

## மினி சினி

* பிரகாஷ் ராஜ் நடிக்கும் 'மிஸ்டர் கே' என்ற படத்தை இயக்குபவர் சித்தார்த். இவர் ஆர்.வி. உதயகுமாரிடம் உதவி இயக்குநராக இருந்தவர்.
* 'காதல் கவிதை' படத்தில் ஒரு பாடல் காட்சியில் நடனமாடிய ரோஜா, மறுபடி 'சிவன்' படத்தில் ஒரே ஒரு பாடல் காட்சியில் நடனமாடியுள்ளார்.
* கார்த்திக் நடிக்கும் 'நிலவே முகம் காட்டு' படம், கன்னடத்தில் வெற்றிகரமாக ஓடிய 'அனுராக சங்கமம்' என்ற படத்தின் தமிழ்ப்பதிப்பு ஆகும்.
* டாக்டர். ராஜசேகர் நடித்த மொழிமாற்றப் படமான 'தலைவா' வெற்றிகரமாக ஓடுவதால், இவர் நடித்த சில தெலுங்குப் படங்கள் அதிரடியாக தமிழுக்கு மொழிமாற்றப் படுகின்றன.
* தமிழில்படம் எதுவுமின்றி இருக்கும் நக்மா, கன்னடப்படங்களில் கவனம் செலுத்துகிறார். இப்போது 'ரவிமாமா' என்ற கன்னடப்படத்தில் நடிக்கிறார்.
* 'கண்ணாத்தாள்' படத்தை இயக்கிய பாரதி மோகன், அடுத்த இயக்கும் படத்திற்கு 'திருநெல்வேலி' என்று பெயரிட்டுள்ளார்.
* தமிழ்த் திரையுலகில் முன்னணி இடத்திலிருக்கும் தேவயாணி, முதன் முறையாக சொந்தப்படம் ஒன்றைத் தயாரிக்கவுள்ளார்.
* விஜயகாந்த் நடித்த படங்கள் அநேகமானவை தெலுங்கில் மொழிமாற்றப்படுவது தெரிந்ததே. இவரது 'வீரம் வெளஞ்ச மண்ணு' தெலுங்கில் 'அடவிபுலி' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டுள்ளது.
* 'ஹவுஸ்ஃபுல்' படத்தில் சொந்தக்குரலில் பேசி நடித்த சுவலட்சுமி, இனிமேல்தான் நடிக்கும் எல்லாப் படங்களிலுமே சொந்தக் குரலில் தான் பேசப்போகிறாராம்.
* நீண்டகாலமாக வெளிவராமல் இருக்கும் 'என்ஜினியர்', 'என் சுவாசக்காற்றே', 'சாசனம்' போன்ற படங்கள் வெளியான பின் தான் புதிய படங்களில் நடிக்கவுள்ளாராம் அரவிந்தசாமி.

## தப்புமா?

அசோக்குமார் இயக்கியுள்ள 'காமா' பலத்த சர்ச்சையை கிளப்பியுள்ளது. தணிக்கையில் பல காட்சிகள் தப்பாது என்று கூறுகிறார்கள்.

எப்படியாவது தணிக்கைக் குழுவுடன் போராடி படத்தை வெளியிடுவேன் என்கிறார் அசோக்குமார்.

## ஹவுஸ் ஃபுல்

தமிழக பத்திரிகைகள் சில 'ஹவுஸ் ஃபுல்' படத்தைப் பற்றி பரபரப்பாக செய்தி வெளியிட்டன. ஆனால் படம் பப்படமாக வந்திருக்கிறது.

திரையரங்கில் குண்டு கண்டுபிடிக்க மேற்கொள்ளும் முயற்சிகள் படு சலிப்பு.

படம் எதிர்பார்த்தளவு ஓடாவிட்டாலும், குறைந்த செலவில் தயாரான படம் என்பதால் நஷ்டம் ஏற்படாது.

படத்தில் பாடல்கள் கிடையாது. விக்ரம், சுவலட்சுமி வடிவேல் ஆகியோர் சிரிப்பூட்டுகிறார்கள். பார்த்திபனின் காரமான வசனங்கள் மட்டுமே குறிப்பிட்டு சொல்லக்கூடிய அம்சம்.

## பறக்கும் சோனாலி

'பம்பாய்' படத்தில் 'ஹம்மா ஹம்மா' பாடலுக்கு வந்து ஆடி, ரசிகர்களது இதயங்களை ஆடவைத்தவர் சோனாலி பந்த்ரே. 'காதலர் தினம்' மூலம் மறுபடி தமிழ்ப்பட ரசிகர்களை கட்டிப்போட வருகிறார்.

படப்பிடிப்பு இழுபட்டுக் கொண்டிருக்கிறது. சோனாலி மும்பாயில் இருந்து வந்து கலந்துகொண்டுவிட்டு பறந்து போய்விடுகிறார்.

துரிதமாக படப்பிடிப்பு நடக்காவிட்டால், பறந்துதிரியும் செலவு ஒரு படம் தயாரிக்கும் செலவுக்கு சமனாகிவிடும் என்று தயாரிப்பாளர்களுக்கு கூறியுள்ளாராம் சோனாலி.


லிவிங்ஸ்டன்-அனுஷா-வடிவேலு
படம்: உனக்கும் எனக்கும் கல்யாணம்

www.padippakam.com

# அலுப்பில்லாத கவிதை
## டயானா நினைவிடத்தில் காதல்

படம்: காதல் கவிதை
நடிப்பு: பிரசாந்த், இஷா கோபிகர், கஸ்தூரி, மணிவண்ணன், அம்பிகா, ஸ்ரீவித்யா, ராஜீவ், சார்லி...
இயக்கம்: அகத்தியன்.
இசை: இளையராஜா.
ஒளிப்பதிவு: ரவியாதவ்.

காதல் கோட்டை போலவே இதிலும் முகம் தெரியாத காதல்.

பிரசாந்த்தும், இஷா கோபிகரும் மோதலில் ஆரம்பித்து நண்பர்களாகிறார்கள். ஆனால் காதலர்களல்ல.

இஷா கலைக்குழு ஒன்றுடன் இலண்டன் செல்கிறார். பெரும் பணக்காரரான மணிவண்ணனின் மகனான பிரசாந்த்தும் பொழுதைப்போக்க இலண்டன் போகிறார்.

டயானா நினைவிடத்தில் பூங்கொத்து ஒன்றை வைத்து டயானாவை தாயாக சித்தரித்து கவிதை ஒன்றையும் எழுதி வைத்துவிட்டு போகிறார் பிரசாந்த். அங்கு பூங்கொத்து வைக்க இஷாவும் வருகிறார். அங்கு தமிழன் என்ற பெயரில் கவிதையும், பூங்கொத்தும் வைக்கப்பட்டிருப்பதை காண்கிறார்.

கவிதை அவர் மனதை கவருகிறது. தனது பூங்கொத்திலும் அந்த தமிழனை பாராட்டி தமிழச்சி என்ற பெயரில் கவிதை எழுதி வைத்துவிட்டுப் போகிறார். அந்த கவிதையை பிரசாந்த்தின் நண்பரான தலைவாசல் விஜய் பார்த்துவிட்டு, பிரசாந்துக்கு கூறுகிறார். அதன் பின்னர் பூங்கொத்து ஊடான கவிதை பரிமாற்றம் தொடர்கிறது. காதல் வளர்கிறது.

பிரசாந்துக்கும் இஷாவுக்கும் ஒருவரை ஒருவர் தெரிந்திருந்தும், தனது காதலி இஷா என்பது பிரசாந்துக்கோ, தனது காதலர் பிரசாந்த் என்பது இஷாவுக்கோ தெரியாததுதான் படத்தின் சுவாரசியம். டயானாவின் நினைவிடத்தை வைத்தே காதலை உருவாக்கிய அகத்தியனின் மூளைக்கு சபாஷ் போடலாம்.

படத்தில் பிரசாந்தை மயக்கத் துடிக்கும் கஸ்தூரி கவர்ச்சியை பிழிந்து தருகிறார். சில்க் சுமிதா பாணியில் கஸ்தூரியை உரித்துப் போட்டிருக்கிறார் அகத்தியன்.

'காதல் கோட்டை' அளவுக்கு இல்லையானாலும் காதலர்களுக்கு பிடித்தமான படம். சென்னையில் மூன்று திரையரங்குகளில் 50 நாட்களை தாண்டி ஓடிக்கொண்டிருக்கிறது.

அபிப்பிராயம்: அலுப்பில்லாத கவிதை. ஒரு தடவை பார்க்கலாம்!

## 50 கிலோ தாஜ்மஹால்–மறுபடி பிரசாந்துடன்

பிரசாந்த்துக்கு இப்போது அதிஷ்டகாலம். 'ஜின்ஸ்' படத்தின் பின்னர் மனிதர் பக்கம் அதிஷ்டக்காற்று ஓயாமல் அடிக்கிறது.

புதிய பட வாய்ப்புக்கள் குவிவது ஒரு புறமிருக்க, அவருடன் ஜோடியாக நடிக்க நடிகைகள் ஆவலாக உள்ளனர்.

'கண் எதிரே தோன்றினாள்' பிரசாந்த், சிம்ரான் ஜோடியாக நடித்த படம், வெள்ளிவிழா நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறது. மறுபடி சிம்ரானும் பிரசாந்த்தும் இணையும் படத்தின் பெயர் என்ன தெரியுமா? 'ஜோடி'.

'ஜோடி' படத்தில் பிரசாந்தின் மனம் கவர்ந்த இன்னொரு கதாநாயகியும் உண்டு. உலக மா அழகி, 50 கிலோ தாஜ்மஹால் ஐஸ்வர்யாராய்.


ஜோடி படத்தை இயக்குபவர் பிரவீன் காந்த். சுஷ்மிதா சென், நாகார்ஜுன் நடித்த 'ரட்சகன்' படத்தை இயக்கியவர். இசை: ஏ.ஆர்.ரகுமான். பாடல்கள்: வைரமுத்து.

ரகுவரன், மணிவண்ணன், நாசர், விவேக், சின்னி ஜெயந்த், ஸ்ரீவித்யா, அம்பிகா ஆகியோரும் நடிக்கின்றனர்.

## என்றும் என்னுடன்

'ஆஹா படநாயகன் ராஜீவ் கிருஷ்ணா. இவர் நடிகை ரேவதிக்கு மைத்துனர் முறை. படவாய்ப்பு இன்றி இருந்த ராஜீவ் கிருஷ்ணாவுக்கு 'என்றும் என்னுடன்'.

ராஜீவ் கிருஷ்ணாவின் ஜோடியாக சங்கீதா நடிக்கிறார். ரகுவரன், மணிவண்ணன், எஸ்.பி.பாலசுப்பிரமணியம், அம்பிகா, அனுஜா ஆகியோரும் நடிக்கின்றனர்.
இயக்கம்: எம்.ராகவேந்தர்.
இசை: சவுந்தர்யன்.




## எதிரிகளை புரட்டிய படையப்பா
### ரஜினிக்கு எதிராக ரம்யா சதி

'படையப்பா' படத்தில் ரம்யா கிருஷ்ணனுக்கு கலக்கலான பாத்திரம். ரஜினியை மணம் முடிப்பவர் சௌந்தர்யாதான். ஆனால் ரஜினியை ஒரு தலையாக காதலித்து, அந்தக் காதல் கைகூடாமல் போனதால் வில்லியாக மாறும் பாத்திரம் ரம்யா கிருஷ்ணனுக்கு.

முரசுக்கு தமிழக நிருபர் மயன் அனுப்பிவைத்த படையப்பா பற்றிய சிறப்புத் தகவல்கள் இதோ:

'ரஜினியுடன் அமோகமான கவர்ச்சியுடன் ரம்யாவுக்கு ஒரு கனவுப் பாடல். 'மின்சாரக் கண்ணா' என்று தொடங்கும் அந்தப் பாடலில் வெள்ளையும், கறுப்பும் கலந்த உடையுடன் தூள் கிளப்புகிறார் ரஜினி.

"படையப்பா என்னை காதலிக்காவிட்டால் நான் இறந்து போவேன்" என்று கூறிவிட்டு தன் அறைக்குள் உண்ணாவிரதம் இருப்பார் ரம்யா.

'படையப்பாவுக்கும் உனக்கும் கல்யாணம் பண்ணி வைப்பது என் பொறுப்பு' என்று மகளை சமாதானப் படுத்துகிறார் ராதாரவி.

இதற்கிடையே அப்பா சிவாஜி பார்த்த பெண்ணான சௌந்தர்யாவை ரஜினி மணக்கிறார்.

### வில்லி

இதனை அறிந்த ரம்யா கொதிக்கிறார் ராதாரவியும் இறக்கிறார். "என் சந்தோசத்துக்கும், என் அப்பாவுக்கும் எமனாக இருந்த படையப்பாவை சந்தோசமாக வாழ விடேன்" என்று சபதம் செய்கிறார் ரம்யா. வில்லியாக மாறுகிறார்.

காலம் உருள்கிறது. ரஜினி, சௌந்தர்யாவுக்கு இரு மகள்கள். வசந்த மாளிகை சிவாஜி போன்ற கெட்-அப்பில் தோளில் நீண்ட அங்கியுடன், கறுப்பு கண்ணாடியும், நரைத்த தாடியும், புகையும் சுருட்டுமாய் ரஜினி அசத்துகிறார்.

வில்லன் நாசர் கோஷ்டியை 'படையப்பா' தன் படையுடன் சென்று எச்சரிக்கும் காட்சி 'பாட்ஷா' படப் பாணியில் எடுக்கப்பட்டுள்ளது.

கல்யாணமாகாது வாழும் ரம்யா தன் அண்ணன் மகன் அப்பாசை ரஜினியின் மகள் ப்ரீதாவை காதலித்து ஏமாற்றுமாறு ஏவிவிடுகிறார். அப்பாஸ் ப்ரீதாவை உண்மையாகவே காதலிக்கத் தொடங்கிவிடுகிறார்.

அப்பாசுடன் ரஜினி காரில் விரையும்போது, ரம்யாவின் ஆட்கள் வழி மறிக்கிறார்கள். ரஜினி காரிலிருந்து படு ஸ்ரைலாக இறங்குகிறார்.

அங்கிள் நீங்கள்...?" என்று அப்பாஸ் தடுக்க முயல, ரஜினி:

"என்ன வயசாயிருச்சேனு பாக்குறீங்களா? உடம்புக்குத்தான் வயசாச்சு. மனசுக்கு இன்னும் வயசாகலை. நீங்க உட்காருங்க" என்று கூறிவிட்டு எதிரிகளைப் பந்தாடுகிறார்.

காதல், மோதல், இறுதியில் ரம்யா தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டுகொண்டு மாய்ந்து போகிறார்.




## திரையுலக மறுபக்கம் 91 இயக்குநரை மாற்றிய நடிகை

தமிழ்நாட்டிலிருந்து மயன்

சன் ரி.வியில் ஒளிபரப்பாகிவரும் மூன்றெழுத்தைகங கொண்ட தொடர் நாடகம் அது. இலங்கையிலும் தற்போது ஒளிபரப்பாகி வருகிறது. ஊர்வசிதான் இந்த நாடகத்தில் கதாநாயகி.

இந்த நாடகத்தை முன்னர் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி, இன்றும் அதே பெயரை கொண்டுள்ள நடிகை தயாரித்து வழங்குகிறார்.

நாடகத்தை இயக்குவதற்காக தனக்கு பலவிதத்திலும் ஒத்துப்போகக்கூடிய இயக்குநரை ஒப்பந்தம் செய்தார் நடிகை.

அந்த இயக்குநருக்கு ரயில் நடிகை என்றழைக்கப்படும் மூன்றெழுத்து 'ரா' நடிகையும் நன்கு பரிச்சயம்.

நாடக தயாரிப்பாளரான நடிகையின் கணவர் சபலப் பேர்வழி. தன் துணைவியின் போக்குப்பற்றி அலட்டிக் கொள்ளமாட்டார். தானும் இஷ்டத்துக்கு விருந்து தேடுவார்.

ரயில் நடிகைமீது அவருக்கு ஏற்கனவே ஈர்ப்பு இருந்தது. 'ரயில்' படத்தை அந்தக் காலத்திலேயே பார்த்துப் பார்த்து நடிகையின்மேல் ஆசையை வளர்த்தவர் அவர்.

தன் மனைவியின் நாடகத்தை இயக்கும் இயக்குநருடன் பழக்கம் ஏற்பட்டபோது, ரயில் நடிகைக்கும் அந்த இயக்குநருக்கும் இடையே நட்பு இருப்பதை பேச்சுவாக்கில் அறிந்து கொண்டார்.

### இடம் கிடைத்தது

அந்த நேரம் பார்த்து 'ரயில்' நடிகை காலில் அடிபட்டு நடமாட முடியாத நிலையில் இருந்தார்.

இயக்குநருடன் நடிகையைப் பார்க்கப்போனார் தயாரிப்பாளரான நடிகையின் கணவர்.

'ரயில்' நடிகையின் வெளிநாட்டுக் கணவர் அமெரிக்காவுக்கு பறந்துவிட்டார். நடிகை தனியாகவே இருக்கிறார். துணை இல்லாமல் நீண்டநாள் தாங்கமாட்டாதவர் ரயில் நடிகை என்று இயக்குநர் மூலம் அறிந்துகொண்டார் தயாரிப்பாளரான நடிகையின் கணவர்.

அடிக்கடி ரயில் நடிகை வீட்டுக்கு செல்ல ஆரம்பித்தார். நடிகைக்கும் துணை தேவைப்பட்டது. தனது பல நண்பர்களில் ஒருவராக இடம்கொடுத்தார்.

'ரயில்' நடிகையை சக்கர நாற்காலியில் வைத்து தள்ளிச் செல்வதிலிருந்து, நடிகை எதிர்பார்த்த வேலைகளையெல்லாம் செய்து கொடுத்தார். நடிகைக்கும் அவரைப் பிடித்துப்போனதால், வீட்டுக்கே ஃபோன் செய்து அழைக்க ஆரம்பித்தார்.

### மாற்றம்

பாம்பின்கால் பாம்பறியும் என்பதற்கேற்ப, தயாரிப்பாளரான நடிகைக்கு சந்தேகம் துளிர்த்தது. மோப்பம் பிடிக்க ஆரம்பித்தார்.

இயக்குநர் மூலம்தான் தன் கணவர் ரயில் நடிகையின் மடியில் விழுந்திருக்கிறார் என்பதை தெரிந்து கொண்டார்.

அதனால் குறிப்பிட்ட தொடர் நாடகத்தின் பல காட்சிகள் எடுக்கப்பட்ட நிலையில், இயக்குநரை நீக்கிவிட முடிவு செய்துள்ளார் தயாரிப்பு நடிகை. ஆனாலும் தொடர் ஒளிபரப்பாவதில் எவ்வித தடங்கலும் நேராது. ■

## சேரனின் காதலி

முரசின் முகப்பில் அமர்ந்திருப்பவர் நடிகை ராஜேஸ்வரி. இயக்குநர் சேரனின் 'பொற்காலம்' படத்தில் முரளியின் தங்கையாக, ஊமையாக நடித்து பெரும் பாராட்டுப் பெற்றவர்.

சேரனின் 'தேசிய கீதம்' படத்திலும் ராஜேஸ்வரிக்கு தங்கை வேசம். சிறப்பாக நடித்தார். மீனாவை காதலித்த சேரன் இப்போத காதலிப்பது ராஜேஸ்வரியைத்தான். இருவரும் இணைந்தே கோயில்களுக்கு சுற்றுலா சென்று வந்திருக்கின்றனர்.

விரைவில் சேரன் தனது திருமண செய்தியை அறிவிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## மக்கள் நண்பன்

சத்யராஜ், பிரபு ஜோடியாக நடிக்க மணிவண்ணன் படம் இயக்கப்போவதாக செய்தி வெளியிட்டிருந்தோம். படத்தின் பெயரும் முடிவாகிவிட்டது. 'மக்கள் நண்பன்'.

ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் மணிவண்ணன் இயக்கும் படம் இது. நடிப்பில் மூழ்கி களைகளையாக சம்பாதிக்கும் மணிவண்ணன், தன் நண்பரான சத்யராஜுக்காக இயக்கும் படம் இது.

பிரபு ஜோடியாக ரோஜாவும், சத்யராஜ் ஜோடியாக தேவயாணியும் நடிக்கின்றனர். ரகுவரன், நாசர், செந்தில், தலைவாசல் விஜய், பேபி ஜெனிபர், விவேக் ஆகியோரும் நடிக்கின்றனர். இசை: தேவா. ஒளிப்பதிவு: ராம்நாத் ஷெட்டி.

## பெயர் மாற்றம்

மொழி மாற்றுப் படங்கள் தமிழில் வருவதால் ஒரே குழப்பம். எது நேரடித் தமிழ்ப் படம்? எது மொழி மாற்றுப் படம் என்பது தெரிவதில்லை.

'வெள்ளி நிலவே' படத்திற்கும், 'மன்னவரு சின்னவரு' படத்திற்கும் இசையமைத்தவர் ராஜ் கோட்டி.

அவரது பெயரை வெளியிட்டால் மொழி மாற்றுப் படம் என்று ரசிகர்கள் நினைத்து விடுவார்களே. அதனால் 'வெள்ளி நிலவே' படத்தில் அவர் பெயரை 'கரண்' என்றும், 'மன்னவரு சின்னவரு' படத்தில் அவர் பெயரை கீதப்பிரியன் போட்டு விட்டனர்.

இப்படியெல்லாம் தன் பெயர் தமிழில் மாற்றப் படுவது ராஜ்கோட்டிக்கே தெரியாதாம்.

www.padippakam.com

## நம் கையில்: நம் பலன்கள்!

நீ சிரிக்கும் போது
சேர்ந்து சிரித்தால்–அது
ரசிப்பு...!
உனைப் பார்த்துச் சிரித்தால் அது–
பழிப்பு....!

நீ அழும்போது
சேர்ந்து அழுதால்–அது
சலிப்பு...!
உனைப்பார்த்து அழுதால் அது
கண்துடைப்பு...!

எவர்க்காகவும் எவரும்
வாழ்வதில்லை:
தமக்காக– தமக்காகவே...!
நமக்காக நாம்தான்
அழுவதும் சிரிப்பதும்;
நமக்காக பிறர் தூங்கி
எம்பசிக்கு எவனோ
உணவுண்டு
உயிர் வாழ்வதென்ற
நியதி உண்டா?

நன்மையும், தீமையும்
நாம் செய்பவை;
வந்தபோது ஒன்றும்
கொண்டு வரவில்லை;
போகும்போது கொண்டு போவோம்–
செய்யும் நன்மையையும்,
தீமையையும் மட்டும்!
ஆக......
செய்! ஏதாவது செயலாற்று....!
சேர்த்து வை முடிந்தவரை.....
அவை நல்லவையாகட்டும்!
நிச்சயம் பலன் கொடுக்கும்!
நம் கையில்தான் நம் பலாபலன்கள்!

ஜெ. சூரியன்–
வெள்ளவத்தை.

## இதுதானா காதல்...?

இனியவளே.....!
நம்
**
காதலை
கலைத்து விடு என்கிறாயே...?
**
இது என்ன
நம் நாட்டு
மாகாண சபைகள் என்று
நினைத்தாயோ..?!
**
நீ
போய் விட்டாய்–
புதிய கூட்டணி
அமைக்க...
நானல்லவா
'தலைமையை
நம்பிய மக்களை'ப் போல்
ஏமாற்றப்பட்டுக் கிடக்கிறேன்...!
**
உனக்கு
மறந்து போயிருக்கலாம்–
என் நினைவுகள்...
ஆனால்
என் நினைவுகளைவிட்டு
நீ
நீங்கவே மாட்டாய்...!
'அந்த
கறுப்பு ஜூலை'யை'ப் போல...!
**
கண்மணி....!
நீ
கலைத்துவிடச் சொன்ன
காதல் இன்னும்
கலையாமலே உள்ளது...
நம் மக்களின்
'சமாதான
கனவை'ப் போல...!

இராம. யுவராஜ்– கண்டி.



## நேற்றும் இன்றும்

நாம் சிறு வயதில் எடுத்த புகைப்படங்களை காணும்போது, நமக்கே ஆச்சரியமும், சந்தோசமும் ஏற்படுமல்லவா. அதுபோல நமக்கு பிடித்தமான வர்களது சிறு வயதுத் தோற்றங்களும் நம் மனதுக்கு மகிழ்ச்சியைத் தருமல்லவா.



இங்கு பொய்க் குதிரையில் சவாரி செய்பவரும் மாணவனாக 'ரை' கட்டியிருப்பவரும் ஒருவர்தான். யார் என்று தெரிகிறதா? சற்று யோசியுங்கள். என்ன யோசித்துப் பிடித்தீர்களா?



கவிஞர் வைரமுத்து தான் அவர். அன்று குழந்தையாக இருந்தவருக்கு இன்று இரண்டு பையன்கள். துணைவியார் பொன்மணியும் ஒரு கவிஞர். மகன் கபிலனும் கவிதை எழுதத் தொடங்கி இருக்கிறார்.

## என் இதயம்

என் இதயத்தை
தரமுடியாது–
உனக்கு....!
காரணம்–
அது
என்னிடமில்லை.
...
எங்கோ?
இல்லை
யாரிடமோ?
என்னிடம்
கேட்காதே!
ஏன் என்றால்:
என்னை
எனக்கே தெரியாது!
...
எனக்குத் தெரியும்–
அது இனியும்கூட
எனக்குச் சொந்தமாக
இராது!
...
சிலவேளை,
அது பிறரிடமிருக்கலாம்;
இல்லை
எவரிடமும் இல்லாமலும்
இருக்கலாம்!
...
ஆனால்,
உனக்குத்
தரமுடியாது!
ஏன் என்றால்,
அது
எனக்குச் சொந்தமில்லை!
...

யாழ். ஞானகணேசன்– திருகோணமலை.
ஆங்கிலத்தில்–மரகஷன்னா ஷரக்

## தேன் கிண்ணம்

## வாழ்க்கை

வாழ்க்கை ஒரு
சோகம்– சமாளியுங்கள்!

வாழ்க்கை ஒரு
வெகு மதி– ஏற்றுக்
கொள்ளுங்கள்.

வாழ்க்கை ஒரு
வேதனை– தாங்கிக்
கொள்ளுங்கள்!

வாழ்க்கை ஒரு
போராட்டம்–
வென்று காட்டுங்கள்!

வாழ்க்கை ஒரு
கடமை– நிறை
வேற்றுங்கள்!

வாழ்க்கை ஒரு
சந்தர்ப்பம்–
நழுவ விடாதீர்கள்!

வாழ்க்கை ஒரு
விளையாட்டு–
ஈடு படுங்கள்!

வாழ்க்கை ஒரு
புதிர்– விடுவியுங்கள்.

வாழ்க்கை ஒரு
பயணம்– சென்று
முடியுங்கள்!

க. கலைவாணி–
பேசாலை–மன்னார்.

## நித்திரை தொலைத்தேன்

இதய தேசத்திலிடம் பிடித்து
இரண்டு நாழிகையிருந்துவிட்டு
இரடி வருவேன் என்றவனே–
இன்னுமென்ன நீ செய்கின்றாய்...?
...
மனசைக் கேட்டாய தந்துவிட்டேன்!
உன் மனைவியாக மாறிவிட்டேன்!
உயிரை மட்டும் உடன் கொண்டு– நீ
ஊர் விட்டுப் போகவும்
உரிமை தந்தேன்...!
...
நெஞ்சில் உனக்கு இடம் வைத்து,
நீ சென்ற திசையில் தலை வைத்து,
நீங்காத நினைவிற்குச் சிலை வைத்து,
நிற்கிறேனய்யா நித்திரை தொலைத்து!

திருமதி மனோ தாமோதரன்– இறம்பைக்குளம்.

## பேனா நண்பர்கள்



பெயர்: எஸ். சத்தியசீல சர்மா,
வயது: 19
முகவரி: இல 4, 6ம் யுனிற், இராமநாதபுரம், கிளிநொச்சி.
பொழுது போக்கு: பத்திரிகை, பேனாநட்பு.



பெயர்: வி. மணிமேகலா
வயது: 23
முகவரி: 10/1, ஜோர்ஜ் வீதி, திருகோணமலை.
பொழுது போக்கு: பத்திரிகை, ரீ.வி.



பெயர்: எஸ். ஜெமில்,
வயது: 19
முகவரி: முதலாம் குறுக்குத் தெரு, வாழைச்சேனை.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: ஜெ. நிபானா,
வயது: 16
முகவரி: நடுஊற்று, 5ம் வட்டாரம், கிண்ணியா.
பொழுது போக்கு: வழமையானவை.

# கைரேகையும் காதல் ஜோசியமும்

### கைகளைப் பாருங்கள்

முதலில் உங்கள் வலது உள்ளங் கையை உற்றுப் பாருங்கள். இதற்குப் பெரிதாக நீங்கள் ஒரு ரேகை சாஸ்திரியாக இருக்கவேண்டும் என்கிற தேவை இல்லை. பக்கத்தில் தரப்பட்டிருக்கும் படத்தைப் பார்த்துக்கொள்ளுங்கள்.

படத்திலே பார்த்து மேடுகளின் பெயர்களைத் தெரிந்து கொள்ளுங்கள்.

### குருமேடு

#### அளவான அமைப்பு

அனுசரித்துப் போவார். உற்சாகமானவர். துரோகத்துக்குப் பயப்படுவார். அன்பானவர். பக்தியுள்ளவர். தொழிலில் முன்னுக்கு வருவார். தன்னம்பிக்கை உடையவர்!

#### அதிகமான புடைப்பு

தனிமை விரும்பி. இல்வாழ்க்கையிலும்




அரசியல் பார்க்கும் பேர்வழி. மிகவும் கறார் பேர்வழிபோல நடந்து கொள்ளப் பிரியப்படுவார். டாம்பீகமாகக் காண்பித்துக் கொள்வார்.

#### அமுங்கிப் போன அமைப்பு

தன்னம்பிக்கை மிகவும் குறைவு. விரக்தியாகப் பேசுவார். குடும்பப் பாரம்பரியம் அவ்வளவாக இருக்காது. அடிமைத் தொழிலை செக்கு மாடு போலச் செய்வார்.






1. குருமேடு 2. சனிமேடு 3. சூரியன் மேடு 4. புதன் மேடு 5. சுக்கிரன் மேடு 6. சந்திரமேடு 7. மேல் செவ்வாய் மேடு 8. கீழ்ச் செவ்வாய் மேடு 9 செவ்வாய் சமவெளி.

### சனி மேடு

#### அளவான மேடு

கொஞ்சம் சுயநலம் உடையவர். காரியம் ஆனதும் "அப்ப, வரட்டுமா?" என்பார். கண்ணீர் காட்டி மயக்க முடியாது. நடத்தை பரவாயில்லை ரகம்.

#### அதிகமான மேடு

பயங்கரமான ஆள். பால் உணர்ச்சிகள் எல்லாம் இவர் இஷ்டப்பட்டால்தான் உண்டு. சதா சிந்தனை. சிந்தனையில் குறுக்கிட்டால் 'குறைத்து' விடுவார். 'ரொமான்ஸ்' எல்லாம் வேண்டாத வேலை என்பார்.

#### அமுங்கிப் போன மேடு

உற்சாகமானவர். கண்ணைக் கசக்கினால் இவரிடம் காரியம் சாதிக்கலாம். "உங்களை விட்டால் வேற யார்?" என்றால் போதும். கிடைக்காத பண்டங்கள் எல்லாம் உங்கள் கையில். குடும்பத்துக்குத் தேவையானவர்.

பொதுவாகவே, குடும்ப வாழ்க்கை, காதல் இந்த விஷயங்களில் குருமேடு, சனிமேடு இவைகளைக் கவனித்து விட்டு முடிவெடுக்கத் தொடங்கலாம்.

அடுத்து நீங்கள் பார்க்க வேண்டியது சுக்கிரமேடு.

### சுக்கிரமேடு

இந்த மேடு நன்றாகப் புடைப்பாக இருந்தால் ஜாலியான ஆள். படுக்கை வாக்கில், குறுக்காக ரேகைகள் நிறைய இருந்தால் உணர்ச்சிவசப்பட்டவர். பழக்கம் வெறும் பேச்சு அளவில் இருக்கட்டும் என்று சொல்லி விடுங்கள்.

இந்த மேடு அமுங்கி இருந்தால் நீங்கள்தான் இவரை விரட்டி விரட்டிக் காதலிக்க வேண்டும். ஜாலியான பேச்சு சுட்டுப் போட்டாலும் வராது. "எதுக்கு இந்த விலை உயர்ந்த மரக்கறிகள் எல்லாம்? பயத்தங்காய் போதுமே!" என்பார்.

"போய் வாங்கிக்கொண்டு வாங்கன்னா வாங்கிக்கொண்டு வாங்களேன்!" என்று நிச்சயமாக விரட்டலாம்.

இந்த மேடு அளவுக்கு அதிகமாகப் புடைத்து இருந்தால், பத்தியக் காதல் என ஆரம்பத்திலேயே சொல்லிவிடுங்கள். நாலு பேர் மத்தியிலேயே பேசுங்கள். அதிகமாகத் தொல்லை கொடுத்தால் உங்கள் வீட்டு தீராத பிரச்சனைகளைச் சொல்லத் தொடங்குங்கள். ஆசாமி ஓடிவிடுவார்.



படிப்பகம்

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## கண்களைக் கவனியுங்கள்

உறங்குவதால் மட்டும் கண்களுக்கு ஓய்வு கிடைக்கிறது என்று நினைப்பது சரியல்ல. கண்கள் எப்பொழுதும் அசைந்து சுற்றிக்கொண்டே இருந்தால்தான் கண்களுக்குச் சரியான ஓய்வு கிடைக்கிறது என்று டாக்டர் பேட்ஸ், தம்முடைய 35 வருடகால ஆராய்ச்சியின் முடிவுக்குப் பிறகு சொல்லியிருக்கிறார்.



விழித்த கண்களை விழித்தபடி ஒரு பொருளை உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பது கண்களுக்குக் கெடுதல். ஆகையால் படம் பார்க்கும்போதும், புத்தகம் படிக்கும் போதும், அடிக்கடி வேறு பக்கங்களில் கண்களைத் திருப்பிக் கொண்டிருக்க வேண்டும். அதற்காக அடிக்கடி இமைக்கக்கூடாது. அடிக்கடி இமைத்தால் 'கண் சிமிட்டி' என்ற பெயர் எவர் மூலமாவது எப்படியாவது வந்துவிடும்.

கறுப்பு நிறத்தைப் பார்ப்பதும், கண்களை மூடிக்கொண்டு அதை உணர்வதும் கண்களுக்கு ஓய்வளிக்கும் பயிற்சிகள். படுக்கும் தலையணையும் போர்த்துக் கொள்ளும் போர்வையும், படுக்கும் மெத்தை உறையும் கறுப்பாயிருப்பது கண்களுக்கு மிகவும் நல்லது.

கண்களில் தூசு, துரும்புகள் விழாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கண்களில் ஏதாவது விழுந்து விட்டால் உடனே கண்களைக் கசக்கக்கூடாது. அப்படியே ஒன்றும் செய்யாமல் விட்டுவிட வேண்டும். இரவில் படுக்கும் பொழுது எந்தக் கண்ணில் தூசு, துரும்புகள் விழுந்தனவோ, அந்தக் கண்ணில் ஒரு சொட்டு விளக்கெண்ணையை விட்டு கொண்டு படுத்துக்கொள்ள வேண்டும். மறுநாள் காலையில் அந்தத் தூசு துரும்புகள் கண்ணோரமாய் ஒதுங்கி விடும். அதை அப்படியே எடுத்துவிட வேண்டியதுதான்.

கண்களில் இரும்புத்தூள் விழுந்து விட்டால் காந்தக் கல்லையே அல்லது காந்தக் கம்பியையோ கண்ணருகில் கொண்டு போனால் இரும்புத்தூள் வெளியே வந்து விடும்.

அதிக வெளிச்சத்தில் படித்தல், திரைக்கு அருகிலிருந்து படம் பார்த்தல், சிறிய எழுத்துக்களை கூர்ந்து படித்தல் போன்றவற்றால் கண்டிப்பாகத் தூரப் பார்வை சரியாகத் தெரியாது.

தூரப் பார்வை சரியாகத் தெரியாதவர்கள் காலை வேளைகளில் ஒவ்வொருநாளும் சில விநாடிகளுக்கு சூரியனை உற்றுப் பார்க்க வேண்டும். விட்டமின் 'பி' மாத்திரைகளைத் தொடர்ந்து சாப்பிட வேண்டும்.

வெள்ளெழுத்து வருவதற்கு காரணம், இரத்தத்தில் போதிய சத்து இல்லாததுதான். சுண்ணாம்புச் சத்தும், விட்டமின் 'பி'யும் இரத்தத்தில் கலந்திருந்தால் வெள்ளெழுத்து வராது. சுண்ணாம்புச் சத்து மற்றும் விட்டமின் 'பி' போன்றவற்றை உட்கொண்டால் வெள்ளெழுத்து வராது.

மேலே கூறியவற்றை, குறைந்த எண் உள்ள கண்ணாடி அணிந்தவர்கள் கடைப் பிடித்தால் சில ஆண்டுகளுக்குள் கண்ணாடியைக் கழற்றி விடலாம் என்பது உறுதி.

உடல் உறுப்புக்களில் மிகுதியான ஆற்றலைச் செலவழிப்பவையும் கண்கள்தான். ஆகையால் எம்முறையிலும் அலட்சியப்படுத்தக்கூடாது கண்களை. ●

## நூறு வருசம் நீங்களும் வாழலாம்



பெங்களூரில் இருந்த டாக்டர் விஸ்வேஸ்வரய்யா 103 ஆண்டுகள் வாழ்ந்தவர். 100 ஆண்டுகள் வாழ அவர் கூறிய வழிகள்:

- ★ எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள்.
- ★ மனச்சாட்சிக்கு விரோதமான செயலைச் செய்யாதீர்கள்.
- ★ அளவோடு சாப்பிடுங்கள்.
- ★ நாள் தோறும் குறித்த நேரத்தில் தூங்குங்கள்.
- ★ கடன் வாங்காமல் வரும் வருமானத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்துங்கள்.
- ★ சம்பாதிக்கும் காலத்திலேயே சேர்த்து வையுங்கள்.
- ★ எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருங்கள். களைப்பு ஏற்படும் வரை வேலை செய்யுங்கள்.
- ★ ஒரு குறிக்கோளை நோக்கி வாழ்க்கை நடத்துங்கள்.
- ★ மனைவியை, கணவரை மகிழ்ச்சியுடன் வைத்துக் கொள்ளுங்கள். தனியாக இருந்தால் திருமணம் செய்து கொள்ளுங்கள்.
- ★ குழந்தையுடன் கொஞ்சி விளையாடுங்கள்.

### சூப்பர் அதிஷ்டசாலிகள்

அம்மன் ஜுவலர்ஸ்- முரசு இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டியில் ஆறுதல் பரிசுபெறும் 50 அதிஷ்டசாலிகளது பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டு விட்டன.

முதல் மூன்று சூப்பர் அதிஷ்டசாலிகளது பெயர் விபரங்கள் அடுத்த வாரம் வெளியாகும். அதிஷ்டசாலிகளை தேர்ந்தெடுக்கும் அம்மன் ஜுவலர்ஸ் உரிமையாளர் தவிர்க்க முடியாத காரணங்களால் இந்த வாரம் சூப்பர் அதிஷ்டசாலிகளை தெரிவு செய்ய இயலவில்லை. அடுத்த வாரம் பெயர்கள் வெளியாகும். ●

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** FG

பெயர்:.........................

முகவரி:.........................

.........................

தொழில்:.........................

கையொப்பம்:.........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 27-02-1999**

அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

# கண்ணீரில் கரைந்த இரவுகள் 75

புவனா



தனது சிநேகிதிகளில் ஒருவர் மூலமே டாக்டருடனான தனது நட்பு பற்றிய செய்தி பத்திரிகைகளுக்கு சென்றுள்ளது என்பதில் டயானாவுக்கு சந்தேகமிருக்கவில்லை.

யாரோ ஒருவர் செய்த தவறுக்காக அனைவர்மீதும் சந்தேகப்படவும் விரும்பவில்லை.

மிக நம்பகமான சிநேகிதிகளும் இருந்தனர். அவர்கள் டயானாவுக்காக உயிரையும் கொடுப்பார்கள். அந்தரங்கமான தகவல்களை பொத்தி வைத்திருப்பார்கள்.

டாக்டருடன் தனது காதல் பகிரங்கமானதால், கென்சிங்டன் மாளிகையில் வைத்து அவரை சந்திப்பதை டயானா தவிர்த்தார்.

இலண்டனில் டாக்டர் ஹஸ்னற்றுக்கு தனியான மாளிகை ஒன்று இருந்தது.

அங்கு சந்தித்துக் கொள்ளலாம் என்று கூறினார் ஹஸ்னற்.

பழைய காரில் சுற்றித் திரியும் டாக்டருக்கு மாளிகை ஒன்றே சொந்தமாக இருப்பது டயானாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அவரது எளிமையை வறுமையாக நினைத்துவிட்டோமே என்று வருந்தினார். அதனால் டாக்டருக்கு கார் பரிசளிக்கும் யோசனையைக் கைவிட்டார்.

### தனிமாளிகையில்

டாக்டரின் மாளிகைக்கு சென்றபோது டயானா முதன் முதலாக கேட்ட கேள்வி: "இதற்கு முன்னரும் இங்கு வேறு பெண்கள் வந்திருக்கிறார்களா?"

டாக்டர் அதற்கு நேரடியாகப் பதில் கூறாமல் சிரித்து மழுப்பினார்.

மாளிகையில் ஒரு பணியாளர் மட்டுமே இருந்தார். அவருக்கு டாக்டருடன் வந்திருப்பது டயானா என்பது தெரியாது.

தனது மருத்துவமனையில் பணியாற்றும் நர்ஸ்களுடன் டாக்டர் அடிக்கடி வந்து போவதுண்டு. சில பெண் டாக்டர்களுடன் வந்து இரவு தங்கிவிட்டு காலையில் செல்லுவார்கள்.

போதும், டயானாவை மணப்பது குறித்து டாக்டர் பேசியதே கிடையாது.

டயானாதான் முதற் தடவையாக அந்தப் பேச்சை எடுத்தார். டாக்டர் வேறு பேச்சுக்குத் தாவி திசையை மாற்றிவிட்டார்.

சாள்ஸ், டயானா விவாகரத்தின் பின்னர் டயானாவுக்கு கிடைத்த மிகப்பெரும் வரவேற்பு என்று அதனைக் கூறலாம்.

அந்த வரவேற்பை பார்த்த டயானா ஒரு முடிவுக்கு வந்தார். "டாக்டருடன் திருமணம் நடந்தால் அவுஸ்திரேலியாவில் குடியேறக் கூடாது" என்பதே அந்த முடிவு.

### டாக்டர் நழுவல்

சிட்னியில் இருந்து டாக்டருடன் தொடர்பு கொண்ட டயானா, "நானும் நீங்களும் திருமணம் செய்து கொண்டு இங்கு வந்து வாழலாம் என்று நினைத்திருந்தேன். இங்கு மக்கள் என்மீது வைத்துள்ள அன்பை நேரில் கண்ட பின்னர் அந்த முடிவைக் கைவிட்டு விட்டேன். இங்கும் நான் அமைதியாக இருக்க முடியாது. கமராக்கள் துரத்தும். மக்கள் மொய்த்துக் கொள்வார்கள்" என்று கூறினார்.

டாக்டர் சிரித்தாரே தவிர பதிலேதும் சொல்லவில்லை. டாக்டரின் இத்தகைய போக்கு தொடர்ந்தபோது, டயானாவுக்கு சிறிது சந்தேகம் துளிர்த்தது.

அப்படியிருந்தும் முயற்சியைக் கைவிட வில்லை.

தென் ஆபிரிக்காவில் சத்திர சிகிச்சை நிபுணராகப் பணி புரிந்தவர் கிரிஸ்டியன் பர்னாட். அவர் டயானாவின் நெருங்கிய சிநேகிதி.

அவரை தொடர்பு கொண்ட டயானா, "அந்த நாட்டு மருத்துவமனையில் இருதய சத்திர சிகிச்சை நிபுணருக்கு வேலை கிடைக்குமா? என்று விசாரித்தார்.

அதற்கு முன்னரே டாக்டருடன் டயானாவுக்கு காதல் இருப்பதை கிரிஸ்டியன் பர்னாட் அறிந்திருந்தார்.



ஹஸ்னற் கான்

## டயானாவின் திருமண ஆசை

டாக்டர் ஹஸ்னற் உல்லாசமான ஆசாமி. டயானா அவரது வலையில் விழுந்த அழகான மீன்.

அந்த மீனை போதுமானவரை ருசித்து சாப்பிட்டுவிட்டு கைகழுவி விடப்போகிறார். அது டயானாவுக்கு தெரியவில்லை.

தன் ஆண் நண்பர்கள் விடயத்தில் மோசமான ஆசாமிகளையே டயானா நம்பி ஏமாந்தார்.

டாக்டர் ஹஸ்னற்றும் அதற்கு விதி விலக்கல்ல.

தனியான மாளிகையில் டயானாவின் மேனி எழிலை பூரணமாக அனுபவித்தார்.

காதல் லீலைகளில் கைதேர்ந்தவர் டாக்டர் ஹஸ்னற். டயானாவுக்கு டாக்டர்மீது பைத்தியமே பிடித்துவிட்டது.

டாக்டருடன் நெருக்கமாக பழகிய நர்சுகள் சிலர் அவரை 'கிராதகன்' என்று செல்லமாக அழைப்பார்கள்.

டாக்டருடன் தினமும் பல தடவைகள் தொலைபேசியிலாவது தொடர்பு கொள்ளா விட்டால் டயானாவுக்கு இருப்பே கொள்ளாது.

மருத்துவமனைக்கு தொடர்பு கொள்வார். சத்திர சிகிச்சை அறையில் டாக்டர் இருந்தால் தொடர்பு கொடுக்க மாட்டார்கள்.

மருத்துவமனை ஊழியர்களை வாய்க்கு வந்தபடி திட்டிவிடுவார். மனநிலையில் ஏற்பட்ட அதீத காதல் பித்துதான் டயானா அவ்வாறு நடந்து கொள்ளக் காரணம்.

வழக்கமாக சகலருடனும் அன்பாக நடந்து கொள்ளும் டயானா டாக்டருடன் பேச முடியவில்லை என்று ஆதங்கத்தில் புத்தி தடுமாறினார்.

டாக்டருடன் திருமணம் செய்து கொண்டு அமெரிக்காவுக்கோ, அவுஸ்திரேலியாவுக்கோ சென்றுவிட வேண்டும் என்று திட்டம் போட்டிருந்தார்.

ஒருமுறை தனது மகன் இளவரசர் வில்லியமுடன் டாக்டரை சந்தித்தார்.

"இவர்தான் டாக்டர் ஹஸ்னற்கான்!" என்று மகனுக்கு அறிமுகம் செய்து வைத்தார். வில்லியம் டாக்டருடன் கைகுலுக்கினார்.

தனது வருங்காலக் கணவர் டாக்டர்தான் என்று தீர்க்கமாக முடிவு செய்த பின்னரே, மகன் வில்லியமிடம் அவரை அறிமுகம் செய்து வைத்தார்.

டயானாவும், டாக்டரும் பல முறை சந்தித்த



அவுஸ்திரேலியாவில் டயானா

இப்படியே இரண்டு மூன்று தடவைகள் செய்த போதும், அவரை மலையாக நம்பியிருந்த டயானாவுக்கு சந்தேகம் எழவில்லை.

### சிட்னி பயணம்

இக் கட்டத்தில் அவுஸ்திரேலியா தலைநகரான சிட்னிக்கு மூன்றுநாள் விஜயம் ஒன்றை டயானா மேற்கொண்டார்.

அங்கு மகத்தான வரவேற்பு அளிக்கப் பட்டது. சிட்னி நகர மக்கள் திரண்டு வந்து பூச்செண்டுகள் கொடுத்து தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

அதனால்; "என்ன உன் நாளை கணவருக்காக, இன்றே வேலை தேடுகிறாயா?" என்று கிண்டல் பண்ணிவிட்டு, "அறிந்து சொல்கிறேன்" என்று கூறியிருந்தார்.

"அப்படியே தென் ஆபிரிக்காவில் அமைதியான சூழ்நிலையில் நல்ல வசதியான வீடொன்றும் பார்த்துக்கூறு. விலைக்கு வாங்கப் போகிறேன்!" என்றும் தன் சிநேகிதியுடம் கூறினார்.

இவற்றை அறிந்த டாக்டர் ஹஸ்னற்கான் உஷாரானார். இந்த வேகத்தில் போனால் டயானா திருமணத்திகதியையும் அறிவித்து விடுவார் என்று பயந்தார்.

டயானாவை சந்திப்பதை குறைத்து, விலக ஆரம்பித்தார். டாக்டரின் நினைப்புக்கு மாறான காரியம் ஒன்று நடந்தது.

டாக்டரின் குடும்பத்தினரைக் காண்பதற்காக பாகிஸ்தானுக்கு புறப்பட்டார் டயானா.

அங்கு...?

(அடுத்த வாரமும் வரும்)

### இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

### காத்தான்குடி வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | என். எம். மரியம் வீவி, ஹிஜ்ரா ஒழுங்கை, பழைய வீதி, காத்தான்குடி-03. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



படிப்பகம்

www.padippakam.com



# பாப்பா முரசு



நாட்டில் அவ மதிப்பும்
நாணின்றி இழி செல்வத்
தேட்டில் விருப்பும் கொண்டே-கிளியே
சிறுமை யடைவா ரடீ!

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

## ஊர் இரண்டுபட்டால்...

ஒரு காட்டில் வேடன் ஒருவன் அம்பால் மான் ஒன்றை அடித்தான். காயமடைந்த மான் வேடனின் கையில் சிக்காமல் ஓடியது. வேடனால் அதைப் பிடிக்க முடியவில்லை. அவன் அதைப் பிடிக்க முயற்சிக்காமல் விட்டுவிட்டான்.

காயமடைந்த மானின் உடம்பில் இருந்து இரத்தம் அதிகம் விரயமானதால், அது காட்டின் நடுவில் வந்து, விழுந்து இறந்துவிட்டது.

மான் இறந்த இடத்திற்கு இரண்டு சிங்கங்கள் வந்தன. அவை இரண்டும் மானை உண்ண முயற்சித்தன.

ஒரு சிங்கம் மற்றதைப் பார்த்து,

"ஏய்! நான்தான் இந்த இரையை முதலில் பார்த்தேன். ஆகவே நான்தான் தின்பேன். நீ பேசாமல் இந்த இடத்தை விட்டுப் போய்விடு!" என்றது.


அதற்கு மற்றச் சிங்கம்

"இல்லை, நான்தான் முதலில் வந்தேன். எனவே இந்த மான் எனக்குத்தான் சொந்தம். நீ மரியாதையாக வந்த வழியைப் பார்த்துப் போ!" என்றது.

இரண்டும் நீண்டநேரம் வாக்குவாதப் பட்டன. முடிவில் ஒன்றோடொன்று பாய்ந்து சண்டையிட்டன.

இரண்டும் ஒன்றோடொன்று மூர்க்கமாக சண்டையிட்டதால் இரண்டிற்கும் காயம் ஏற்பட்டு தரையில் மயங்கி விழுந்தன.

அந்நேரம் ஒரு நரி அந்தப்பக்கமாக வந்தது.



சிங்கங்கள் இரண்டும் மயங்கிக் கிடந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி, இறந்து கிடந்த மானைத் தின்றுவிட்டுச் சென்றது.

அரை மயக்கத்தில் கிடந்த சிங்கங்கள், நரி மானைத் தின்று விட்டுப் போவதைப் பார்த்தன.

அவற்றால் நரியை விரட்டியடிக்கக்கூடச் சக்தியில்லை. தமது நிலையைப் பார்த்து வெட்கப்பட்டன.

"நாம் இப்படி வீணாகச் சண்டையிட்டுக் கொண்டதால் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எம்மிருவருக்கும் கிடைத்திருக்க வேண்டிய இரையை எங்கோ இருந்து வந்த நரி தின்று விட்டுப் போய்விட்டது," என்று சொல்லி வருந்தியது ஒரு சிங்கம்.

"நாம் இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, கிடைப்பதை இருவரும் பகிர்ந்து உண்டிருக்க வேண்டும். இனி என்ன செய்வது?" என்று மனம் நொந்தது மற்றச் சிங்கம்.

'ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' என்பது சிங்கங்கள் விஷயத்தில் உண்மையாகி விட்டதல்லவா?

## அதிசயம் - ஆனால் உண்மை!



↑ இத்தாலி நாட்டில் உள்ள இஸோகன் கோட்டையில் தேவாலயம் ஒன்று உள்ளது. இந்தத் தேவாலயத்தில் உள்ள பலிப்பீடம் அப்படியே தங்கத்தாலானது. தங்க நாணயங்களை உருக்கி பலிப்பீடமாக வார்த்தார்களாம்.



↑ பிராங்க் கரோடினி என்ற இத்தாலியர் ஐரோப்பா முழுவதும் நடத்திய விந்தைக் காட்சிகளில் இவரது குதிரையில் கயிற்றின் மீது இலாவகமாக நடந்து சென்று காட்டினார்.

→ சஹாரா பாலை வனத்தில் உள்ள கபோர் என்ற செடி பச்சைப் பசேலென்று காட்சியளிக்கும். விலங்குகள் இச்செடியின் இலைகளைத் தின்றால் உடனே இறந்துவிடும். இந்தச் செடியின் இலைகள் அவ்வளவு விஷத் தன்மை கொண்டவை.



## பெயர் வரக் காரணம்


கிறிஸ்தவர்கள் வழிபாட்டில் பயன்படும் செபமாலைக்கு ரொசரி (ROSSARY) என்று பெயர். ரொசரி என்றால் 'ரோஜா சம்பந்தப்பட்ட' என்று அர்த்தம். செபமாலைக்கு இந்தப் பெயர் வரக் காரணம் என்ன தெரியுமா?

முற்காலத்தில் ரோஜா இதழ்களை நசுக்கி, அதிலிருந்து பெறப்படும் கறுப்புச் சாயத்தை உருண்டைகளாகப் பிடித்துக் காயவைப்பார்கள். இந்த உருண்டைகளைக் கொண்டுதான் செபமாலை கட்டினார்கள்.

இதன் காரணமாகத்தான் செபமாலைக்கு ரொசரி என்ற பெயர் வந்தது. இப்போது ரோஜா இதழ்களால் செபமாலை செய்வதில்லை என்றாலும் ரொசரி என்ற பெயரே இன்னமும் நீடிக்கிறது.



## சீட்டாட்டம்



* சீட்டாட்டம் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் சீனர்களால் கண்டு பிடிக்கப்பட்டது.
* மத்திய காலத்தில் சார்சரர்ஸ் என்ற இனத்தவர், அதிஷ்டத்தைக் கண்டறியும் சீட்டுக்களாகவே, சீட்டாட்டத்தைப் பயன்படுத்தினர்.
* சீட்டாட்டத்தை ஒரு விளையாட்டாக ஆரம்பித்து வைத்தவர்கள்- ஐரோப்பியர்கள். 13ம் நூற்றாண்டில்தான் விளையாடப்பட்டது. இந்த விளையாட்டின் மீதான ஆர்வம் அதிகமாக ஆக, மக்கள் தமது சொத்துக்களை இழக்குமளவுக்கு இதற்கு அடிமையாகி விட்டனர்.
* ஒவ்வொரு நாட்டு சீட்டுக்கட்டுக்களும் வெவ்வேறு எண்ணிக்கை உடையவை. ஃபிரெஞ்சு நாட்டுச் சீட்டுக்கட்டில் 56 சீட்டுக்களும், இங்கிலாந்து நாட்டு சீட்டுக் கட்டில் 52 சீட்டுக்களும் இருக்கின்றன.

## கிளியோபாட்ரா முனை



இங்கிலாந்தின் தலைநகரான இலண்டனில் உள்ள தேம்ஸ் நதிக்கு அருகில் உள்ள வானை முட்டும் அளவான தூணின் பெயர் 'தேம்ஸ் எம்பேங்க்மெண்ட்.'

இந்தத் தூண் முழுவதும் ஒரே ஒரு கிரனைட் கல்லால் ஆனது.

இந்தத் தூணை கி.மு. 1475ல் எகிப்திய மன்னனான 3ம் தட்மோஸ், கெய்ரோ நகருக்கு அருகில், ஹெலிபாலிஸ் என்ற இடத்தில் சூரியக் கடவுளுக்காகக் கட்டினான்.

3500 ஆண்டுகளாக எகிப்திய பாலைவனப் பகுதியில் இயற்கை சீற்றங்களுக்கெல்லாம் விழாமல் ஈடுகொடுத்து தலைநிமிர்ந்து நின்ற இந்தத் தூண்மீது பிரிட்டிஷ்காரர்களது பார்வைபட்டது.

அப்படியே அடியோடு பெயர்த்தெடுத்து 1878ல் இலண்டனில் கொண்டுவந்து நிறுத்தி விட்டனர். எகிப்தில் இருந்தபோது இந்தத் தூண் 'கிளியோபாட்ரா முனை' என்ற பெயராலேயே அழைக்கப்பட்டது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 27.02.1999.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 285
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 283

பரிசுக்குரியவர்:
சி. விஸ்வரூபினி,
இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டி, கொழும்பு-04.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| மா. வேணுகோபன், மட்/கிரான் ம.வி., கிரான். | செல்வி கி. ஷர்மினா, சைவப்பிரகாச மங்கையர் கழகம், வெள்ளவத்தை, கொழும்பு-06. |
| செல்வி. கௌதர்ம விலாஷினி, ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி, திருகோணமலை. | என். அரவிந்த், புனித அந்தோனியார் தேசிய கல்லூரி, வத்தளை. |
| தில்லைநாதன் கீர்த்திகன், சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா. | முத்துலிங்கம் பிரிதிகலா, பது/கோணக்கலை தமிழ்.வித்., பசறை. |
| மு.அ. ஆஸாத், கமு/அல்மனார் மத்திய கல்லூரி, மருதமுனை. | பீ.எம். பாத்திமா நுஸ்கியா, கமு/ மஹ்மூத் மகளிர் கல்லூரி, கல்முனை. |
| ஆர். தர்ஷினி மாலா, கலைமகள் த.ம.வி., கவுடுபெலல்ல, மாத்தளை. | எம்.எல். பரீஹா, பாத்திமா முஸ்லிம் மகளிர் பாடசாலை, புத்தளம். |

## விடுகதைகளும் விடைகளும்

1. பகலில் வெறும் மைதானம், இரவில் மலர்க்குவியல். அது என்ன?
2. முறையின்றித் தொட்டால், ஒட்டிக் கொண்டு உயிரை எடுப்பான். அவன் யார்?
3. கூவி அழைப்பான், கூடி உண்ணுவான். அவன் யார்?
4. நூல் நூற்கும் நெசவாளிக்கு கட்டிக்கொள்ளத் துணியில்லை. அது என்ன?
5. கூட்டுக்குள்ளே குடியிருக்கும் குருவியல்ல; எடுத்து இயக்கினால் உயிரைப் போக்கும். அது என்ன?
6. ஒட்டுத் திண்ணையிலே தடுக்குப் போட்டேன்; எடுக்க முடியவில்லை. அது என்ன?
7. வளைவான் நெளிவான், வகையாக உருண்டோடுவான். அவன் யார்?
8. ரோஜாவைச் சுற்றி வெள்ளைக் கற்கள் காவல். அது என்ன?
9. வெளிச்சத்தில் வேலை செய்தவனுக்கு இருட்டில்தான் சம்பளம். அது என்ன?
10. ஊளையிட்டபடி ஊரைச் சுமப்பான். அவன் யார்?

### விடைகள்

1. வானம் 2. மின்சாரம் 3. காகம் 4. சிலந்தி 5. அம்பு 6. கோலம் 7. கால்வாய் 8. நாக்கு-பற்கள் 9. கமரா- புகைப்படம் 10. இரயில்

தொகுப்பு: ஏ. அகல்யா.

## ஒருவரிச் செய்திகள்

* குகைகளைப் பற்றி ஆராயும் கலைக்கு 'ஸ்பெலொஜி' என்று பெயர்.
* நப்தலின் என்னும் பூச்சியுருண்டை, நிலக்கரியை வடித்து வகுக்கும்போது கிடைக்கிறது.
* சுறாமீனுக்கு இரண்டு கருப்பைகள் உள்ளன.
* கெரில்லா போர் முறை அறிமுகப்படுத்திய நாடு ஜெர்மனி.
* மிகவும் சிறிய இதயம் கொண்ட மிருகம் சிங்கம்.
* உலகின் மிகக் குறுகிய நாடு சிலி.
* உலகப்படங்களை வரைந்து தயாரிக்கும் முறை 'கோர்டோகிரஃபி' எனப்படுகிறது.
* பசை தடவிய தபால் தலையை கண்டுபிடித்தவர் ஜேம்ஸ் சாமர்ஸ் என்ற ஸ்கொட்லாந்துக்காரர்.
* உலகில் 26 நாடுகளுக்குக் கடற்கரையே கிடையாது.
* இந்தோனேஷியா நாட்டின் தேசிய சின்னம் கருடன்

## அமர்தியா சென்



சென்ற வருடத்திற்கான பொருளாதாரத் துறையில் நோபல் பரிசு பெற்றவர்தான் அமர்தியா சென். பொருளாதார மேதையான இவர் எமது அண்டை நாடான இந்தியாவைச் சேர்ந்தவர்.

இவர் மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள சாந்திநிகேதனில் பிறந்தார். பின் இவரது குடும்பத்தினர் பங்களாதேஷிற்குக் குடியேறினார். தனது சிறுவயதை அமர்தியா சென் பங்களாதேஷிலேயே கழித்தார்.

பின்னர் 1942ம் ஆண்டு இவர், தான் பிறந்த ஊருக்கு மாணவனாகத் திரும்பினார். 1951ம் ஆண்டுவரை இவர் அங்கேயே இருந்தார். கல்கத்தாவில் உள்ள பல்கலைக் கழகத்தில் பொருளாதாரம் படித்தார்.

இதனைத் தொடர்ந்து இங்கிலாந்து கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் படித்தார். அப்போது பொருளாதாரம் குறித்து அமர்தியா சென் ஆராய்ச்சி கட்டுரைகள் எழுதினார்.

சென்றவருடம் இவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. இந்தப் பரிசுத் தொகையைக் கொண்டு அறக்கட்டளை ஏற்படுத்தி, இந்தியாவில் உள்ள ஏழை மாணவர்களுக்கு உதவத் திட்டமிட்டுள்ளார்.

www.padippakam.com

மர்மம், காதல் குடும்ப நயம் கலந்த விறு விறு தொடர்

# டிசம்பர் பௌர்ணமி

## 17

கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்

**முன்கதை சுருக்கம்**

பிரபல தொழிலதிபர் ருத்ரமூர்த்தியின் ஒரே மகன் நித்தியன்.
பம்பாயில் சிறையிலிருந்து விடுதலையாகி வருபவனை வெளிநாட்டில் இருந்து வருபவனாகக் கூறி விசாலிக்கு மணம்முடிக்க திட்டமிடுகிறார்.
நித்தியனோ சாந்தாவைக் காதலிக்கிறான்.
நித்தியன் சிறையில் இருந்து வந்தவன் என்ற விடயம் விசாலி வீட்டுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது.
அவ்வாறு இருந்தும் கல்யாணம் செய்ய சம்மதம் என்கின்றனர்.
நித்தியனோ சாந்தாவை கல்யாணம் செய்ய விரும்புகிறான்.
சாந்தாவை கல்யாணம் செய்தால், தான் தற்கொலை செய்வேன் என்று தந்தை ருத்ரமூர்த்தி மிரட்டுகிறார்.
நித்தியன் பணிவதாக நடிக்கிறான்.
இந் நிலையில் சாந்தா காணாமல் போகிறாள்.
இனி.....

"சாந்தா உயிரோடு இருக்கிறாளா? இல்லே கொன்னுட்டீங்களாப்பா?"

கேள்வி கேட்ட நித்தியனையே இமைக்காமல் பார்த்தார் ருத்ரமூர்த்தி.

"என்னப்பா பார்க்கறீங்க? பதில் சொல்லுங்க... சாந்தா இப்போ உயிரோடு இருக்காளா இல்லையா?"

"என்னை கேட்டா?"

"உங்களைக் கேட்காமே வேற யாரைக் கேக்கறது? சாந்தாவுக்கு ஃபோன் பண்ணி மிரட்டினது நீங்கதானே?"

கையமர்த்தினார் ருத்ரமூர்த்தி.

"இதோ பார்ரா... நான் உன்னோட காதலுக்கு குறுக்கே நின்னது வாஸ்தவம்தான். சாந்தாவை ஃபோன்ல மிரட்டினதும் நான்தான். இன்னும் சொல்லப் போனா பொலிஸை விட்டு அவளுக்கு தொந்தரவு கொடுத்ததும் நான்தான். ஆனா நீ நினைக்கிற மாதிரி ஒரு பொண்ணை கொலை செய்யற அளவுக்கு நான் மோசமானவன் கிடையாது."

"நீங்க இப்படி சிம்பிளா சொல்லி தப்பிச்சுக்க முடியாதப்பா... சாந்தா எங்கேங்கிற கேள்விக்கு நீங்க பதில் சொல்லியே ஆகணும். இல்லேன்னா..."

"இல்லேன்னா...?"

"நீங்க எனக்கு அப்பா என்கிற உறவையெல்லாம் தள்ளி வெச்சிட்டு பொலிஸ் ஸ்டேஷன் படியேறி உங்க மேல புகார் கொடுக்க வேண்டியிருக்கும்."

"நித்தியன் அவசரப்படாதீங்க... பொறுங்க... பொலிஸ் ஸ்டேஷனுக்கு போறது ரொம்பவும் சுலபம். அதுக்கப்புறம் பொலிஸாலே நமக்கு வர்ற டார்ச்சரை தாங்கிக்க முடியாது."

"அதுக்காக பொலிஸ் ஸ்டேஷனுக்கு போகாமே இருக்க முடியுமா? முகுந்தன் வீட்ல இருக்கிற இரத்தக்கறைகளைப் பார்க்கிறப்போ அவ உயிர்க்கே... ஏதாவது ஆபத்து வந்திருக்குமோன்னு எனக்குப் படுது. இந்த விஷயத்துல பொலீஸ் உடனடியாக இறங்கியாகணும். அவங்க பிரச்சனையை ஆரம்பிச்சு கிளற ஆரம்பிச் சாங்கன்னா எல்லா உண்மையும் வெளியே வந்துரும்."

ருத்ரமூர்த்தி - இரண்டு கைகளையும் அலட்சியமாக விரித்தபடி சத்தம் போட்டார்.

"தாராளமா பொலிஸுக்குப் போ. புகார் கொடு. அவங்க வந்து என்னை விசாரிக்கட்டும். அப்படி அவங்க விசாரிக்கும்போது என்ன பதில் சொல்லணுமோ அதைச் சொல்லிக்கிறேன். எனக்கென்ன பயம்?"

நித்தியன் விசாலியை ஏறிட்டான்.

"பார்த்தியா விசாலி... சாந்தா காணாம போயிருக்கிற விஷயத்துல நான் எப்படி துடிச்சிட்டிருக்கேன். இவர் எவ்வளவு அலட்சியமா பேசறார்னு பார்த்தியா?"

"ஒருவேளை உண்மையிலேயே சாந்தா காணாம போயிருக்கிற விஷயத்துக்கும் உங்களோட அப்பாவுக்கும் சம்பந்தம் இல்லாமே இருக்கலாம் இல்லையா...?"

"அது பொலிஸ் வந்தா தெரிஞ்சுடும்..."

"இதோ பாரம்மா என்னோட மடியில கனம் இல்லை. உனக்கும் நித்தியனுக்கும் கல்யாணத்தைப் பண்ணி வைக்க ஆசைப்பட்டேன். அதுக்கு இடைஞ்சலாயிருந்தாங்கிற ஒரே ஒரு காரணத்துக்காகத்தான் அந்த சாந்தாவை டெலிஃபோன்ல மிரட்டினேன். எனக்குத் தெரிஞ்ச பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருத்தர் மூலமாகவும் மிரட்டினேன். இந்த இரண்டு தப்பைத் தவிர வேற எதுவும் நான் பண்ணலை. சாந்தா காணாமே போனதுக்கும் எனக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. பொலிஸ் வரட்டும் சொல்றேன்."



"டேய் நித்தியா... நான் சொல்றதுல உனக்கு நம்பிக்கை இல்லையா...?"

"இல்லை.... சாந்தா எங்கே இருக்கான்னு உங்களுக்கு நிச்சயமா தெரியும். உண்மையை இங்கேயே சொல்றீங்களா... இல்லை பொலிஸ் ஸ்டேஷனுக்கு போய் சொல்றீங்களா?"

முகம் சிவந்தார் ருத்ரமூர்த்தி.

"நான் சொல்ல வேண்டியதை சொல்லிட்டேன். அப்புறம் உன்னோட இஷ்டம்."

நித்தியன் டெலிஃபோனை நோக்கி வேகமாய் போக விசாலி குறுக்கிட்டாள்.

"அங்கிள்! பொலிஸ் இந்த வீட்டுக்குள்ளே வர்றது சரின்னு நீங்க நினைக்கிறீங்களா?"

பெரிய குரலில் கத்திய நித்தியன் முகுந்தனிடம் திரும்பினார்.

"வா... பொலிஸ் ஸ்டேஷனுக்குப் போய் கம்ப்ளைய்ண்ட் கொடுத்துட்டு வரலாம்... பொலிஸ் இந்த வீட்டுக்குள்ளே நுழைஞ்சாத்தான் உண்மை வெளியேவரும்."

நித்தியன் சொல்லிவிட்டு நகர முகுந்தன் பின்தொடர்ந்தான். அடுத்த பத்து விநாடிகளில் கார் வேகமாக புறப்பட்டுச் செல்லும் சத்தம் கேட்டது.

விசாலி ருத்ரமூர்த்தியை ஏறிட்டாள்.

விசாலி பெருமூச்சு விட்டாள்.

"அங்கிள்...!"

"என்னம்மா?"

"உங்க சன் நித்தியனுக்கு சாந்தான்னு ஒரு காதலி இருக்கான்னு தெரிஞ்சும் எனக்கும் அவர்க்கும் கல்யாணத்தைப் பண்ணி வைக்க எதுக்காக முயற்சி செஞ்சீங்க...? கட்டாயமா ஒரு கல்யாணத்தைப் பண்ணி வைச்சா அதுல சந்தோஷம் இருக்குமா? காதல்ங்கிறது ஒரு கெட்ட வார்த்தையோ தப்பான காரியமோ கிடையாது அங்கிள். உங்க சன் நித்தியனோட காதலுக்கு நீங்க பச்சைக் கொடி காட்டியிருக்கலாம். அப்படி காட்டியிருந்தா இவ்வளவு பிரச்சனைகள் முளைவிட்டிருக்காது. பொலிஸ் இந்த வீட்டு வாசற்படி ஏறுகிற ஒரு அவலமும் ஏற்பட்டிருக்காது..."

"நீ சொல்றது வாஸ்தவந்தாம்மா... இந்த விஷயத்துல நான் கொஞ்சம் நிதானம் காட்டியிருக்கணும். நீ இந்த வீட்டுக்கு மருமகளா வரணும்கிற ஆசை காரணமா ஒரு ரௌடி மாதிரி பிகேவ் பண்ணினது தப்புத்தான். பொலிஸ் வந்து என்கொயர் பண்ணட்டும் நான் உள்ளதை சொல்லிடறேன். பட் அந்தப் பொண்ணு சாந்தா காணாமே போனதுக்கு காரணம் நான் கிடையாது."

ருத்ரமூர்த்தி ஆயாசமாகச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே பக்கத்தில் இருந்த டெலிஃபோன் துடித்து கூப்பிட்டது. விசாலிதான் ரிஸீவரை எடுத்து காதுக்குக் கொடுத்தாள்.

"ஹலோ"

மறுமுனையில் விஜயராகவன் குரல்.

"என்னம்மா... மாப்பிள்ளை வீட்ல போய் அப்படியா இருந்துக்கிறது? நல்ல பொண்ணும்மா நீ.... போய் பார்த்தோமா உடனே புறப்பட்டு வந்தோமான்னு இருக்கணும். அதை விட்டுட்டு அங்கேயே டெண்ட் போட்டுட்டா என்னம்மா அர்த்தம்?"

விசாலியின் குரல் லேசாய் உடைபட்டது.

"அ...அப்பா!"

"என்னம்மா டோன் ஒரு மாதிரி இருக்கு?"

"அப்பா நானே உங்களுக்கு ஃபோன் பண்ணலாம்னு இருந்தேன். உடனே புறப்பட்டு நீங்க அங்கிள் வீட்டுக்கு வர்றீங்களா?"

"என்னம்மா விஷயம்?"

"ஃபோன்ல அதையெல்லாம் சொல்லிட்டிருக்க முடியாதப்பா.. நீங்க நேர்ல புறப்பட்டு வாங்க."

"என்னம்மா... ஏதாவது பிரச்சனையா?"

"பிரச்சனைதான்... இல்லேன்னா உங்களை புறப்பட்டு வரச் சொல்வேனா? சீக்கிரமா புறப்பட்டு வாங்கப்பா!"

விசாலி ரிஸீவரை வைத்துவிட்டு விழியோரம் லேசாய் எட்டிப் பார்த்த கண்ணீரை உள்வாங்கிக்கொண்டு ருத்ரமூர்த்திக்கு எதிரில் இருந்த சோபாவுக்கு தளர்வாய் சாய்ந்து கொண்டாள்.

'இனி தனக்கும் நித்தியனுக்கும் திருமணம் என்ற ஒன்று நடக்க வாய்ப்பில்லை' என்ற நினைப்பில் இதயம் சற்று பலமாகவே வலித்தது.

❑✚✪

விஜயராகவன் ரிஸீவரை வைத்துவிட்டு ஒரு பெருமூச்சோடு எழ அவருடைய மனைவி புவனேஸ்வரி டி.வி.யின் சின்னத் திரையிலிருந்து திரும்பி கணவனைப் பார்த்தாள்.

"என்ன சொல்றா உங்க பொண்ணு?"

"புவனேஸ்வரி! நான் உடனே கிளம்பி சம்பந்தி வீட்டுக்குப் போகணும்!"

"சரியாப் போச்சு.... பொண்ணுதான் மாப்பிள்ளைப் பைத்தியம் பிடிச்சு அலையறான்னா... நீங்களுமா?"

"அதில்லை புவனேஸ்வரி..."

"பின்னே?"

"சம்பந்தி வீட்ல ஏதோ பிரச்சனையாம். விசாலி என்னை உடனே புறப்பட்டு வரச் சொல்றா?"

"என்ன பிரச்சனை?" புவனேஸ்வரி வெகுவாய் முகம் மாறிக்கொண்டே எழுந்தாள்.

"தெரியலை... நான் போய்ட்டு வந்து சொல்றேன்."

"நானும் வர்றேன்ங்க!"

"வேண்டாம். புடவைகடைக்காரங்களும் நகைக்கடைக்காரங்களும் அரை மணி நேரத்துல வர்றதா சொல்லியிருக்காங்க. நீ இருந்து அவங்களை பார்த்துக்க. அவங்க வர்றப்ப நாம ரெண்டு பேருமே வீட்ல இல்லாம இருந்தா நல்லாயிருக்காது"



விஜயராகவன் பேசிக் கொண்டே போய் போர்டிகோவில் நின்றிருந்த மாருதி 'தௌஸனி'ல் திணித்துக் கொண்டு காரை வேகமாய்க் கிளப்பினார்.

சாலைக்கு வந்து போக்குவரத்தில் கலந்து வண்டியை விரட்டியவர் பத்து நிமிட பயணத்திற்குப் பின்னால் ஒரு டெலிஃபோன் பூத்துக்கு பக்கத்தில் போய் நிறுத்தி இறங்கிக்கொண்டார்.

சுற்றும் முற்றும் பார்வையை ஜாக்கிரதையாய் நகர்த்தி பார்த்துவிட்டு பூத்துக்குள் நுழைந்து ரிஸீவரை இடது கையால் எடுத்துக்கொண்டு வலது கையில் ஒரு ரூபாய் நாணயத்தை தயாராய் வைத்தபடி டயலில் எண்ணைத் தட்டினார்.

மறுமுனையில் ரிங் போய் ரிஸீவர் எடுக்கப்பட்டது. ஒரு ஆண்குரல் 'ஹலோ' என்று சொல்லியதும் ஒரு ரூபாய் நாணயத்தை துவாரத்தில் சொருகி விட்டு லைனை உயிர்ப்பித்துக் கொண்டார். கேட்டார்.

"யாரு.... சாமித்துரையா?"

"ஆமாங்கய்யா..."

விஜயராகவன் மெல்லச் சிரித்துக் கொண்டே பேச்சைத் தொடர்ந்தார். "நான் சொன்ன மாதிரியே அந்தப் பொண்ணு சாந்தாவோட விஷயத்தை முடிச்சுட்டே போலிருக்கே?"

..............

(பௌர்ணமி தொடரும்)

---

# சதாம் உசேன் 29

அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை

ராஜையா

இப்படி அமெரிக்கா இஸ்ரேலுக்கும் ஈராக்குக்கும் இடையே பிரசார யுத்தம் மற்றும் பொருளாதார யுத்தம் ஆகியவற்றை உள்ளடக்கிய பனிப்போர் கடுமையாகத் தொடர்ந்து நடந்துகொண்டிருந்தது. இந்தப் பனிப்போரின் உச்சக்கட்டமாகவே குவைத் பிரச்சனை வெடித்தது...

சதாம் உசேனின் அலுவலக வரவேற்பறை. அந்த அமெரிக்கப் பெண்மணி காத்திருந்தார். அவர் பெயர் கிளாஸ்பி. ஈராக்குக்கான அமெரிக்கத்தூதர்.

அலுவலகத்தின் உள் அறையிலிருந்து சதாம் வெளியே வந்தார். சம்பிராதாயத்துக்காக கிளாஸ்பியின் கையைப் பிடித்துக் குலுக்கினார்.

அவருக்குள் பொங்கிக் கொண்டிருந்த கோபத்தை அவர் மறைக்க முயலவில்லை. பொரிந்து தள்ளினார்..

"அமெரிக்கப் போர்க் கப்பல்கள் சும்மா வந்துகூட வளைகுடாவில் நிக்கக்கூடாதுன்னு சொல்றவன் நான். அப்படியிருக்கும் போது நேத்து என்னை மிரட்டுறதுக்காக உங்க நாட்டுப் போர்க்கப்பல்கள் எங்க வளைகுடாவுல போர் ஒத்திகை நடத்தியிருக்கு- பேட்டை ரவுடி சண்டை இழுக்க தொடை தட்ற மாதிரி...! இதெல்லாம் என்ன? வைற் ஹவுஸ் மனசுல என்னதான் நினைச்சுக்கிட்டிருக்கு...?"

கிளாஸ்பி மெல்லப் புன்னகைத்தார். பிறகு நிதானமாகச் சொன்னார்:

"குவைத் அமெரிக்காவோட நேசநாடுங்கறது உங்களுக்குத் தெரியும்...!"

சதாம் கடகடவென சிரித்தார்.

"அது நேச நாடு இல்ல. உங்க அடிமை நாடு. புதிய காலனி நாடு!"

"எப்படி வேணும்னாலும் வச்சுக்குங்க. அந்த குவைத்தோட பார்டர்ல நீங்க ஏன் இராணுவத்தைக் குவிக்கிறீங்க? அதைப் பார்த்துட்டு அமெரிக்கா எப்படி சும்மா இருக்கும்?"



"குவைத் பார்டர்ல இராணுவத்தைக் குவிக்கிறேன்! நெஜம்தான்! அதுக்கு காரணம் யார்? அமெரிக்கா தானே? மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லுங்க...!"

உக்கிரம் தெறிக்கும் சதாமின் பார்வையை எதிர்கொள்ள முடியாமல் கண்களை வேறு பக்கம் திருப்பிக்கொண்டார் கிளாஸ்பி....

அமெரிக்காவும், குவைத்தும் ஈராக்கை எப்படி பாடாய்ப் படுத்திக் கொண்டிருக்கின்றன என்பது அவருக்குத் தெரியாதா, என்ன..?

குவைத் குட்டி நாடு. ஈராக்கின் அண்டை நாடு. எக்கச்சக்கமான பெட்ரோல் வளம் கொண்ட நாடு. இதனால் செல்வம் கொழிக்கும் நாடு. ஆனால் அமெரிக்காவின் தயவில் வாழும் மன்னராட்சி கொண்ட நாடு.

இந்நாட்டிடம் கடனுதவி கேட்டார் சதாம் உசேன். ஈரான்-ஈராக் போர் காரணமாக நொடித்துப்போன உள்நாட்டுப் பொருளாதாரத்தைச் சீர் செய்யவும், இஸ்ரேல்மீது பெரிய தாக்குதல் நடத்தும் திட்டத்துக்காகவும் அவருக்கு நிறையப் பொருளுதவி தேவைப்பட்டது.

ஆனால், ஈராக்குக்கு எதிராக பொருளாதார யுத்தம் நடத்திக் கொண்டிருந்த அமெரிக்கா குவைத்தைத் தடுத்தது. "சதாமுக்குக் கடனுதவி செய்யாதே! ஈராக்கை பட்டினிபோடு!" என்று அது உத்தரவிட்டது.

இந்த உத்தரவுக்கு 'பூம்... பூம்...'. மாடு மாதிரி தலையாட்டிய குவைத், "என்கிட்ட பணமே இல்ல!" என்று சதாமிடம் கை விரித்தது. சதாம் எரிச்சலடைந்தார்.

ஈரான்-ஈராக் போர் நடந்து கொண்டிருந்தபோது சதாம் சக அரபு நாடுகளிடம் நிறையக் கடன் வாங்கியிருந்தார். இப்போது ஈராக்கின் பொருளாதாரம் தள்ளாடிக் கொண்டிருப்பதால், கடனைத் திருப்பித் தருமாறு சதாமை வற்புறுத்த வேண்டாம் என்று பெரும்பாலான அரபு நாடுகள் முடிவு செய்தன.

ஆனால், குவைத்தை அமெரிக்கா தூண்டிவிட்டது... "விடாதே! நீ குடுத்த கடனை திருப்பிக் கேள்!"

குவைத், "நான் குடுத்த பணத்தைத் திருப்பிக்குடு..!" என்று சதாமை நெருக்கியது.

புதிதாக கடன் தர மறுப்பதோடு பழைய பாக்கியையும் கேட்டுக் குவைத் முரண்டு பிடித்ததைப் பார்த்து சதாம் துணுக்குற்றார்.

"நம் நிலைமை குவைத்துக்குத் தெரியாதா? தெரிஞ்சும் ஏன் இப்படி நெருக்குது...?"

இந்தச் சமயத்தில், சதாமை மேலும் வெறுப்பேற்றும் ஒரு காரியத்தைச் செய்யுமாறு குவைத்தை அமெரிக்கா தூண்டிவிட்டது...

குவைத்துக்கும், ஈராக்குக்கும் இடையில் 'பூபியான்' என்ற பெரிய தீவு இருக்கிறது. இது குவைத் வசம் இருக்கிறது. ஆனால், "பூபியான் தீவு எனக்கே சொந்தம்" என்று நீண்ட காலமாகவே ஈராக் உரிமை பாராட்டி வருவதால் இந்தப் பிரச்சனை எல்லைத் தகராறு தாவாவில் இருந்துவருகிறது.

தாவாவுக்குட்பட்ட பூபியான் தீவில், அமெரிக்காவின் ஆதரவு இருக்கும் துணிச்சலில், குவைத் புதிய நகர் ஒன்றைத் திடீரெனக் கட்டத் தொடங்கியது.

எல்லைத் தகராறு இன்னும் தீரவில்லை. பூபியான் தீவு யாருக்குச் சொந்தம் என்பது இன்னும் முடிவாகவில்லை.

(தொடர்ந்து வரும்)

www.padippakam.com

# உதட்டில் ஒரு மச்சம்

## 18



**இதுவரை**

அரவிந்த்
ஒரு பைலட்.
அவனது மனைவி ஜ்யோதி.
அவர்களது நண்பன் விக்ரம்.
அவனுக்கு ஜ்யோதி மீது ஆசை.
இதற்கிடையே அரவிந்த்,
அமைச்சர் பிரகாஷ் குப்தாவுடன்
பைலட்டாக ஒடக்கரை
கிராமத்திற்குச் செல்கிறான்.
அக்கிராமத்தை வளைத்துப்போட
அமைச்சர் திட்டமிட
அதை எதிர்க்கிறார்கள்
கிராம இளைஞர்கள்.
பொலிஸ் சுடுகிறது.
சீனு இறக்கிறான்.
கிராம இளைஞர்கள்
கொதிக்கின்றனர்.
அமைதி வழி சரிப்படாது
என்று ஆயுதம் ஏந்த
முடிவு செய்கின்றனர்.
நிலத்தை அபகரிப்பதில்
அமைச்சர் தீவிரம் காட்டுகிறார்.
அமைச்சரைக் கொல்ல
இளைஞர்கள் திட்டமிடுகின்றனர்.
அமைச்சரை கொலை செய்ய
செல்லும் கைலாஷ்
மாட்டிக்கொள்கிறான்.
மின்சார வயரைப் பிடித்து
தற்கொலை செய்கிறான்.
அடுத்தத்திட்டம் தயாராகிறது.

**இனி....**

**மோ**கனன் அந்த ஆல்பத்தை ஆரம்பத்திலிருந்து மறுபடி புரட்டினார். ஒடக்கரையில் எடுத்த புகைப்படங்கள். சிறுவர்கள், பெண்கள், வயதானவர்களை ஒதுக்கிவிட்டு, சற்று முதிர்ந்த இளைஞர்களின் புகைப்படங்களில் கவனம் செலுத்தினார்.

'சுமார் முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்கவன் கைலாஷின் பரிசுக்கோப்பையை மாற்ற வந்திருந்தான்' என்று கிடைத்த தகவலை அசை போட்டார். கைலாஷ் தங்கியிருந்த இடத்திலும் அதே வயதினன் தான் பார்க்கப்பட்டிருந்தான். தாடி, மீசை, நெற்றி மறைத்த முடி, நீண்டு வெளிவந்த பல்வரிசை என்று ஒவ்வொரு அடையாளத்தையும் ஆல்பத்தில் தேடி ஏமாந்து விட்டார்.

வந்தவன் நிச்சயம் ஒடக்கரை ஆள்தான். ஓடிப்போன அர்த்தநாரியை ஒருபுறம் பொலிஸ் தேடிக்கொண்டிருந்தது. ஆனால் அவனும் போட்டிகளில் கலந்துகொண்டவன் என்று தெரிந்த பிறகு, அவன்மீது மோகனனுக்கு ஆர்வம் குறைந்து விட்டது. அவனும் வெறும் ஆட்டக்காய்தான். சூத்திரதாரி வேறு எவனோ, அவன் இந்த ஃபோட்டோக்களில் ஒன்றில்தான் ஒளிந்திருக்க வேண்டும். முப்பது வயதிற்கு மேற்பட்டவர்களின் படங்களைத் தனியே எடுத்தார்.

பார்த்தவர்கள் சொல்லியிருந்த அடையாளக் குறிப்புக்களில் இருந்த விவரங்களை வைத்து உயரம், அகலம் இவை பொருந்தக்கூடிய ஆள் என்று தேடி நெருக்கியதில் இரண்டு பெயர்களுக்குப் பட்டியல் குறுகிவிட்டது. அந்த இருவர்களுடைய ஃபோட்டோக்களையும் எடுத்து, தாடி, மீசை துருத்திய பல்வரிசை வரைந்து சாட்சிகளிடம் காட்டவேண்டும்.



டெலிஃபோனில் பொலிஸ் ஆர்ட்டிஸ்டைக் கூப்பிட்டு அனுப்பினார். அவன் வந்ததும் தன் தேவைகளைச் சொல்லி இரண்டு ஃபோட்டோக்களையும் அவனிடம் கொடுத்தார்.

ஒன்று பழனிச்சாமி, இன்னொன்று தேவேந்திரன்.

★★★

**"யூ** லுக் ஸ்மாட்!" ஜ்யோதி கண்ணீரினூடே அரவிந்தின் தலைமுடியைக் கலைத்தாள். "சிகிச்சை முழுவதும் முடியும் முன் நீ வெளியே போவதுதான் எனக்குப் பிடிக்கவில்லை."

"மறுபடி இன்னும் ஐந்து நிமிடமாகும் தலைமுடி படிய..." என்று செல்லமாகச் சலித்துக் கொண்டான் அரவிந்த். கண்ணாடிக்கு எதிரில் நின்று அவன் டையைக் கழுத்தில் மாட்டிக்கொள்ள, அதை முடிச்சிட்டு, அதன்முனை பிடித்து, அவனை அருகே இழுத்து பச்சக் என்று அவன் இதழ்களில் ஒற்றி எடுத்தாள். இடுப்பில் பெல்ட் செருகி பக்கிள் மாட்டினாள்.

அரவிந்தின் ஃபோட்டோ அவள் திரும்பும் திசையெல்லாம் சிரித்தது.

அவளுக்கு மனதில் வலித்தது. "விக்ரமைப் பிடித்து விட்டார்கள் என்று தெரியுமா அரவிந்த்?"

"அவனைப் பற்றிப் பேசாதே!" அரவிந்த் ஷூக்களை அணிந்தான்.

"மினிஸ்டரைப் பார்க்கப் போறேன்... இந்தச் சமயத்தில் விக்ரம் பற்றிப் பேச்சு ஏன்?"

ஷூக்களை முடிச்சிட்டு, "வரட்டுமா?" என்றான்.

"அவ்வளவுதானா?"

"ஜில்ஜிட்டா....."

அரவிந்த் யமஹாவில் ஹெல்மெட் அணிந்து புறப்பட்டு சீறிப் பாய்ந்தான். வண்டி அமைச்சர் வீடு நோக்கித் திரும்பாமல், பொலிஸ் ஸ்டேஷன் இருந்த பகுதிக்கு விரைந்தது. ஸ்டேஷன் வாசலில் நின்றது.

"குட்மார்னிங் இன்ஸ்பெக்டர்."

"குட்மார்னிங்.... இப்போது எப்படியிருக்கிறது அரவிந்த் சார்?"

"இம்ப்ரூவிங்."

"விக்ரம் பிடிவாதக்காரனாயிருக்கிறான். எவ்வளவு அடி வாங்கியும் இன்னமும் உண்மையை ஒப்புக்கொள்ளவில்லை."

"அதுபற்றிப் பேசத்தான் வந்தேன் இன்ஸ்பெக்டர்... விக்ரம் பேரில் கொடுக்கப்பட்ட கம்ப்ளெயின்டை வாபஸ் வாங்க வந்திருக்கிறேன் நான்."

"வாபஸா? என்ன சார் சொல்கிறீர்கள் நீங்கள்?"

"லெட்டர் எப்படி எழுதித்தரவேண்டும்? ஏதாவது ரிஜிஸ்தர் கையெழுத்துப்போட வேண்டுமா?"

**வி**க்ரமை வெளியே அழைத்து வருகையில் அவன் தோளில் கைபோட்டு அணைத்தான், அரவிந்த். விக்ரம் உதறி விலகினான்.

"விக்ரம், ப்ராமீஸாக நான் உன் பேரில் புகார் கொடுக்கவில்லை. நீ என் நெருங்கிய நண்பன். நேற்றும்-இன்றும்- என்றும். ஜ்யோதிதான் அவசரப்பட்டு..."

"பேசாதே. எல்லாம் நாடகம். என்னை எவ்வளவு அவமானப்படுத்த முடியுமோ, அவ்வளவு அவமானம் செய்தாயிற்று... திருப்திதானே?"

"விக்ரம், நீ என்னை புரிந்து கொள்ளவே மாட்டாயா?"

"நன்றாகப் புரிந்து கொண்டு விட்டேன். ஆனால் ஒன்று அரவிந்த். நீ இந்தியாவின் எந்த மூலைக்குப் போனாலும், நீ அவமானப்படுத்தியதை மறக்க மாட்டேன். உன்னை சும்மா விடமாட்டேன்."

"விக்ரம்... நீ என்னை..."

"ஐ ஹேட் யூ! கெட்லாஸ்ட்."

விக்ரம் விருட்டென்று அவனிடமிருந்து விலகி நடந்தான். அரவிந்த் தோள்களைக் குலுக்கிக்கொண்டு பைக்கை நிமிர்த்தி ஹெல்மெட் அணிந்தான்.

●●●

**"வெ**ல்கம்...வெல்கம்..." என்று முகத்தில் உற்சாகம் காட்டாமல் வரவேற்றார் ஹேம்நாத்.

"உன் முகம் நன்றாகத் தேறி விட்டது அரவிந்த்."

"தேங்க் யூ சார். அமைச்சர் என்னைப் பார்க்க விரும்புவதாக ஃபோன் பண்ணினீங்களாமே!"

"ஆமாம் ஃப்ரீயாகத்தான் இருக்கிறார். ஒன் மினிட்" இண்டர்காமில் பேசிவிட்டு, அரவிந்த்தை உள்ளே அனுப்பினார் ஹேம்நாத்.

"வாய்யா பைலட்டு!"

பிரகாஷ் குப்தா சிரிப்பை அகலமாக்கிக் காட்டினார்.

"மூஞ்சி நன்றாக மாறி விட்டதே உனக்கு."

"சிறந்த டாக்டர்கள் கவனித்துக் கொள்கிறார்கள், சார்"

"முழுசாய் ஆறு வாரமாகி விட்டது நீ எனக்கு பிளேன் ஓட்டி. இப்போது ஓட்டுபவன் 'தொம்' என்று இறக்குகிறான். தொபீர் என்று கிளப்புகிறான். அரவிந்த் மாதிரி இல்லை."

"விருப்பப்பட்டால் நான் நாளையிலிருந்தே வேலைக்கு வருகிறேன் சார். நடுவில் அவ்வப்போது லீவு போட வேண்டிவரும்."

"அடுத்த மாதம் முக்கியமான தேதி வருகிறது, தெரியுமா? தமிழ் நாட்டில் ஒடக்கரை என்ற ஊரில் இளைஞர் முகாம் திறந்து வைக்க ஒப்புக் கொண்டிருக்கிறேன். ஒருத்தன் கத்தி எடுத்துக் குத்தக்கூட வந்தானே, ஞாபகமிருக்கிறதா? அந்த ஊருக்குப் போகும்போது நீதான் என்னுடன் வர வேண்டும்... ஹேம்நாத்திடம் கரெக்ட்டான தேதி கேட்டுக்கொள். டாக்டரிடம் போகும் நாட்களுடன் மோதாமல் இருக்கிறதா பார்த்துக்கொள்!"

"சரி சார்"

"மதுரை வரைக்கும் பிளேன்... அங்கிருந்து ஹெலிக்கொப்டர்."

"ஓ.கே.சார்!"

"உடம்பைக் கவனித்துக்கொள். கேரளாவில் மருந்துத் தைலம் போட்ட எண்ணெய் கிடைக்கும். டாக்டரிடம் சொல்லிவிட்டு வாங்கி யூஸ் பண்ணு. முகம் பளபளவென்றாகி விடும்."

"தேங்க் யூ சார்" அரவிந்த் எழுந்து வெளியே வந்தான்.

□□□

**தே**வேந்திரன் அந்த நீளமான டெலஸ்கோப்பில் ரைஃபிளை மடியில் கிடத்தினான். அதைச்சுத்தம் செய்து எண்ணெயிட்டு குழந்தையைத் தொட்டிலில் கிடத்துவது போல் அதற்குரிய பெட்டியில் வலிக்காமல் வைத்தான்.

இதற்கு உபயோகம் இருக்கும் என்று தெரியவில்ல.

மாற்று எண்ணம் தோன்றி துப்பாக்கியை வெளியே எடுத்து அதன் டெலஸ்கோப்பில் ஒற்றைக் கண் பதித்துப் பார்த்தான்.

பாதுகாப்பு அமைச்சர் தொழிற்சாலையைத் திறக்கும் நாள் அறிவிக்கப்

**சுபா**

பட்டு விட்ட அவசரத்துடன் ஒடக்கரையில் வேலை மும்முரமாயிருந்தது. கான்க்ரீட் மெஷின் இடைவிடாமல் தலைசுற்றிக் கொண்டிருக்க, எறும்புப் படைபோல கூலியாட்கள் செங்கல்லும், சிமெண்டும் சுமந்து பரபரத்துக் கொண்டிருந்தார்கள். பிரமாண்டமான கட்டட வேலை மும்முரமாயிருந்தது.

டெலஸ்கோப்பின் பார்வையில் இப்போது ஒரு ஜீப் நுழைந்தது. அவன் இருந்த பகுதியின் அருகே வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய மோகனனை அவனுக்குத் தெரியும். அமைச்சரின் செக்யூரிட்டி சீஃப்.

"தேவேந்திரன் என்பவரை நான் பார்க்க வேண்டும்!" என்று மோகனன் அங்கிருந்தவரிடம் விசாரிப்பது உதட்டசைவிலிருந்து புரிந்தது.

தேவேந்திரன் விறைத்தான்.

(○—வரும்—○)

---

# கவியரசுவின் சுயசரிதை

## 37

கவியரசு கண்ணதாசன் எழுதிய—அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டிகள்' இவை....

**அ**வன் வீட்டிற்குச் சென்று ஒய்வெடுத்துக்கொண்டு, சரியாக ஐந்து மணிக்கு அந்த வீட்டருகில் வந்தான். அங்கு ஏற்கனவே ஒரு சிறிய காரில் அண்ணாதுரை வந்து வீட்டைத் தேடிக்கொண்டிருப்பதைக் கண்டான். உடனே காரை விட்டிறங்கி ஒடிச்சென்று அண்ணாதுரையை வீட்டிற்குள் அழைத்து வந்தான்.



சுமார் ஏழு மணிக்கு சம்பத்தும் அண்ணாதுரையும் சந்தித்தார்கள். திரு.ஏ.கோவிந்தசாமியும் அவனும் கூட இருந்தார்கள். பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாயின. நடந்து போன விவகாரங்களைக் கிளப்பாமல் இனி எப்படி நடந்து கொள்வது என்பது பற்றியே அவர்கள் பேச விரும்பினார்கள். நேர்முகச் சந்திப்பில் அவர்கள் மிகவும் கவலையோடு காணப்பட்டார்கள். சிறு வயது முதலே நெருங்கிப் பழகிய பழக்கத்தின் பாசத்தால் அன்று மிகவும் அதிகமாகவே பேசினார்கள். இறுதியில் இருவரும் சேர்ந்து ஓர் அறிக்கை விடுவதென்று முடிவாயிற்று.

அந்த அறிக்கையில் செயற்குழுவில் நடந்த வன்முறைகளுக்காக தான் வருந்துவதாக அண்ணாதுரை குறிப்பிட வேண்டும் என்று சம்பத் கேட்டுக்கொண்டார். முதலில் யோசித்த அண்ணாதுரை பிறகு அதனை ஒப்புக்கொண்டு அவ்வாறே அறிக்கை எழுதினார். பத்திரிகை நிருபர்களுக்கு அந்த அறிக்கை தரப்பட்டது.

அன்று இரவே நாகர்கோயிலில் ஒரு கூட்டத்திற்கு அண்ணாதுரை போகவேண்டி இருந்தது. அவன் தன்னுடைய காரைக் கொடுத்து அவரை அனுப்பிவைத்தான்.

'சம்பத்தை அண்ணாதுரையோடு சேர்த்து விட்டோம்' என்பதால் சலனமற்ற அமைதியொன்று அவன் நெஞ்சில் நிலவியது.

அந்த ஒருவார காலத்தில் அன்று அவன் நிம்மதியாகத் தூங்கினான்.

காலைப் பத்திரிகைகளில் 'அண்ணாதுரை-சம்பத் அறிக்கை' வெளிவந்தது. பிற பத்திரிகைகளில் வெளிவந்த அறிக்கை, கருணாநிதியின் முரசொலியில் மட்டும் வெளிவரவில்லை. இந்த சமாதானத்தில் தனக்கு விருப்பமில்லையென்பதை அவர் அப்படிக் காட்டிக்கொண்டார். அறிக்கையைக் கண்ணுற்ற கழகத்து நடிகர்கள் நாகர்கோயிலில் இருந்த அண்ணாதுரைக்கு ஒரு தந்தி கொடுத்தார்கள்.

ஏற்கனவே செயற்குழுவில் நடந்த வன்முறையில் நடிகர்களும் பங்குகொண்டதாக சம்பத் கூறியிருந்தார். ஆகவே வன்முறையைக் கண்டித்து அறிக்கையில் இருந்த வாசகம் தங்களைக் காட்டிக்கொடுப்பதாகவும், தாங்களும் வன்முறையில் ஈடுபட்டதாக அண்ணாதுரையே ஒப்புக்கொள்வதுபோல் இருக்கிறதென்றும் அது தங்கள் மனதைப் புண்படுத்துவதாகவும் நடிகர்கள் தங்கள் தந்தியில் குறிப்பிட்டிருந்தார்கள்.

அடங்கிவிட்டதாக அவன் கருதிய நெருப்பு-மீண்டும் புகையைத் தொடங்கிற்று!

இந்தப் புகையை மீண்டும் மீண்டும் கிளப்பியதில் கருணாநிதிக்குப் பெரும் பங்குண்டு. தந்தியைப் பார்த்த அண்ணாதுரை குழப்பமடைந்தார். குழப்பமே அவரது மனோ தர்மம்; ஆகையால் நடிகர்களை எப்படிச் சமாதானம் செய்வது என்று தெரியாமல் திண்டாடினார்.

அவர் சென்னைக்குத் திரும்பியதும் நடிகர்களும் மதுரைப் பயில்வான்களும் அவரிடம் படையெடுத்த தங்களை வன்முறையாளர்கள் என்றதற்கு அண்ணாதுரை வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்றும் இல்லையென்றால் தாங்கள் கட்சியைவிட்டே ஒடிவிடுவதாகவும் பயமுறுத்தினார்கள். அன்று சகல குழப்பங்களுக்கும் தாய் போல் இருந்த அண்ணாதுரை, அவர்களுக்காகப் பரிந்து வேறோர் அறிக்கை வெளியிட்டார். அதன் விளைவாக கட்சியின் உள் தகராறு தனது பழைய ஸ்தானத்தை மீண்டும் பிடித்துக்கொண்டது.

சம்பத் வீட்டில் அவனும் மற்றவர்களும் இதுபற்றிக் கலந்து பேசினார்கள். 'நிலையான புத்தியில்லாதவர்களின் எந்த வாக்குறுதியை மதித்து நடப்பது? வரட்டும் பார்க்கலாம்!" என்றார் சம்பத். கட்சி வேலைகள் ஸ்தம்பித்து நின்றன. இரண்டு குழுவினரும் ஒருவரையொருவர் காணும்போது பகைவர்களாகவே பாவித்து நடந்தனர். அவன் மீண்டும் எரிச்சலுக்கு ஆளானான்.

தங்கள் சொந்த வாழ்க்கைக்காக அரசியலிலே புகுந்த நடிகர்கள் அரசியல் வாதிகளையே ஆட்டிப் படைப்பதை அவன் வெறுத்தான். ஏற்கனவே நடிகர்கள் பெயரால் ஏராளமான மன்றங்கள் தோன்றிக் கட்சிக் கிளைகளுக்கு இல்லாத செல்வாக்கை அவை பெற்றுக்கொண்டு இருந்ததில் அவன் ஆத்திரமடைந்திருந்தான்.

கட்சிக்கு நெருக்கடி வரும்போது கட்சியைவிட்டு ஒடிவிடக் கூடிய நடிகர்கள், தங்கள் தொழிலுக்கு கட்சியைப் பயன்படுத்துவதை அவன் அவ்வப்பொழுது எதிர்த்தும் வந்திருந்தான். ஆகவே இந்தத் தடவை கட்சியில் நடிகர்களுக்குள்ள செல்வாக்கை கடுமையாகக் கண்டிக்க அவன் விரும்பினான். விளைவுகளைப் பற்றி அவன் கவலைப்படவில்லை. அவர்களை எதிரிகளாகவே பாவித்தான்.

அடுத்த வார 'தென்றல்' இதழில் ஒரு கற்பனை நாட்டையும் கற்பனைக் காட்சியையும் படைத்து அந்த நடிகர்களைக் கேலி செய்திருந்தான். அதன் தலைப்பு 'பாவ மன்னிப்பு' என்பதாகும்.

(சரிதம் தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com




**ப**ஞ்சலிங்கத்தார் திண்ணையில் உட்கார்ந்து 'பெற்றோமேக்'ஸை எரிப்பதற்குப் பகீரதப்பிரயத்தனம் செய்துகொண்டிருந்தார். அது புகையை விழுங்கி வெளியே தள்ளுகிறதேயன்றி எரிந்தபாடில்லை. இதை வெகு நேரமாகப் பார்த்துக்கொண்டிருந்த அவர் மனைவி மங்கம்மா முகத்தில் எரிச்சல் பரவியது.

"என்னப்பா! நானுந்தான் எத்தன முற சொல்லுறது. அதக் கொஞ்சம் றிப்பெயர் பண்ணுங்க எண்டு. தெரியாத வேலயில ஏன் மினக்கிடுறீங்க?" மங்கம்மாவின் கடுகடுப்பு, வார்த்தைகளில் தெறித்தது.

பஞ்சலிங்கத்தாருக்குக் கோபம் பொத்துக்கொண்டுவந்ததை அந்த இருட்டில் மங்கம்மா காணவில்லை.

சாறனைச் சரி செய்துவிட்டுச் சரேலென்று எழும்பிய பஞ்சலிங்கத்தார், இடறி விழுந்து, இராசதுரை விதானையார் வீட்டுக்குச் சென்றார். அங்கும் இருள் அப்பிக் கிடந்தது.

விதானையாரும் பெற்றோமேக்ஸ் லாம்புடன் போராட்டம் நடத்திக் கொண்டிருப்பதைக் கண்டு, வந்த சுவடு தெரியாமல் திரும்பிவிட்டார்.

பஞ்சலிங்கத்தாருக்கு வாழ்க்கையே. வெறுத்தது போலிருந்தது. 'இதுக்கு ஒரு முடிவு கட்டத்தான் வேண்டும்!' என்று எண்ணினார். குப்பிலாம்பைக் கொழுத்திக் கொண்டு வந்த மங்கம்மா, "சாப்பிடுறதில்லையா?" என்ற கேள்வியுடன் பீங்கானை நீட்டினாள்.

"கொய் மீன் கறி, கவனமாச் சாப்பிடுங்கப்பா!" என்று அன்பாக உபசரித்தாள்.

பஞ்சலிங்கத்தாருக்குக் கோபம் உச்சியில் அடித்தது. "இஞ்சபார்.... கடைசிமுறையாச் சொல்றன்- கறண்ட் வருமட்டும் முள்ளுமீன் ஆக்காதே.!"

மங்கம்மாவால் சிரிப்பை அடக்க முடியவில்லை. அந்த மங்கிய வெளிச்சத்தில் மனைவியின் பல் வரிசையின் அழகை இரசித்த அவர், "என்ன சிரிப்பு? ராவிருட்டில, முள்ளுப் பொறுத்துத் தொலைச்சா என்ன செய்யிறது?" என்று உறுமினார்.

"என்னப்பா... நானா மாக்கற் போறன்? நீங்க வாங்கி வாறதத்தானே நான் சமைக்கிறன்!" பதிலைக் கேட்ட பஞ்சலிங்கத்தார் கடகடவென்று சிரித்தார்.

சாப்பிட்டு முடித்த பஞ்சலிங்கத்தார் முகத்தில் திடீரென்று மகிழ்ச்சி பரவியதை குப்பிலாம்பு வெளிச்சம் காட்டியது.

"இப்பிடி ஒவ்வொரு நாளும் அவதிப்பட ஏலா. நான் ஒரு ஜெனறேற்றர் வாங்கிறதா முடிவு பண்ணிற்றன். நம்மட றோட்டில சனம் எப்பவோ வாங்கிற்றுதுகள்." ஆச்சரியமடைந்த அவர் மனைவி, "ஐயோ- பணத்துக்கு என்ன செய்யிறதாம்?" அவள் கேள்வியில் விருப்பம் தொனிக்கவில்லை.

**ரூபராணி**

"எங்கயும் பாத்துக் காசு பிரட்டுறதான். மயில்வாகனம் போடியாரிட்ட கொஞ்சக் காசு கேக்கப்போறன்."

"கன காசு வருமே...?" மங்கம்மா வாயைப் பிளந்தாள். "அந்த மனிசன் அறா வட்டி எடுக்கிற தெண்டது தெரியாதா?"

"அப்ப ஒண்டு செய். உன்ர நகைய அடவு வச்சி எடுத்தா என்ன?" ஆவலுடன் கேட்டார் பஞ்சலிங்கத்தார்.

"நகையென்ன நகை...? இந்தக் கொடி ஒண்டுதான் மிச்சம்." மங்கம்மா தன் கழுத்திலிருந்த தாலிக்கொடியைத் தூக்கிக் காட்டினாள். "இருட்டுக்க கிடந்தாலும் இதநான் தரமாட்டன்!" உறுதியாகக் கூறிவிட்டு, இருவரும் படுக்கச்சென்றனர்.

பஞ்சலிங்கத்தாருக்குத் தூக்கம் தொலைந்துவிட்டது. ஜெனறேற்றரின் நினைவில் புரண்டார். பொழுது விடிந்தது. மங்கம்மாவிடம் சொல்லாமல் புறப்பட்டுச் சென்றார்.

மதியமாகியும் பஞ்சலிங்கத்தார் வீடு வராததை எண்ணிய மங்கம்மா தன் கணவன் மயில்வாகனம் போடியாரிடம்தான் போயிருக்கவேணும் என்று நிச்சயப்படுத்திக் கொண்டாள்.

மழை வரும்போல் தெரிந்தது. கொடியில் காயப்போட்ட உடும்புக்களை அள்ளிக் கொண்டு உள்ளே போக வந்த மங்கம்மா வாசலில் கார்ச் சத்தம் கேட்டு நிமிர்ந்தாள்.

பஞ்சலிங்கத்தாரும் கார் ட்றைவரும் ஒரு பெட்டியைச் சுமந்து உள்ளே வந்தனர்.

"மங்கம்மா இஞ்சபார்...! இனி இருட்டு நமக்கில்ல!" சொல்லி விட்டுப் புன்னகைத்தார்.

எப்போது ஆறு மணி ஆகும் என்று ஆவலில், ஜெனறேற்றரை இயக்குவதற்கான ஏற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டார்.

"கறண்ட் வந்திற்றுது. கறண்ட் வந்திற்றுது..." என்று இராசதுரை விதானையார் எதிர் வீட்டிலிருந்து சத்தமாகக் குரல் கொடுத்தார்.

மங்கம்மா ஓடிப்போய் சுவிச்சுகளை ஏக்கத்துடன் தட்டினாள். எங்கும் வெளிச்சம். "கறண்ட் வந்திற்றுது!" மங்கம்மா கவலையுடன் முணுமுணுத்தாள்.

பஞ்சலிங்கத்தாரின் முகத்தில் இருள் பரவியது. ●

**அ**ந்தக் கண்ணாடியின் முன் அமர்ந்த பத்மினி, தன் கைக்குள் பொத்தி வைத்திருந்த சிறிய குங்குமச் சரையை மெதுவாகப் பிரித்து தன் நடு விரலால் குங்குமத்தைத் தொட்டுக் கொண்டாள்.

ஏதோ அவளின் மனச்சாட்சி குற்றமெனக் கூறினாலும், அதைவிட அவளுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களால், ஏற்பட்ட மனோவலிமை அதிகமாக இருந்தது.

ஐந்தாண்டுகளுக்கு முன், அவள் கணவன் இறந்ததன் பின்னர் இப்படியொரு காரியம்! துணிந்தபின் துயரமெதற்கு?

நடுங்கும் அவளின் நடுவிரலால் தன் நெற்றியில் குங்குமத் திலகம் இட்டுக்கொண்டாள்.

கண்ணாடியில் தன் முகத்தை உன்னிப்பாகப் பார்த்தாள் பத்மினி. அவளுக்கே வியப்பாக இருந்தது.

நீண்ட காலங்களுக்குப்பின் அவள் முகத்தில் தோன்றிய பொலிவும், செழிப்பும், பூரிக்க வைத்தது.

ஒரு விதவையின் வாழ்க்கையை ஒரு 'பொட்டு'க்குள் அடக்கும் இந்த சமூகத்தை எண்ணும்போது அவளுக்கு வெறுப்பாக இருந்தது.

தொட்டிலிலே தாயாலே இட்ட பொட்டு. இடையிலே கணவனின் இழப்பாலே அந்தப் பொட்டு மறைய வேண்டும் என்பதில் என்ன நியாயம்?

இப்போதெல்லாம் அவள் மகனின் கல்வி மேம்பாடுதான் முக்கியமாகத் தென்பட்டது.

முன்னால் இருக்கும் கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்துக்கொண்டாள் பத்மினி.

போலி விலங்குகள் நொறுங்குவது அவளுக்குத் தெரிந்தது இப்போது...

பத்மினி- பிறந்து வாழ்ந்த கிராமம்- விடுவிக்கப்பட முன்னர் சுதந்திரமாய் இருந்தது. தன் கணவனை இழந்து வாழ்ந்தாலும் அவள் பெண்மைக்கு அச்சுறுத்தல்கள் இருக்கவில்லை. இந்த நிலையில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரீட்சையில் பத்மினியின் மகன் சித்தியடைந்தும் விட்டான்.

மகனின் திறமையையும், எதிர்காலத்தினையும், சிந்தித்த அவள், சிறப்பான கல்வியைத் தொடர இந்தப் பட்டினத்திற்கு வரவேண்டியிருந்தது.




**கனகசபை தேவகடாட்சம்**

அவளுக்கு ஏற்பட்ட கசப்பான துன்புறுத்தல்களின் காரணங்களை எண்ணினாள். தான் அழகாய் இருப்பது மாத்திரமல்ல. 'கணவனை இழந்தவள்' என்று பொட்டின்றி அடையாளப்படுத்தி வாழ்வதும் ஒரு பெரிய கேடாகவே எண்ணிக் கொண்டாள்.

தன் மகனின் கல்விக்காக வீடு வீடாகச் சென்று- மா இடித்து; கூலி வேலை செய்து பிழைத்தாலும், அவளுக்கான பாதுகாப்பு வேலி ஸ்திரமாய் இப்போது அமைந்திருப்பதை மறுக்கமுடியாது.

மீண்டும் ஒருமுறை தன்முகத்தை கண்ணாடியில் பார்த்துக் கொண்டாள். இதை எண்ணும்போது தனக்குள்ளே சிரித்துக் கொண்டாள்!

"பத்மினி உன் புருஷன் எங்கே?"

"அவர் யாழ்ப்பாணத்தில... அங்கே... அவங்களோட பிரச்சனையில்ல... இருக்கிறார்."

பத்மினியின் இந்தப் பதில்கள்- 'பெரிய மனித' வேடதாரிகளையும், காமுகர்களையும் நெருங்கவிடாது தடுத்து நின்றது. ●

# காதலர் தினம்

**சு.உத்திரன்**

"**அ**திஷ்டக்காரன்டா நீ!" நண்பர்கள் அடிக்கடி கூறுவார்கள். அப்படி என்னதான் அதிஷ்டம் எனக்கு? இரண்டு மச்சாள்கள். அதாவது முறைப்பொண்ணு. என் அப்பாவின் சகோதரி மாமியின் மகள் வைதேகி. மற்றது அம்மாவின் சகோதரமான மாமாவின் மகள் சுகி. இருவருமே சுமாரான அழகிகள்தான். வசதியான குடும்பங்கள். நான் செய்ய வேண்டியதெல்லாம் இருவருள் ஒருத்தியைத் தெரிவு செய்யவேண்டியது மட்டும்தான்.

சுகி கொஞ்சம் மென்மையான சுபாவம் கொண்டவள். "அத்தான்... அத்தான்!" என்று குழைந்து குழைந்து பேசுவாள்.

ஒருநாளைக்கு என்னைக் காணாவிட்டாலும் ஏன்? ஏன்? என்று குடைந்து எடுத்துப் போடுவாள். ஆனால் வைதேகி அப்படியல்ல; இதற்கு முற்றிலும் மாறாக எப்போதுமே என்னோடு முரண்பட்டபடிதான்.

நான் எதைச் சொன்னாலும் எடுத்தெறிஞ்சு பேசுவாள். என்னுடைய குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவதும், கிண்டல் செய்வதும், சண்டைப் பிடிப்பதும்தான் அவள் சுபாவம்.

'வைதேகி ஏனடா வந்தாய்?' என்று கூடக் கேட்கமாட்டாள். ஆனாலும் எனக்கு வைதேகி மீது ஏதோ ஒரு ஈடுபாடு. புரியவில்லை!

அதுக்காக அவளுடைய திமிரை அவளோடையே வைத்திருக்கட்டும், என்ற நினைப்போடு அவளைச் சந்திப்பதையே வெகு நாளாக தவிர்த்தும் வந்தேன். அத்தோடு அவசர முடிவு ஒன்றையும் எடுத்துக் கொண்டேன். 'சுகிதான் என் வருங்கால துணை!' என்று.

பெப்ரவரி மாதம் 14ம் திகதி. 'காதலர் தினம்.' என்னுடைய முடிவை சுகிக்கு தெரியப்படுத்திவிட வேண்டும் என்ற முடிவோடு அவளைச் சந்தித்தபோது, அவள் என் தலையில் அப்படி ஒரு குண்டைப் போடுவாள் என்று கனவிலையும் நினைக் கேல்லை. தான் ஒருவனை காதலிப்பதாயும், அவளுடைய காதலுக்கு உதவி செய்யும்படி என்னையே கேட்ட போது.... நம்பவே முடியவில்லை.

இவளா இப்படி? முகத்தில்... "சரி" என்று- செயற்கையாக ஒரு சந்தோசத்தைக் காட்டிக்கொண்டு திரும்பிவிட்டேன்.

எனக்கு அழுகையே வந்துவிடும் போல் இருந்தது. என்னைப் பார்த்து வைதேகியும் சிரிப்பதைபோல் இருந்தது. "அதிஷ்டக்காரண்டா நீ!" அடிக்கடி வந்து வந்து போய்க்கொண்டு இருந்தது. அப்படியே கட்டிலில் விழுந்து தலையணையில் முகம் புதைத்தேன். அப்போது வைதேகி தந்துவிட்டுப் போனதாக ஒரு கவரை என் கையில் திணித்து விட்டுப்போனான் தம்பி வவா. வேண்டா வெறுப்போடு பிரித்தேன்.

காதலர் தினத்தில் என் மொக்கு மச்சானுக்கு,

உன் மேல் உயிரையே வைத்து இருக்கும் (நீ எதிரி எனக் கருதும்) வைதேகி எழுதிக்கொள்வது.

நீ என்னை தவிர்ப்பதற்கான காரணத்தை இலகுவாகவே புரிந்துகொண்டேன். என்னை எதிரியாகவே நினைத்தால், என்னை- என் செயல்களை மன்னித்துவிடு. அல்லது உன் அன்புக்குரிய காதலியாக நினைத்தால் மீண்டும் வா.... சண்டை போடலாம். பச்சை மரத்தில் பற்றிக் கொள்ளும் தீதான் காதல்! கோபமுள்ள இடத்தில்கூட மோகத்தைத் தூண்டுவது தான் காதல்!

மனசுக்கும் செயலுக்கும் இடையில் முடிச்சுப் போடாதே! நாங்கள் மரணம் வரையில் சண்டை போடுவோம் வா...! அதில் கூட ஏதோ ஒரு சுகம் உண்டு. புரியவில்லையா உனக்கு..?" கடிதம் என் கையில் படபடத்தது. என் இதயமும் தான்.

எனக்குள் உறங்கிக்கொண்டு இருந்த ஏதோ ஓர் உணர்வு தட்டி எழுப்பப்பட்டது. இப்போது புரிந்தது-நான் அவளோடு சண்டை போட்டது கூட அவளை அதிகமாக நேசித்ததினால்தானோ? துள்ளி எழுந்தேன். "அதிஷ்டக் காரண்டா நீ!" வந்து போனது. என்னைக் கை விடாத காதலர் தினமே நீ வாழ்க!



**ரா**ஜியைப் பெண்பார்க்க வருகிறார்கள் என்பது தெரிந்ததும் அவள் அம்மா அம்புஜம் ஓடியே வந்தாள் சாரதாவிடம்.

"சாரதா.... இன்னைக்கு எங்க ராஜியைப் பெண் பார்க்க வராங்க... சிரமம் பார்க்காம கொஞ்சம் நீ வந்து உதவ முடியுமா?" என்று கேட்டாள் அவள்.

"ராஜி என் ஃபிரண்ட்... அவளைப் பெண் பார்க்க வர்ரப்போ நான் வந்து உதவி செய்யாம இருப்பேனா!" என்று புறப்பட்டு விட்டாள் சாரதா.

இந்த ராஜியைப் பெண்பார்க்கிறபோதுதான் என்றில்லை; தெருவில் யார் வீட்டில் பெண் பார்க்க வந்தாலும் சாரதாவைத் தேடி வந்துவிடுவார்கள்.

சாரதாவுக்கு அப்பா இல்லை. அம்மா மட்டும்தான். ஜீவனம்- சமைத்துப் போடுவது, உதவிகள் செய்து கொடுப்பது போன்ற வீட்டு வேலைகளைச் செய்து சம்பாதிப்பதுதான்.

**சி**றிது நேரத்தில் சாரதா வீட்டுக்கு வந்தாள்.




"ராஜியை அவளைப் பார்க்க வந்த பிள்ளைக்குப் பிடிச்சுடுச்சா சாரதா?" என்று அம்மா கேட்டாள்.

"பிடிச்சிடுச்சம்மா!" என்றாள் சாரதா.

"நம்ம தெருவிலே இருக்கிற கன்னிப் பெண்கள் எல்லாம் சுமாராதான் இருப்பாங்க. அதனாலே அவங்களைப் பெண்பார்க்க வர்ரவங்க 'பொண்ணு அழகாயில்லை'ன்னு சொல்லிட்டுப் போய்க்கொண்டிருந்தாங்க.

ஒருநாள் தற்செயலாகப் பக்கத்து வீட்டுப் பெண்ணை மாப்பிள்ளை வீட்டார் பார்க்க வந்தப்போ, நீ அந்தப்பொண்ணோட இருந்தா சாரதா. உன் கறுப்பு நிறம், எடுப்பான பல்லு, குள்ளமான உருவமெல்லாம் பக்கத்திலேயிருந்த சுமாரான பெண்ணை அழகாக் காட்டி மாப்பிள்ளைக்கு அவளைப் பிடிக்க வைச்சிட்டுது. அதனாலே எல்லோரும் உன்னைக் கூட்டிண்டு போயி அவங்க அவங்கப் பொண்ணுகளுக்குக் கிட்ட உட்காரவச்சு, தங்கள் பெண்கள் கல்யாணத்தை முடிக்க ஆரம்பிச்சுட்டாங்க. உனக்கு எப்பத்தான் கல்யாணமாகப் போறதோ?" என்றாள் அம்மா அழுதபடி.

"எனக்குக் கல்யாணமாகாட்டா என்னம்மா? பரவாயில்லை. என்னாலே மத்தப் பெண்களுக்கு கல்யாணமாகிறது இல்லையா? அதுபோதும் எனக்கு!" என்றாள் சாரதா. ■




**வே**லையெல்லாம் முடித்துக்கொண்டு, கையைத் துடைத்தபடி கீழே இறங்கிவந்து, வெளிக்கதவில் பொருத்தப்பட்டிருக்கும் தபால் பெட்டியைத் திறந்து, ஏதேனும் கடிதங்கள் வந்திருக்கிறதா என்று பார்த்தேன். உள்நாட்டுக் கடிதம் ஒன்று கண்ணில்பட்டது. பரபரப்புடன் அதை எடுத்துப் பார்த்தேன். எதிர்பார்த்தபடி என் மகள் சுமதிதான் எழுதியிருந்தாள்.

என்னைத் தன் ஊருக்கு வந்து ஆறு மாதங்கள் தங்கியிருந்து விட்டுப் போகும்படி எழுதியிருந்தாள். அதைப் படித்ததும் எனக்கு ஆகாயத்தில் பறப்பதுபோல் இருந்தது. சுந்தர் வந்ததும் சொல்லிவிட வேண்டும். இங்கு இவன், குழந்தையைப் பார்த்துக்கொண்டு, அதற்கு மூன்று வேளையும் சாப்பிடக்கொடுத்து, ஆயா போல் அலம்பிவிட்டு ஒன்றரை வருஷமாக நான் படும் கஷ்டம்... அப்பப்பா!

சுமதி வீட்டிற்குப் போனால் இந்தக் கஷ்டமெல்லாம் இல்லை. இந்த மாதிரி புறாக் கூண்டு வீடில்லை. எதற்கெடுத்தாலும் படியிறங்கிவரவேண்டாம். வீட்டிற்கு முன்பு பெரிய இடம், பூஞ்செடி, புல்தரை, காலாற நடக்கலாம். நினைக்கும் போதே சந்தோஷமாக இருந்தது. ஆறு ஏழு மாதங்கள் ஹாயாக இருக்கலாம்.

★★★

**சு**மதி வீடு அடையாளமே மாறியிருந்தது. தோட்டம் அழகாக அலங்கரிக்கப்பட்டு, தோரணம், பலூன் எல்லாம் காற்றில் ஆடின. வியப்புடன் உள்ளே நுழைந்த என்னை சுமதி அன்புடன் வரவேற்றாள்.

"என்ன சுமதி இதெல்லாம்? என்ன விசேஷம் இன்னிக்கு?" என்றேன்.

"இவர் ஆபீஸ் போனா திரும்ப எட்டு மணியாயிடுதும்மா. என் மாமியாரும் போனப்புறம் எனக்குத் தனியாக இருக்கப் பிடிக்கலை அதான்." என்றவளை இடைமறித்து, "நான் தான் வந்துட்டேனே, கவலைப்படாதே!" என்றேன் பெருமையாய்.

"வீட்டுல தனியா போரடிச்சிக்கிட்டு உக்காந்திருக்கமே, இந்தப் பகுதியில எல்லோரும் வேலைக்குப் போறவங்க. குழந்தைகளைப் பார்த்துக்க ஆளில்லாம தவிக்கிறாங்க. குழந்தைகள் காப்பகம் ஒண்ணு நடத்தினா, பொழுதும் போகும்; பணமும் வரும். தோட்டத்திலயும் நிறைய இடமிருக்கு. வீட்ல இருந்தாப்புல நல்ல வேலை." சற்று நிறுத்திவிட்டு மீண்டும் தொடர்ந்தாள். ஒரு நம்பிக்கையான நல்ல ஆயா. கெடைக்கிறவரைக்கும் ஒரு ஆறு மாசம் உன்னை வரவழைச்சு வெச்சுக்கலாம்னு நினைச்சுத்தான் உனக்குக் கடிதம் போட்டேன். இன்னிக்குத்தான் திறப்பு விழா. நாளையில இருந்து குழந்தைகள் வருவார்கள். அந்த ரூமுக்குள்ளே போய்ப் பாரேன்- அவங்களுக்காக எத்தனை விளையாட்டுச் சாமான்கள், பொம்மைகள்னு..." நிறுத்தாமல் சுமதி பேசிக் கொண்டே போக எனக்குத் தலை சுற்றத் தொடங்கியது. ●



படிப்பகம்

# இலக்கிய நயம்

பால் போல் நிலவு
பசுந்தரையாய்
ஆற்று மணல்!
மேல் வந்து மோதும்
காற்று!

காதலியுடன்
களித்திருக்க போதும்
இவை!

அவள்தான் இல்லையே
எங்குதான்
போய் விட்டாள்?

"என்னவளே!
நீ இல்லாதபோது
நிலவு வந்து சுடுகிறதே!

நீ இல்லாதபோது
தென்றல் வந்து
எரிக்கிறதே!

நீ இல்லாதபோது
ஆற்று மணலும்
நெருப்பாய் தகிக்கிறதே!

நீ இல்லாதபோது
வானத்தின் நீலமும்
விஷமாய் தெரிகிறதே!"

அவன் மனம்
ஓலமிட்டது!

"அடர்ந்த குவிந்த
தனங்கள் எழுந்து
மலைகளாக
நின்று முறைக்க
படர்ந்த கூந்தல்
பூவைச் சுமக்க,
வண்டுகள் துரத்தி
பூவில் நின்றாட,
தந்தன தந்தன
நடை நடந்து
பின்குடம் குலுங்க
வருபவளே-அடி
எங்கே போனாய்
என்னவளே?"

'வருகிறாளா?
கண்மணி வருகிறாளா?'
விழிகளை முந்திக்கொண்டு
மனம் ஓடித் தேடியது.

மாதம் ஒன்றாகியது
மாதவள் முகம் பார்த்து!
மறுபடி முகம் காண
மாதவம் செய்து நின்றான்!

"நீ இல்லாத மனம்
நிலவில்லாத
வானம் போல
இருண்டு கிடக்கிறது!"

கண்ணே!
காணவில்லை உன்னை.
என் கண்கள்
தேடித்தேடி வாடி விட்டன!

என் மனம்
அக்கினிக் குஞ்சாகியது!

என் மனதை
காட்டிடை வைத்தால்
காடும் தீப்பற்றும்!

என் மனதை
கடலினில் போட்டால்
வெப்பம் தாளாது
கடலும் வற்றிவிடும்!

இரும்பும் உருகிவிடும்
கல்லும் கரைந்துவிடும்
என் மனம் முன்னாலே!

இனியும் தாங்காது
நானே தீப்பற்ற முன்னர்
மானே வந்துவிடு
குமுதவாயினால்
அமுதம் தந்துவிடு!

கரும்புவில் எடுத்து
காமன் கணை தொடுத்து
அரும்பு இதழ் குவித்து
விரும்பும் வரை கொடுத்து
எந்தன் தீ நிறுத்து!"

மனம் என்னவெல்லாம்
நினைக்கிறது!

இந்த மனதுக்கு
வெட்கமுமில்லை!
விவஸ்தையுமில்லை!

எதை மறக்க
நினைக்கிறோமோ
அதைத்தான்
மறுபடி மறுபடி
நினைக்கும்!

கிட்டாதாயினும்
வெட்டிவிட மறுக்கும்
எட்டாதாயினும்
எட்டிவிடத் துடிக்கும்!

காதலிக்க முன்னர்
மனம்
அவனுக்கு மட்டுமே
சொந்தமாக இருந்தது!

காதலித்த பின்னர்
மனம்
அவள் வசமாகிவிட்டது!

மனம் முழுக்க
அவள் ஆக்கிரமிப்பு!

மறப்பது எப்படி
நினைவுகளை
துறப்பது எப்படி?

காதலர்களின்
மனம் ஒரு குழந்தை!



பிரியமானவரிடம்
தாவிப் போய்விடும்!
திரும்ப வராது
அடம் பிடிக்கும்!

பிரிவைத் தாங்காது
புரண்டு அழும்!

பரிவை மட்டுமே
நாடி எழும்!

காதலர்களின்
மனம் ஒரு குழந்தை!

அவன் மனதும்
குழந்தைதான்!

அவள் வரவேண்டும்
தொட்டிலில்
போட்டு தாலாட்ட!

அவள் வரவேண்டும்
முத்தத்தால்
முத்துக் குளிக்க வைக்க!

அவள் வரவேண்டும்
மடியில்
இடம் தரவேண்டும்!

காற்றும் கூட
வீச மறக்கலாம்!
அலைகள் கூட
ஓய்ந்து போகலாம்!
நினைவுகள் மறக்காது
மனம் நினைப்பது
ஓயாது!

அவள் வரும்வரை
அவன் மனதும்
அமைதியடையாது!

"மார்போடு அணைத்தாள்
மடிமீது சாய்த்தாள்
பாலோடு நீர் போல
கலந்திருந்து பிரிந்ததுக்கு
யாரோடு நான் நோக?

ஆசை தீரவில்லை
ஆசைக்கு அளவுமில்லை.

உயிர் போகும் வரை
உன்ன மறப்பதில்லை!"

அவன் வாய்விட்டே
கூறத் தொடங்கினான்!

அது ஏக்கம்
முற்றிய நிலை!

அவள் வரவில்லை
தாமதமான
ஒவ்வொரு நாளும்
அவன்
தன்னை மறந்து
கொண்டிருந்தான்!

தன்னை மறந்தவனுக்கு
சுற்றமா
நினைவில் இருக்கும்?

உண்ண மறந்தான்
உறங்க மறுத்தான்!
அழுக்கையே உடுத்தான்
அழகுணர்ச்சி விடுத்தான்!

அவள் வருவாளா?
அவனது
மனக் குழந்தை
அழுதது!

அவள் வருவாளா?
மனக் குழந்தை
மடி தேடியது!

அவள் வரவில்லை,
அவன் சோகம் ஆறானது!

ஒவ்வொரு பெண்ணையும்
உற்றுப் பார்த்தான்!
'அவளாக இருக்குமோ?'

திருவிழா நெரிசலில்
தாயைப் பிரிந்த
குழந்தையைப் போல
எதிர்ப்படும் பெண்களில்
தன்னவளை தேடினான்!

கத்தரிக்காய் முற்றினால்
கடைக்கு வரும்!
காதல் முற்றினாலும்
தெருவுக்கு வரும்!

'காதல் பைத்தியம்'
என்று
ஊர் கூடி
நகைத்தது!

அவன் என்ன
தேரா?
ஊர் கூடி இழுத்தால்
அப்பக்கம் செல்வதற்கு?

யார் என்ன
நகைத்தாலும்
தன் பாதையில்
நடந்தான்!

'முட்பாதையானாலும்
அவள் முகம் காணும்வரை
முன்னேதான் செல்வேன்!'
என்ற முடிவிலிருந்தான்.

அவன் மனதில்
ஓரத்தில் மட்டும்
காதல்மீது
ஒரு சிறு வருத்தம்!

'ஏ! காதலே!
எனக்குள் இருந்தால்
ஊர் அறியாது
என்றுதானே
தெருவில் இறங்கி
உன் உருவைக்
காட்டினாய்?
ஊரெல்லாம் அறிந்து
கூவுகிறது பார்த்தாயா?

காதலே! காதலே!
காதலர்களை
இப்படி சோதிப்பதும்
ஊருக்கு அறிவிப்பதும்
உனக்கு
கைவந்த கலைதான்!

"அறிகிலார் எல்லாரும் என்றே என் காமம்
மறுகின் மறுகும் மருண்டு!"

அதிகாரம்: 114 குறள்:1139

## அவள் வருவாளா?

துருவத்து ரசிகன்

(ஸ்போர்ட்ஸ்)

## இன்ப அதிர்ச்சி

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள பாகிஸ்தான் அணி, பிரசிடென்ட் போர்ட் லெவன் அணியுடன் சமீபத்தில் 3 நாள் போட்டியில் விளையாடியது. அப்போட்டியின் போது, பாகிஸ்தான் அணியின் மனேஜரும் முன்னாள் அதிரடி வீரருமான ஜாவெட் மியாண்டாட் இரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சி கொடுத்தார்.



திடீரென்று பாகிஸ்தான் அணி வீரர் ஒருவருக்காக மைதானத்தில் மாற்று ஆட்டக்காரராக இறங்கி அரைமணி நேரம் ஃபீல்டிங் செய்தார்.

இதுவரை நடந்துள்ள 6 உலகக் கோப்பை போட்டிகளிலும் விளையாடியுள்ள ஒரே வீரர் என்ற பெருமைக்குரியவர் மியாண்டாட். பாகிஸ்தான் அணிக்கு மைதானத்தில் பயிற்சியளிக்கும் போது, தானும் மைதானத்தில் இறங்கி உடற்பயிற்சி செய்கிறார்.

40 வயதாகும் இவர், இன்னும் நல்ல உடற்கட்டுடன் இருக்கிறார். இத்தருணத்தில் இவர் பாகிஸ்தான் அணிக்காக ஃபீல்டிங் செய்ய வந்தது, இன்னும் 3 மாதங்களில் நடைபெறும் உலகக் கோப்பைப் போட்டியில் கலந்து கொள்வதற்கான அறிகுறியோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இதுபற்றி மியாண்டாட் கூறும்போது,

"உண்மையில் அப்படி எதுவுமில்லை. ஓய்வில் இருந்த மாற்றுவீரர்கள் ஊரைச் சுற்றிப் பார்க்கச் சென்று விட்டார்கள். அவர்கள் திரும்பி வரும் வரையில் ஃபீல்டிங் செய்தேன். நல்ல உடல் திறனுடன் நான் இருந்தாலும், மீண்டும் கிரிக்கெட் விளையாட வருவது கஷ்டம்," என்று தெரிவித்தார்.

## கும்ப்ளேக்கு பரிசுகள்

பாகிஸ்தான் அணிக்கு எதிராக ஒரே இன்னிங்ஸில் 10 விக்கெட்டுக்களை வீழ்த்தி சாதனை படைத்திருக்கும் இந்திய சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ப்ளேக்கு பரிசுகள் குவிந்து கொண்டிருக்கின்றன.

இதற்கும் மேலாக அவருக்கு அவரது மாநிலத்தின் தலைநகரான பெங்களூர் நகர பொலிஸ்- 'விசேட பொலிஸ் அதிகாரி' என்றொரு வித்தியாசமான பரிசை வழங்கியுள்ளது.

இவரது சாதனையைப் பாராட்டும் வகையில் சந்தன மரத்தினால் செய்யப்பட்ட பொலிஸ் லத்தி பரிசளிக்கப்பட்டு, இந்தக் கௌரவ பதவி வழங்கப்பட்டது. அத்துடன் இந்திய மதிப்பில் ஒரு இலட்சம் ரூபாயும் பரிசாக வழங்கப்பட்டது.

அனில் கும்ப்ளேக்கு வழங்கப்பட்டுள்ள இந்த 'விசேட பொலிஸ் அதிகாரி' (SPECIAL POLICE OFFICER) விருது ஒரு பொலிஸ் கமிஷனரின் அந்தஸ்திற்கு உரியதாகும்.

## அக்ரம் சாதனை

பாகிஸ்தான் அணி சார்பாக டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தி சாதனை புரிந்துள்ளார்- பாகிஸ்தான் அணியின் கேப்டன் வாஸிம் அக்ரம். இவர் இந்தியாவுடனான 2வது டெஸ்ட் போட்டியில் தனது 263வது விக்கெட்டைச் சாய்த்து இந்தச் சாதனையைப் புரிந்தார்.

இதற்கு முன் பாகிஸ்தான் சார்பாக அதிக விக்கெட்டுக்களைச் சாய்த்த வீரர் என்ற சாதனைக்குரியவர் முன்னாள் பாகிஸ்தான் கேப்டன் இம்ரான்கான். இவர் 262 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார்.

"சர்வதேச அளவில் அதிக புகழ் பெற வேண்டுமானால் அதிக வேகப்பந்து வீச்சாளர்களை உருவாக்க வேண்டும்!" என்று இந்தியாவில் அக்ரம் அளித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார். இவர் மேலும் கூறும்போது,

"வேகப் பந்து வீச்சாளர்களால் மட்டுமே விக்கெட்டுக்களை விரைவாக வீழ்த்த முடியும். அதுவே அணியின் வெற்றிக்கு ஆணிவேராக இருக்கும்!" என்றும் தெரிவித்தார்.

## சிந்தியா பதில்கள்

**★ சமீபத்தில் ரசித்த நகைச்சுவை?**

வி. பிரேம்நாத், மாத்தளை.

*கலைஞர் கருணாநிதி சட்டப் பேரவையில் 1971ல் நகைச்சுவையுடன் அளித்த பதில்களில் சிலவற்றை படிக்கக் கிடைத்தது. அதில் ஒன்று:*

*தி.நா. வீராசாமி: தட்டுங்கள் திறக்கப்படும். கேளுங்கள் கொடுக்கப்படும் என்று இயேசுநாதர் சொன்னார். நாம் மத்திய அரசிடம் 624 கோடி ரூபாய் கேட்டோம். 519 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் கொடுத்து 202 கோடி கொடுத்திருக்கிறார்களே?*

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கேளுங்கள் கொடுக்கப்படும் என்று இயேசுநாதர்தான் சொன்னார். இந்திரா காந்தி சொல்லவில்லையே!*

**★ ஆறுமணி நேரத்தில் வவுனியாவுக்குச் சென்று வரக்கூடியதாக 'இண்டர் சிட்டி' ரயில் விடப்போகிறார்களாமே?**

ஆ. விஜயகுமார், கொழும்பு-9.

*ஆறுமாதமாகியும் கொழும்பு வர அனுமதி கிடைக்காதவர்களுக்கு 'பாஸ்' கிடைக்குமா? போக்குவரத்து உரிமையை மறுத்துக் கொண்டு, விசேட போக்குவரத்து ரயில் விடுவதால் பயன் இல்லை!*

❋❖

**★ யாழ் குடாநாட்டில் கண்ணி வெடிகளை அகற்றுவதற்கும் தாமதம் காட்டப்படுகிறதே?**

எம். பாரூக், மொரட்டுவ.

*யாழ் குடாநாட்டில் தமிழர்கள்தான் வசித்து வருகிறார்கள். அவர்கள் தங்கள் வாக்குகளைப் பெரும்பான்மை இனக் கட்சிகளுக்கு போடவா போகிறார்கள்?*

❋❖

**★ தேர்தல் சீர்திருத்தம் பயன் தருமா?**

பி. சுந்தரலிங்கம், கொழும்பு-6.

*தற்போதைக்கு சாத்தியமில்லை. தவிர தேர்தல் முறைக்கும், முறைகேடுகளுக்கும் சம்பந்தமில்லை. அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து முறைகேடு நடத்த நினைத்தால், எத்தகைய தேர்தல் முறையிலும் புகுந்து விளையாடலாம். முறைகேட்டை மறைக்க முறையைப் பற்றி பேசுகிறார்கள்-அவ்வளவே!*

❋❖

**★ விருந்துகளில் மூக்கு முட்டப் பிடிப்பது நல்லதா?**

ஏ. சியாமளா, கண்டி.

*உடல் நலத்துக்கும் நல்லதல்ல; உங்களைப் பார்ப்பவர்களும் 'சாப்பாட்டு ராமி' (ராமனுக்கு எதிர்ப்பால்) என்று பெயர் வைத்துவிடுவார்கள்.*

*ஒரு விருந்துபசாரத்திற்கு கணவன்-மனைவி சென்றிருந்தனர். கணவர் ஐந்தாவது முறையாக ஐஸ்கிரீம் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.*

*மனைவிக்குப் பொறுக்க முடியாத எரிச்சல், "இப்படி ஐந்து முறை சாப்பிட்டால் என்ன நினைப்பார்கள்? உங்களுக்கு வெட்கமாக இல்லையா?" என்று கேட்டார்.*

*அதற்கு கணவர் கூறினார்: "எனக்கு ஏன் வெட்கம்? உனக்கு என்று கூறித்தானே எடுத்து வருகிறேன்!"*

❋❖

**★ மொழி மாற்றுப் படங்கள் தமிழில் அதிகமாகிவிட்டனவே. ஏன்?**

கா. மணி, கொழும்பு-15.

*தயாரிப்புச் செலவு மிச்சம்! ஓடாவிட்டாலும் கையைக்கடிக்காது! மொழிமாற்றுப் படங்களிலும் சில படங்கள் அசல் தமிழ்ப் படங்களைவிட எவ்வளவோ மேல்! உதாரணம்:'உண்மை'.*

❋❖

**★ சிந்தியா! சோனியா காந்தி எந்த மதத்தவர்?**

ம. நித்தியகல்யாணி,

*மதமா முக்கியம்? ஆனால் காங்கிரஸ் கூறுவது யாதெனில், "ராஜீவை மணந்து கொண்டதால் சோனியா இந்துவாகிவிட்டார்!" என்று. 'இந்தியராகிவிட்டார்' என்று காங்கிரஸ் கூறியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.*

*காங்கிரஸ் வாதப்படி தமிழக சஞ்சிகை ஒன்று கிளப்பிய கேள்விகளைப் பாருங்கள்:*

*1. ராஜீவை மணந்து கொண்டதால் சோனியா இந்துவாகிவிட்டார் என்றால், ரொபர்ட் வதேராவை மணந்துகொண்ட ப்ரியங்கா என்னவாகிறார்? இந்துவா? கிறிஸ்தவரா?*

*2. அதேபோல, பெரோஸ் காந்தியை மணந்துகொண்ட இந்திரா பார்சியாகிவிட மாட்டாரா?*

*3. அப்பாவும் பார்சி இனத்தவர், அம்மாவும் பார்சி இனத்தவர் என்றால் ராஜீவ் காந்தியும் பார்சியாகத்தானே முடியும்? அதனால் சோனியாவும் பார்சியாகத்தானே வேண்டும்? எப்படி இந்துவாக முடியும்?*

*இவ்வாறு கேள்விகளை அடுக்கியுள்ளது அந்த சஞ்சிகை.*

❋❖

**★ 'இண்டர் நெட்' மூலம் தமிழை வளர்ப்பது பற்றி கலைஞர் கூறியுள்ளாரே? பார்த்தீரா?**

இ. பேரின்பன், திருமலை.

*முதலில் அவரது குடும்ப நிறுவனமான 'சன் ரி.வி.' யில் ஆங்கிலத்தில் தமிழை கலப்படம் செய்வதை நிறுத்தட்டும். வேண்டுமானால் தமிழில் கொஞ்சூண்டு ஆங்கிலத்தை எப்போதாவது கலக்கட்டும்!*

❋❖




**★ முதுகில் குத்துவது, முகஸ்துதி, இந்த இரண்டில் ஆபத்தானது எது?**

இ. தையல்நாயகி, பதுளை.

*முதுகில் குத்தப்பட்டால்கூட சில சமயம் தப்பிவிடலாம்! முகஸ்துதிக்கு மயங்கினால் மீளவே முடியாது.*

*ரோம் மன்னர் ஜூலியஸ் சீசரை, நகர சபைக் கட்டடத்தில் வைத்து தீர்த்துக் கட்ட திட்டம் தீட்டினார்கள்.*

*நேரமோ மாலையாகிக் கொண்டிருந்தது. சீசர் வருவாரா மாட்டாரா என்று எதிரிகளுக்குச் சந்தேகம். எதிரிகளில் ஒருவனான 'டெஸியஸ்' சீசரை சந்திக்கச் சென்றான்.*

*நேராகச் சீசரிடம் சென்று: "பிரபு! புகழுக்கு அடிமையாகாத புரவலர் நீங்கள்தான்!" என்றான்.*

*சீசரும் "ஆமாம்" என்று புன்னகை செய்தார்.*

*"பிரபு! மாவீரனான தங்களை எதிர்க்க சுண்டெலி போன்ற உங்கள் எதிரிகள் சதி செய்கிறார்களாம். அது நடக்குமா? அவர்களுக்குப் பயந்து நீங்கள் இன்று நகரசபைக் கூட்டத்துக்குப் போகவில்லையாம். நீங்களாவது பயப்படுவதாவது.....!" என்று கூறினான்.*

*வஞ்சகப் புகழ்ச்சியில் மயங்கிய சீசர் ராஜ நடையுடன் நகரசபைக் கூட்டத்துக்குச் சென்றார். திட்டமிட்டபடி அவரைத் தீர்த்துக் கட்டினார்கள்!*

❋❖

**★ சிந்தியா! டாக்டர்கள் மீது உமக்கென்ன கோபம்? ஜோக்கடிக்கிறீரே?**

செல்வி எஸ். விசாலினி, மன்னார்.

*சேச்சே... நான் எங்கே ஜோக்கடிக்கிறேன். எங்காவது படித்ததை அவ்வப்போது எடுத்து விடுகிறேன். இதோ இன்று ஒரு தமாஷ்.*

*ஒரு தாதி வேகமாக டாக்டரிடம் ஓடி வந்து, "டாக்டர், டாக்டர்! இப்போது நீங்கள் பரிசோதித்து, 'உடல் நிலை சரியாக இருக்கிறது' என்று கூறி அனுப்பினீர்களே, அந்த மனிதர் நம் வாசலில் சுருண்டு விழுந்து கிடக்கிறார். இறந்து போய்விட்டார்...." என்றாள்.*

*அதற்கு டாக்டர்: "அவர் நமது மருத்துவமனைக்கு வரும்போதுதான் இறந்து விட்டார் என்று தோன்றும்படி, அவருடைய உடலை திருப்பி வையுங்கள். அப்போதுதான் அதைப் பார்க்கும் மற்றவர்கள்: 'அடடே ஒரு நிமிஷம் முன்னதாக வந்திருந்தால் பிழைத்திருப்பாரே' என்று நினைப்பார்கள்!" என்றார் உஷாராக!*

❋❖

**★ தொலைக் காட்சித் தொடர்களில் தங்களை மிகவும் கவர்ந்திழுக்கும் நாடகம் மூன்றைக் கூறுங்கள்?**

மா. ஆனந்தி, தெஹிவளை.

*சக்தி, ஜன்னல், மர்மதேசம்!*

❋❖

**★ இந்தியாவில் கிறிஸ்தவ மதகுரு கொல்லப்பட்டது உட்பட மதவாதம் தலைவிரித்தாடுகிறதே?**

ஜெ. சர்வானந்தன், மட்டக்களப்பு.

*இந்தியா மதவாதிகளால் இரத்தம் சிந்திக்கொண்டிருக்கிறது.*

❋❖

**★ சிந்தியா! நான் ரம்பாவுக்கு கடிதம் போட்டால் பதில் போடுவாரா?**

எஸ்.எஸ்., கண்டி.

*கடிதம் படிக்கவே அவருக்கு நேரமிருக்காதே!*

❋❖

**★ ஆசியக் கிண்ண டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி வெல்லுமா?**

மீ.லெ. ஹனீபா, மட்டக்களப்பு.

*கஷ்டம்!*

❋❖

**★ ஜெயசூர்யா எப்போது ஆடத் தொடங்குவார்?**

கே. வித்யா, நீர்கொழும்பு.

*உலகக் கிண்ணப் போட்டிக்குத் தயாராக இருப்பார்.*

❋❖

www.padippakam.com


# திருமறை தரும் பொது நெறி 49

## இறைவனளித்த வாக்குப் பலித்தது

ஆண்டவருடைய கருத்து என்ன என்பதை அறிந்து அதனை மக்களிடமும் மன்னரிடமும் கூறிவந்த எரேமியாவுக்குப் போதுமான ஆதரவு இருக்கவில்லை. எரேமியா கூறுவது உண்மை என்பது பலதடவைகள் நிருபணமாகியிருந்தது. இருப்பினும் மக்களும் மன்னரும் எரேமியா கூறியபடி நடக்கவில்லை. மாறாக அவருக்குப் பலவிதமான தண்டனைகளே வழங்கப்பட்டன. பைத்தியக்காரன் என்ற பட்டமும் சூட்டப்பட்டது.

மன்னர் செதேக்கியா, எரேமியாவின் கூற்றிலுள்ள உண்மையை, அனுபவரீதியாக நன்கு அறிந்திருந்தார். இருப்பினும் அவரைச் சுற்றியிருந்த பலருடைய கருத்துக்களுக்கு அவர் மதிப்பளிக்க நேரிடுவதால், எரேமியாவின் சொற்படி கேட்க முடியாத நிலையிலிருந்தார்.

பாபிலோனிய மன்னர், நெபுகத்நேசர், யூதாவைத் தன் ஆட்சிக்கு உட்படுத்தியமை, ஆண்டவருடைய விருப்பத்துக்குட்பட்டதே என்பதை எரேமியா மன்னரிடம் கூறினார். நெபுகத்நேசரின் ஆட்சியை ஏற்று- அவர் சொற்படி நடந்தால், மன்னருக்கு மட்டுமல்ல, நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நன்மை பயக்கும் என்ற கருத்தை எரேமியா மூலம் கர்த்தர் தெரிவித்திருந்தார். தன்னுடைய கட்டளைகளுக்குக் கீழ்படிந்து நடக்காத யூதா மக்களையும் இஸ்ரயேலரையும் தண்டிக்கவே ஆண்டவர் பாபிலோனியர் மூலம் பாடம் புகட்ட முற்பட்டார். மக்களும் மன்னரும் பொய்வாக்குரைத்த வேடதாரிகளின் கருத்துக்கு மதிப்பளித்தனர்.



பாழுங்கிணறொன்றிலிருந்து எபேது மேலேக்கு என்ற அதிகாரியால் மீட்கப்பட்டிருந்த எரேமியாவை மன்னர் செதேக்கியா தன்னிடம் அழைத்துவரும்படி கூறினார். அப்போதும் ஆண்டவர் தன்னிடம் தெரிவித்த அதே கருத்துக்களையே எரேமியா கூறினார். மீண்டும் எரேமியாவைக் காவலில் வைக்கும்படி கட்டளையிட்டார் மன்னர்.

### வாக்குப் பலித்தது

எரேமியாவின் வார்த்தைகள் பொய்க்கவில்லை. நெபுகத்நேசர் பெரும்படையுடன் மீண்டும் எருசலேமுக்குள் புகுந்தார். செதேக்கியா ஆட்சி பீடமேறிய ஒன்பதாம் ஆண்டு பத்தாம் மாதத்தில் இத்தாக்குதல் இடம்பெற்றது.

எருசலேமில் ஏற்கனவே நடைபெற்ற படையெடுப்புக்களில் சிதைவுற்றிருந்த பகுதிகள் பல மீண்டும் புனரமைக்கப்பட்டிருந்தன. இறைவன் இல்லத்திலும் அவ்வாறே திருத்த வேலைகள் நடைபெற்றிருந்தன. ஆனால் இப்போது நடைபெற்ற தாக்குதலினால் ஏற்பட்ட அழிவுகள் மேலும் அதிகமாகியிருந்தன. பாபிலோனியப் படைகள் நகருக்குள் வருவதற்கு முன்னர் சிலகாலம், அப்படைகள் நகரை முற்றுகை இட்டிருந்தன.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய மன்னர் செதேக்கியாவும் அதிகாரிகளும் தப்பியோடத் திட்டமிட்டனர். மன்னரைப் பொறுத்தவரை- அப்போதும்- எரேமியாவின் மூலம் பெற்ற இறைவாக்கினை உணரவே செய்தார். இருப்பினும் சுற்றியிருந்த அதிகாரிகளும் ஏனையோரும், பாபிலோனியப் படைகளிடம் பிடிபடுவதோ அல்லது சரணடைவதோ நல்லதல்ல என்றும் கூறி மன்னரின் மனத்தைக் குழப்பினர்.

இதனால் அரச குடும்பத்தாருடன் நாட்டை விட்டுத் தப்பிச்செல்ல, உடன் பட்டார். அரண்மனை அருகே பூங்காவுடன் ஒட்டியதாக இருந்த இரகசிய வழியூடாக அரசரும் குடும்பத்தினரும் சில பிரதானிகளும், இரவில் எவருக்கும் தெரியாமல் அரபாவை நோக்கிப் புறப்பட்டனர்.

மன்னரும் குழுவினரும் தப்பியோடுகின்றனர் என்ற தகவல் பாபிலோனியப் படையினருக்கு எப்படியோ கிடைத்துவிட்டது. மன்னரைத் துரத்திச் சென்று எரிக்கோவில் பிடித்துக் கொண்டனர். அப்போது நெபுகத்நேசர் ஆமாத்து நாட்டிலுள்ள ரிப்லா என்ற இடத்தில் இருந்தார். கைது செய்யப்பட்டவர்களைப் படையினர் மன்னரிடம் அழைத்துச் சென்றனர்.

ஆரம்பத்தில் நெபுகத்நேசர், எருசலேமைப் பிடித்திருந்த போதிலும், யூதா அரச வம்சத்தவரான செதேக்கியாவையே ஆட்சி பீடத்தில் அமர்த்தியிருந்தார். ஆனால் மன்னர் செதேக்கியா, பாபிலோனிய மன்னருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்கவில்லை. அடிக்கடி கலகம் விளைவித்தார். இதனால் நெபுகத்நேசர், செதேக்கியாமீது கடும் கோபம் கொண்டவராமிருந்தார். ஆகவே மன்னர் செதேக்கியாவுக்கு எத்தகைய தயவுதாட்சணியமுமின்றித் தண்டனை வழங்கவே காத்திருந்தார். தன் முன்னால் கைதியாக நின்ற மன்னரையும் குடும்பத்தினரையும் யூதா நாட்டுத் தலைவர்களையும் ஒழித்துக்கட்டவே தீர்மானித்தார்.

செதேக்கியாவின் குமாரர்கள் மன்னரின் முன்னிலையில் கொண்டுவரப்பட்டனர். தந்தையான செதேக்கியாவின் கண்ணெதிரில் அவர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர். செதேக்கியா பலத்த சப்தமிட்டு அழுதார். இறைவாக்கினரான எரேமியா கூறிய கருத்துக்களை நடைமுறைப்படுத்தாமல் விட்டமைக்கு இறைவன் தனக்களித்த தண்டனையே இதுவெனக் கூறி அழுதார்.

மன்னரின் கண்களைக் காவலர்கள் பிடுங்கினர். விலங்கிடப்பட்ட நிலையில் பாபிலோனுக்கு அவர் இழுத்துச் செல்லப்பட்டார். பாபிலோனியப் படைகளிடம் சரணடைந்தவர்கள் அனைவரும் பாபிலோனுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

### எரேமியா விடுதலை

யூதாவில் ஏழைகளும் விவசாயிகளும் திராட்சைத் தோட்டப் பராமரிப்பாளர்களும் தங்கியிருப்பதற்கு பாபிலோனியர்களால் விடப்பட்டிருந்தனர்.

நெபுகடத்நேசர், எரேமியாமீது பற்றுதல் வைத்திருந்தார். தன்னுடைய மெய்காப்பாளர் படைத் தளபதி நெபுசரதானை அழைத்து, எரேமியாவைக் கண்டுபிடித்து அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்யுமாறு பணித்தார். அவரும் எரேமியாவைப் பல இடங்களிலும் தேடிக்கண்டுபிடிக்குமாறு பல ஏவலாளர்களை அனுப்பினார். இறுதியில் பாபிலோனுக்கு அழைத்துச் செல்லப்படவிருந்தவர்கள் மத்தியில் எரேமியாவும் கைதாகி இருப்பதைக் கண்டு அவரை உடனே விடுவித்தனர். நெபுசரதான் எரேமியாவுக்கு உணவு, உடை ஆகியவற்றைத் தந்து ஆசுவாசப்படுத்தினார்.

எரேமியா கூறிய வார்த்தைகள் எதுவும் பொய்க்கவில்லை என்பதை நெபுசரதான் அறிந்திருந்தார். எரேமியாவிடம்- அவர் எங்கே செல்ல விரும்புகிறாரோ, அங்கே அவர் செல்லலாம்; அவருக்கு அவருடைய தேவைகளைக் கவனிக்க ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்- என்று வாக்களித்தார்.

எரேமியா எருசலேமில் எஞ்சியிருக்கும் தன் மக்களுடனேயே வாழவிரும்பினார். பாபிலோன் மன்னர், எருசலேமில் எஞ்சியிருக்கும் யூதாமக்களின் நலனைப் பாதுகாக்க கெதலியாவை ஆளுநராக நியமித்திருந்தார்.

பாபிலோனியப் படைகளுக்கு அஞ்சி அயலிலுள்ள இடங்களுக்குச் சென்று தலைமறைவாகியிருந்த யூதா மக்கள், கெதலியா ஆளுநராகப் பொறுப்பேற்றிருப்பதை அறிந்து வெளி வந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் யூதாவின் படை அதிகாரிகள். கெதரியாவை இவர்கள் வந்து கண்டனர். பாபிலோன் மன்னருக்கு விசுவாசமாக நடப்பதற்கு உறுதி பூணும் எவருக்கும் எத்தீங்கும் ஏற்படாது என்று கெதலியா வாக்களித்தார். அதேபோல் எருசலேமுக்குள் வந்துசேர்ந்த மக்களனைவருக்கும் அமைதியாக வாழ்வதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

இதற்கிடையில் யூதா அரச குலத்தைச் சேர்ந்தவனும் அரச உயர் அதிகாரியாகவிருந்த எலிசாமாவின் பேரனுமான இஸ்மயேல் என்பவன், கெதலியா எருசலேமில் ஆளுநராகப் பதவிவகுப்பதை அறிந்தான். ஏற்கனவே பலதடவைகள் இஸ்ரயேலுக்கும் யூதாவுக்கும் எதிராகப் போர் தொடுத்து தோல்விகளையும் வெற்றிகளையும் கண்டு வந்த அம்மோனியரின் தூண்டுதலினால் இஸ்மயேல், கெதலியாவைக் கொல்லத் திட்டமிட்டான். இஸ்மயேலின் திட்டம் பற்றி கெதலியாவுக்கு முன்னதாகவே தெரிந்துவிட்டது. இருப்பினும் தன்னிடம் இத்தகவல்களைக் கூறியவர்கள் பொய் கூறுகிறார்கள் என்று நினைத்துவிட்டான்.

இராஜகுமாரன்

கெதலியா பதவியேற்ற ஏழாவது மாதத்தில் ஒருநாள், மிஸ்பா எனும் இடத்தில் உண வருந்திக் கொண்டிருந்த வேளையில், இஸ்மயேல் தனது பத்து சகாக்களுடன் வந்தான். கெதலியாவையும் அவனுடனிருந்த அதிகாரிகளையும் பாபிலோனியப் படைவீரர்கள் பலரையும் வெட்டிக் கொன்றான். அவர்களுடைய சடலங்களை எவரும் காணாதவாறு ஒரு நிலவறையுள் போட்டு மூடிவிட்டனர். மன்னர் செதேக்கியாவின் குமாரத்திகளையும் அரச குடும்பப் பெண்களையும் எருசலேமிலிருந்த ஏனைய மக்களையும், இஸ்மயேல் கைதுசெய்து தன்னுடன், அழைத்துக் கொண்டு அம்மோனியாவுக்குப் புறப்பட்டான்.

இஸ்மயேல் செய்த கொடுமைகளைப்பற்றி அறிந்த யோகனான் என்பவன், படை ஒன்றைத் திரட்டிக்கொண்டு இஸ்மயேலைத் துரத்திச் சென்றான். கிபயோன் என்ற இடத்திலிருந்த ஓர் ஏரியின் அருகே இஸ்மயேலையும் அவனால் கடத்திச் செல்லப்பட்டவர்களையும் யோகனான் கண்டான். யோகனானை மக்கள் கண்டதும் அவர்களனைவரும் இஸ்மயேலை விட்டுவிட்டு ஓடிவந்து யோகனானுடன் சேர்ந்து கொண்டனர். இஸ்மயேல் தன்னுடைய சில தோழர்களுடன் தப்பி ஓடி அம்மோனிய நாட்டுக்குச் சென்றான்.

யோகனானிடம் வந்து சேர்ந்தவர்களுக்கு மீண்டும் யூதாவுக்குத் திரும்ப அச்சமாகவிருந்தது. பாபிலோனிய அரசனால் ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்த கெதலியா கொல்லப்பட்டமைக்கு நெபுகத்நேசர் தம்மீது பழி போட்டு தண்டிக்கக்கூடும் என்ற பயம் அவர்களை ஆட்டிப்படைத்தது. அப்போது அம்மக்கள் கூட்டத்தில் ஒருவராக இருந்த இறைவாக்கினரான எரேமியா வெளிப்பட்டார்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை (47) விடை** — நெபுகத்நேசர்

**பரிசு பெறுவோர்:**

1. செல்வன்-எஸ்.ஏ.முகமட் சதாத். பிரதான வீதி, ஹுஸைனியா புரம், பாலாவி, புத்தளம்.
2. சரவணன் கிருஷாந்தன், 131 ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.
3. செல்வி ச.சுந்தரேஸ்வரி, ஆதவன் மைதான வீதி, தம்பிலுவில்–01.
4. எஸ். பாலகுமார், இல.31/14, ரேஸ்கோஸ், நுவரெலியா.
5. அ.அமலராஜன், 4ம் ஒழுங்கை, கல்லடி, மட்டக்களப்பு.

**திருமறை 49 வினா:-** நெபுகத்நேசரால் ஆளுநராக நியமிக்கப்பட்டவர் யார்?

பெப். 27க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 49 – தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

---

## பயோடேட்டா

| | |
|---|---|
| பெயர் | :யாழ் உள்ளூராட்சிசபை உறுப்பினர்கள்! |
| தொழில் | :இராணுவ நிர்வாகத்திற்கு வெள்ளையடிப்பது! |
| பொழுதுபோக்கு | :எப்போதாவது சபைக் கூட்டங்கள் நடத்துவது! |
| ரசிப்பது | :புள்ளடிகள்! |
| வெறுப்பது | :புல்லட்டுக்கள்! |
| மறந்தது | :வாக்குறுதிகளை! |
| எதிரிகள் | :புலிகள் |
| எரிச்சல் | :மிரட்டல் கடிதங்கள்! |
| சாதனை | :பதவியில் இருப்பது! |
| சோதனை | :புலிகளின் குறியில் இருப்பது! |
| இலட்சியம் | :எதிலும் அலட்சியம்! எதையும் அலட்சியம்! |



காதிலை பூ கந்தசாமியார் அரசியல் தமாஷ் மட்டும்தான் தருவாரா? என்று கேள்விக் கணை தொடுத்தனர் சில வாசகர்கள். ரோசம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது.




தமாசு எப்படி? ஹி... ஹி... ஹி... காதில் பெரிய பெரிய பூ. இது நம்ம சரக்கல்ல, கத்தரித்தது.

## கிளின்ரனின் சந்தேகம்




**கிளி:** ஹலோ! வாஜ்பேயா பேசறது? எப்படி சுகமாக இருக்கிறீர்களா? உங்களிடம் ஒரு முக்கியமான கேள்வி கேட்க வேண்டுமே.

**வாஜ்:** கேளுங்கள் மிஸ்டர் கிளின்ரன். கூட்டணிக் கட்சிக்காரர்கள் தினம் தினம் ஏதாவது கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள். நானும் பதில் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறேன். உங்கள் ஒருவருக்கு பதில் சொல்வதா கஷ்டம்?

**கிளி:** கேட்பதற்கு கூச்சமாக இருக்கிறது.

**வாஜ்:** கூச்சமா? உங்களுக்கா? மற்றவர்களுக்கு கூச்சம்காட்டித்தானே உங்களுக்குப் பழக்கம்.

**கிளி:** கிண்டல் பண்ணாதீர்கள் மிஸ்டர் வாஜ்போய். கேட்கட்டுமா?

**வாஜ்:** கேளுங்கள். (தொலைபேசி மணியடிக்கும் சத்தம்) பொறுங்கள் மிஸ்டர் கிளின்ரன். தயவு செய்து லைனில் இருங்கள்! (சில நிமிடம் கரைகிறது) மன்னியுங்கள். ஒரு லைனில் ஜெயலலிதா, இன்னொருலைனில் மம்தா. சமாளித்து விட்டு வருகிறேன். சோனியா வேறு ஆட்சியை கவிழ்ப்பேன் என்று மிரட்டிக் கொண்டிருக்கிறார்.

**கிளி:** சம்சாரிகளால்கூட மூன்று பெண்களை சமாளிக்க முடியாதே! நீங்கள் பிரமச்சாரியாச்சே!

**வாஜ்:** அது கிடக்கட்டும். நீங்கள் ஏதோ கேட்க வேண்டும் என்றீர்களே? கேளுங்கள்!

**கிளி:** இல்லை மிஸ்டர் வாஜ்பேய், என்னால் ஒரு பெண்ணையே சமாளிக்க முடியவில்லையே, நீங்கள் எப்படி மூன்று பெண்களை...?

(டொக்! வாஜ்போய் அந்த இரகசியத்தை கூற விரும்பாமல் தொலைபேசியை வைத்துவிடுகிறார்.)




## பேச்சாளர் பேரம்பலம்



நாங்கள் தேர்தல் நேரத்தில் உங்களைத் தாக்கினோமா, வன்முறையில் ஈடுபட்டோமா என்பது எமக்கே தெரியாது என்று நாம் கூறுவதால், நாம் நிதானமில்லாமல் நடந்து கொண்டோம் என்று நினைக்கக்கூடாது. எமது சந்தேகத்தை போக்க, நாமே ஒரு கமிட்டி அமைத்து ஆராயப்போகிறோம்.

காதிலை பூ கந்தசாமி

அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11
436331

# லபக்



← பாம்புகளுக்குப் பற்கள் இருந்த போதிலும் அவை அவற்றுக்கான இரையை மென்று விழுங்குவதில்லை.

'பாம்பு கடித்துவிட்டது' என்று கூறுவார்கள். அவை கடிப்பதில்லை. தனக்குத் தீங்கு செய்ய வருபவர் என்று நம்பினால், அவரைக் கொத்துகிறது.

பல்லின் அடியில் பொதிந்துள்ள விஷம் கொத்தப்பட்டவரின் உடலில் பாய்ந்து இரத்தத்துடன் கலந்துவிடுகிறது. கொத்தப்பட்டவர் இறந்துவிடுகிறார்.

பாம்புகளின் வாய் சாதாரணமாகச் சின்னதாகவேதான் காணப்படும். ஆனால் அதன் வாயைவிட உருவத்தில் மிகப் பெரிய பிராணியையும் பிடித்து விழுங்கி விடுகிறது.

பாம்பின் தலையில் உள்ள சில சவ்வுகள் பொருத்துக்களில் பிரிந்து உருவில் பெரிய பிராணியை பாம்பு விழுங்க உதவிகின்றன.

வாயின் பாகங்களும் போதுமான அளவு விரிவடைகின்றன.

வாயின் வழியாகப் பாம்பின் உடலுக்குள் இரை மெதுவாகச் செல்லும்போது உடலிலுள்ள தசைகளும் விரிந்து கொடுக்கின்றன. தொண்டை வழியாக இரை உள்ளே போனதும் தலையும் வாயும் முன்போல் ஆகிவிடுகின்றன.

→ படத்தில் இரையை கவ்வியுள்ள பாம்பை இந்தியாவில்-தமிழ் நாட்டில் சங்கிலிக் கறுப்பன்' என்று கூறுவார்கள். கொடிய விஷம் உடையதுதான். தனக்கான இரையை அணுகியதும் அதனைக் கொத்தி உயிரைப் பறிக்கவோ அல்லது மயக்கமடையவோ வைத்துவிடுகிறது. அதன் பின்னரே விழுங்க ஆரம்பிக்கிறது.

இரையைப் பிடித்தவுடன் இப்பாம்பால் எதுவுமே செய்ய முடியாது. மிக மெதுவாக ஊர்ந்து சென்று எங்காவது புதரில் மறைந்துவிடுகிறது.

பிடிபட்ட பிராணியின் உடல் பாம்பின் உடலினுள் சுரக்கப்படும் பலவகைத் திரவங்களால் சீரணித்து விடுகிறது. இதற்குச் சில நாட்கள் கூடப்பிடிக்கலாம். அதுவரை எங்காவது ஒளிந்து கொண்டே இருக்கும்.

'சங்கிலிக்கறுப்பனின் வால்பகுதியிலுள்ள செதில்கள் சலசல ஒலியினை எழுப்புவதுண்டு. தன்னைத் தாக்கி அழித்தொழிக்க வரும் எதிரிக்கு அச்சமூட்டவே இத்தகைய ஒலியை எழுப்புகிறது.

பாம்பென்றால் படையும் நடுங்குவதில் அர்த்தம் இருக்கத்தான் செய்கிறது.

சங்கிலிக் கருப்பன்
பிடித்திருக்கும் இந்தப் பிடியைப் பார்த்தால்
எந்தக் கொம்பனும் நமக்கேன் வம்பு
என்று ஒதுங்கித்தான்
போகவேண்டும்!

ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
5 செட்டியார் தெரு, கொழும்பு 11
323657

# சீறல்



↑ உலகிலேயே மிகமிக வேகமாக ஓடக் கூடிய மோட்டார் கார் ஒன்றை பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்று அறிமுகப்படுத்திமிருக்கிறது. இதன் விலையும் சற்று அதிகம்தான்.

மக்லாரென் FI 6.1 என்றழைக்கப்படும் இவ்வண்டி புறப்பட்டு 3.2 நொடிப் பொழுதில் 95.6 கிலோமீட்டர் (60 மைல்) வேகத்தைத் தொட்டுவிடும். இதன் வேகம் 370 கிலோ மீட்டர் (230 மைல்) வரை அதிகரிக்கும் சாத்தியம் இருக்கிறது.

இதன் இன்றைய விலை 634 இலட்சத்து 500 பவுண் என்று நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இலங்கை நாணயப் படி ரூபா 7கோடியே 10 இலட்சத்து 64 ஆயிரம். என்ன பிரமிப்பாக இருக்கிறதா? உலக சாதனை வேகத்துக்கு ஏற்ற விலை தானே!

அமெரிக்காவில் 1922ம் ஆண்டு 'ரெட் பக் பக்போட்' என்ற கார்தான் மிக மலிவாக விற்கப்பட்டது என்று கூறப்படுகிறது. இதன் விலை ஆக 125 முதல் 150 டொலர்வரை விற்பனை செய்யப்பட்டது. இக்காரை விஸ்கொன்சின் மாநில-மில்வாக்கி லிலுள்ள 'பிரிக்ஸ் அண்ட் ஸ்ட்ராட்டன் நிறுவனம் உற்பத்தி செய்து விற்பனை செய்தது. ஆகக் குறைந்த விலைக்கு விற்கப்பட்ட காரென்று அதற்கும் உலக சாதனையில் இடமளிக்கப்பட்டுள்ளது.

(1922ம் ஆண்டின் நாணய மதிப்பின்படி பார்த்தால் இது மிக மலிவான விலை தான்)

# வேகம்



↑ விமானப் போக்குவரத்தை நாடுவதற்கான காரணங்களில் ஒன்று விரைவான பயணம். இதனால் ரயிலில் போக்குவரத்து செய்வோர் எண்ணிக்கை குறைந்து வருகிறது. வெளிநாடுகளில் நாடுகளுக்கிடையேயும் ரயில் போக்குவரத்து இருக்கிறது.

விமான வேகத்துக்கு ஈடுகொடுக்கக் கூடிய ரயில்களை உற்பத்தி செய்தால்தான் பயணிகளை கவரலாம். ஆகவே வேகம் கூடிய நவீனரயில்களை தயாரிப்பதில் பல நிறுவனங்கள் போட்டி போடுகின்றன.

ஜப்பான், ஜெர்மன், ஃபிரான்ஸ் போன்ற நாடுகளில் அதிவேக ரயில்கள் தயாரிக்கப்பட்டு சாதனை படைக்கின்றன. ரயில்களது வடிவங்களும் மாறிவிட்டன.

ஃபிரான்ஸ் நாட்டிலுள்ள 'SNCF TGV அட்லாண்டிக்' என்னும் நிறுவனம் 1990ம் ஆண்டு மே 18ம் திகதி அதிவேக ரயில் ஒன்றை அறிமுகம் செய்தது.

இந்த வண்டி மணிக்கு 515.3 கிலோ மீட்டர் (320.2 மைல்) வேகத்தில் ஓடி உலக சாதனையை நிலை நாட்டியது. காற்றைக் கிழித்து சீறிச் செல்ல வசதியாக ரயிலின் முகப்பு இருக்கிறது பாருங்கள்.

TVG அட்லாண்டிக் நிறுவனமும் நோட் சேவை நிறுவனமும் இப்பொழுது 300 கிலோமீட்டர் (186 மைல்) வேகத்தில் பாரிஸ் நகருக்கும் கலாயிஸ் நகருக்குமிடையிலான ரயில்சேவையை நடத்துகின்றனர்.

இந்த வண்டிக்கு 'இயூரோஸ்டார்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஃபிரான்சிலிருந்து பிரிட்டனுக்கும் இடையே இத்தகைய ரயில்கள் ஓடுகின்றன. ஆனால் ஃபிரான்ஸ்' நாட்டின் எல்லையை விட்டு பிரிட்டனுக்குள் நுழைந்ததும் வேகம் சற்றுக் குறைத்தே ஓட்டப்படுகின்றன.

முன்னர் ஓடிய ரயில்களில் 8 பயணப் பெட்டிகள் இணைக்கப்பட்டிருந்தன. இப்போது 10 பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளன. அத்துடன் 8 மோட்டார்களுக்குப் பதிலாக 12 மோட்டார்கள் பொருத்தப்பட்டுள்ளன.




1 வது பிறந்த நாள் வாழ்த்து
மிதாசிகா
13-02-1999

கரவாக்கேணி வாழைச்சேனையைச் சேர்ந்த திரு.திருமதி கிருபாகரன்-கீதா தம்பதியினரின் செல்வப் புதல்வி செல்வி மிதாசிகா தனது முதலாவது பிறந்த நாளை 13.02.1999 அன்று சுவிற்ஸர்லாந்தில் தனது இல்லத்தில் விமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை அப்பா, அம்மா, அம்மம்மா, அம்மப்பா, சுவிஸில் இருக்கும் மாமாமார், இலங்கையில் வசிக்கும் பெரியம்மாமார், பெரியப்பாமார், மாமி, சித்தப்பா, சித்திமார், யாழினி அக்கா, வர்ணியா அக்கா, சவ்யா அக்கா, தானியா அக்கா, அண்ணன்மார்-திரோஷன், தனுஷன், கௌதமன், சதீத், தம்பி அனுஜன், தங்கை யாவன்னியா மற்றும் உற்றார் உறவினர்கள் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்: ச. தம்பிஜயா (அம்மப்பா)

# துடிப்பு



↓ 12 ஆண்டுகளின் பின்னர் இந்திய மண்ணில் பாகிஸ்தான் அணி டெஸ்ட் போட்டிகளில் விளையாடியது.

இரண்டே இரண்டு டெஸ்ட் போட்டிகள். இதில் எப்படியாவது வென்றுவிட வேண்டும் என்று இந்தியா துடிப்பாக இருந்தது.

ஆனால் 1-1 என்ற கணக்கில் வெற்றி தோல்வி யின்றி முடிவடைந்துள்ளது.

சென்னையில் பாகிஸ்தான் வெற்றி பெற்றது. புதுடில்லியில் இந்தியா வென்றது.

சென்னையில் பாகிஸ்தான் அணி வெற்றிக்கு காரணமானவர்களில் ஒருவர் யூசுப் யுகானா. 23 வயதான இந்த வீரர் பாகிஸ்தான் அணியில் நம்பிக்கை நட்சத்திரமாக மாறிவருகிறார்.

→ சென்னை டெஸ்டில் 4 விக்கெட் இழப்புக்கு 83 ஓட்டங்களை எடுத்திருந்த பாகிஸ்தானை யூசுப் யுகானாவும், மொயின்கானும் இணைந்தாடி சரிவிலிருந்து மீட்டனர். யூசுப் 53 ஓட்டங்களும் மொயின்கான் 60 ஓட்டங்களும் எடுத்தனர்.

யூசுப் இந்திய 'ஏ' அணியுடனான ஆட்டத்தில் சதமடித்தார். அவர் குவித்த 124 ஓட்டங்களில் ஒரு சிக்ஸரும், 21 பவுண்டரிகளும் அடக்கம்.